தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

ஐப்பசி - 2025

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

ஐப்பசி - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

ஓவியங்கள்: நன்றி-இணையம்

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா?

ஐப்பசி இதழ்(2025) உங்கள் பார்வைக்கு வருகிறது.

நினைத்தபோது வரும் இதழாக வெளிவந்து (கையைச் சுட்டுக்கொண்டு)இணைய இதழாக(பி டி எப் வடிவிலும்) குறைந்தது 3000 பேருக்காவது மின்னஞ்சலில் அனுப்பியிருப்போம்.பல ஆயிரம் பேரின் பார்வையில் வாசிப்பிற்குட்படுத்தப்பட்டிருக்கலாம்.பல வருடங்களுக்கு முன்னர் டெல்லியில் நடைபெற்ற விழாவொன்றில் அகலத்திரையில் காட்சிப்படுத்தப்பட்டு திரு.சச்சிதானந்தன்(காந்தளகம்) அவர்களால் அறிமுகமும் செய்யப்பட்டிருந்தமையும்,காஞ்சிபுரம் இலக்கியவட்டம் மூலம்(அமரர்.வெ.நாரயணன்) இதழ் அறிமுகம்,இதழ் சார்ந்து பரிசில்களும் இதழில் விரிவாக்கத்திற்கும்,ஆழ வேரூன்றவும் உதவின எனபதும் உண்மையே.எனினும் இன்றுவரை சந்தா,விளம்பரம் என்றதும் ஒதுங்கிப் போகும் மனநிலையில் உள்ளவர்களே அதிகமாய் உள்ளமையும் வருந்தத்தக்கதாக உள்ளது.

ஆயினும் பயணம் தொடரவே உள்ளது.அதற்காக உழைக்கவேண்டியுமுள்ளது.

காற்றுவெளி ஏற்கனவே பல சிறப்பிதழ்களைக் கொண்டுவந்துள்ளது தெரிந்ததே.தை மாதம்(2026) இங்கிலாந்து வாழ் படைப்பாளர்களின் சிறுகதைகள் அடங்கிய சிறப்பிதழையும் வெளிக்கொண்டுவர முயன்றுவருகிறோம். எனவே இங்கிலாந்திலுள்ள படைப்பாளர்கள் உங்கள் சிறுகதைகளை(யூனிக்கோட் எழுத்துருவிலும்,எழுத்துப்பிழைகளின்றியும்)அனுப்பி உதவுங்கள்.

காற்றுவெளி வழமைபோல வெளிவரும்.

நாடுகளில் நோய் ,யுத்த அச்சுறுத்தல்கள்/அச்சங்கள் நீங்கியபாடு இல்லை.தொடர்கிற சூழலே அதிகமாகத் தெரிகிறது.இனக் குழுமங்கள் எழுச்சியை மழுங்கடிப்பதிலேயே வல்லாதிக்கங்கள் முயன்றுவருகின்றன..முள்ளிவாய்க்கால் அவலம் போன்று காஸா. ..குழந்தைகள்,மக்கள்..அவலங்களை வாய்விட்டுச் சொல்லிவிடமுடியாது.

இறைவனிடம் பிரார்த்திப்பதைத் தவிர வேறென்ன சாதாரண மக்களால் செய்துவிடமுடிகிறது.

பிரார்த்திப்போம்.

அன்புடன்,
சோபா
01/10/2025

# படைப்பாளர்கள்

## கவிதைகள்

1. சுவர்ணலதா
2. அ.சீனிவாசன்
3. பார்வதி பாலசுப்ரமணியம்
4. பாரதிசித்ரா
5. ஐ.தர்மசிங்-நாகர்கோவில்
6. நடேஷ் கன்னா
7. DR.ஜலீலா முஸம்மில் -ஏறாவூர்
8. த. ரவீந்திரன்
9. க. புனிதன்
10. ச. இராஜ்குமார்
11. A.S.சுந்தரராஜன்
12. சேஹு மொஹம்மது பெனாஸிரா
13. ஜமீல் (இலங்கை)
14. சே கார்கவி கார்த்திக்
15. பாவலர் கருமலைத்தமிழாழன்
16. இரா.வெங்கடேஸ் குமார்
17. ம.ஆச்சின்
18. மீ. யூசுப் ஜாகிர்,வந்தவாசி
19. அ. லில்லி ஏஞ்சல் -திருக்கோவிலூர்
20. ஆதி.பார்த்திபன் (இலங்கை)
21. இளையவன் சிவா
22. தமீம்.அசாருதீன்
23. பாக்யபாரதி - தருமபுரி
24. நேசன் மகதி
25. ரகுநாத் வ - மதுரை
26. கவிஜி
27. கலா புவன் -லண்டன்
28. டீன் கபூர் (இலங்கை)

## சிறுகதைகள்

29. கவிஞர்.ச.வே.பஞ்சாட்சரம் (கனடா)
30. திருமலை சுந்தா (இலங்கை)
31. லி .நௌஷாத் கான் (அபுதாபி)
32. பாலமுருகன். லோ
33. ரஞ்சகுமார் (அவுஸ்திரேலியா)
34. தங்கேஸ்
35. சோ.ராமேஸ்வரன்
36. திவா இராஜேந்திரன் (அமீரகம்)

## கட்டுரைகள்

1. ரா.சண்முகவள்ளிஸ்ரீனிவாசன்
2. ஈழக்கவி (இலங்கை)
3. கமலினி கதிர்- சுவிஸ்
4. மலர்மகள் - மதுரை
5. திரு.சமயக்கண்ணு
6. இளையவன் சிவா

## மொழிபெயர்ப்பு

1. க.மோகனரங்கன் (தமிழ்க் கவிதை)
(மொழிபெயர்ப்பு:அநாமிகா ரிஷி)

சுவர்ணலதா

# திலீபம்




தவணையாய் உயிர்
துறந்தாய் உத்தமனே
தனயனாய் தமையனாய்
தலைவனாய் ஆனாய்
அணையா விளக்கே
உன்னை ஊன் உருக்கி
அணைத்த கொடுமை கேளாய்
இறுதி அணைப்பில்
வானமும் அழுததய்யா

நீ உயிர் துறந்தாய்
தியாகத்திற்கு உயிர் கொடுத்தாய்
விளக்காய் எரிந்த நீ அணைந்தாய்
விடுதலை தீபம் ஏற்றினாய்
தியாக தீபனாய்
எம் உயிரில் அணையா தீபமானாய்

எம் உயிரில் ஒரு பகுதி உன் தியாகம்
நீ கேட்டவை எல்லாம் கிடைத்தால்
நாமும் வாழ்ந்திருப்போம்
நீ மறைந்தாய்
உன்னால் விடுதலை துளிர்த்தது
இருண்ட வானில் உன் ஒளிக்கீற்று
வழிகாட்டுகிறது எம் பாதையை
தூரம் தெரியவில்லை
உன் தியாகம் தான் எம்மை
அழைத்துச் செல்கிறது
அப்பனே தெய்வங்களை
தாண்டிவிட்டாய்
உன் பாதம் தொடுகிறோம்.

படம்:இணையம்

# நூல் : குருதிப்பாடு
# ஆசிரியர் : ச. மோகன்

### ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்

அப்பறம் என்ன ! இனிமேல போதும்பொண்ணுவை பார்த்து வெங்கலத்துல யாராச்சும் நாக்கு மேல பல்ல போட்டு பேசுவாங்களா என்ன...?

இப்படித்தான் முடிந்தது குருதிப்பாட்டின் கடைசி வரிகள். போதும்பொண்ணுக்காக இப்படி அனைவரும் பரிந்து பேசும் நிலை வர, அவள் சிந்திய குருதியின் தாக்கமே இந்த குருதிப்பாடு.

வாழவேண்டும் என்ற ஆசையோடு போராடும் ஒரு பெண்ணின் ஏக்கங்களும், ஆசைகளும் எத்தனை அடர்த்தியானது என்பதை தன் வட்டார மொழியில் எளிமையாக உணர்த்தியுள்ளார்.

போதும்பொண்ணு,

செங்கோடன், கூந்தையம்மாள்,

தெய்வானை, சமயபுரம், தம்பிக்காளை, சீக்காதன் இப்படி சொற்ப கதாபாத்திரங்களைக்

கொண்டு ஒரு கனமான படைப்பை படைத்துள்ளார். நாவலின் ஆரம்பம் தொடங்கி இறுதி வரை வெங்கலத்தை விட்டு நம்மால் வரமுடியாத அளவுக்கு போதும்பொண்ணு நம்மை ஆட்கொள்கிறாள்.

“ஆம்பளைக்கென்ன துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு மயிராச்சின்னு போயிடுவான். பொம்பளதானே எல்லாத்துக்கும் எளக்காரமயிரு “ என்பதில் தொடங்கி “ஒரு அரவாணியாகப் பொறந்திருந்தா கூட கண்ணனாவது வந்து கல்யாணம் கட்டியிருப்பான் “ என்பதில் முடியும் போதும்பொண்ணுவின் வலிகள் படிக்கும்போது பொண்ணுக்கு வர வேண்டிய வயசில் வரவேண்டிய ரத்தம் மட்டும் வந்திருக்கக்கூடாதா என்று நம்மையும் ஏங்க வைக்கிறது.

ஒரு பெண் தன்னை பெண்ணாக நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் வாழும் வாழ்வு எத்தனை கொடியது என்பதை நாவல் முழுக்க போதும்பொண்ணின் குரல்கள் உரக்கச்சொல்கிறது. என்ன அந்த குரல்கள் வெங்கலத்தில் இருப்பவர்களுக்கு கேட்பதற்குள் அவளின் இறுதி மூச்சும் காற்றோடு காற்றாகக் கலந்துவிடுகிறது.

எந்த குருதி வெளிப்படவில்லை என்று ஊரே அவளைத் தூற்றியதோ, அந்த ஊரே அவளின் குருதிக்கரையிலிருந்து தப்பிக்க வேண்டி அவள் ஏங்கித் தவித்த வாழ்வினை அவளின் எழவுச் சடங்குகளாக செய்கையில் வெங்கலத்து மக்கள் மேல் கோவம் எழும்பாமல் இல்லை.




குருதிப்பாடு முழுக்க முகம் தெரியாத பெண் ஒருத்தி பின்புறத்தை காட்டியபடி அமர்ந்திருக்கும்படி தொடரும் ஓவியத்தின் முகத்தில் நிச்சயம் போதும்பொண்ணின் சாயலைக் கொண்ட எத்தனையோ பெண்கள் நம் நினைவுக்கு வந்து போவதை நம்மால் தவிர்க்க இயலவில்லை. முகமறியா போதும்பொண்ணு நம்முள் விதைத்துவிட்டுப் போகும் தாக்கத்தின் வீரியம் குறைவதற்கு சில காலம் ஆகும்.

எழுத்தாளர் ச.மோகன் அவர்களின் குருதிப்பாடு நாவல் வெற்றி பெற மனமார்ந்த வாழ்த்துகளையும், தமிழில் தனது வட்டார மொழியில் அற்புதமான ஒரு படைப்பை அளித்த ஆசியருக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்



# விருந்துப் பொறி

## கவிஞர்.சா.வே.பஞ்சாட்சரம் (கனடா)

அந்தக் காட்டில் சிங்கம் முதலான ஊனுண்ணிகளும், யானை முதலான செடி உண்ணிகளும் வசித்துவந்தன. ஊனுண்ணிகளுக்குத் தாங்கள் இரையாகாத இனவிடுதலை காண ஏங்கித் திரிந்தன செடியுண்ணிகள். அதனால் யானைகள், எருமைகள் போன்றவை தற்பாதுகாப்புக்காகத் தன் தன் இனக்கூட்டங்களாகவே திரிந்தன. அதனால் அவற்றை இலகுவில் தாக்கிக் கொன்று தின்ன முடியாமல் இருந்தது சிங்கம் புலிகளுக்கு! குதிரை , மான் ,முயல் போன்றவை விரைந்தோடித் தப்பி விடுவதால் அவற்றையும் பிடித்துத் தின்ன முடியாமல் தவித்த சிங்க ராசா எஞ்சியஆடு,மாடு,கழுதை ,குரங்குகளையே உண்டு உயிர்வாழ வேண்டியிருந்தது.

இதனால் சிங்கராசா தனது நண்பனாகியநரியுடன் ஆலோசனை நடத்தியது. சிங்கத்தின் காதுக்குள் பல நிமிடங்களாக எதையோ நரி குசுகுசுத்தது. சிங்கம் நன்றி கூறி நரியை அனுப்பி

வைத்தது. மறுநாள் யானைத் தலைவனிடம் வந்த நரி " உங்களுக்கு ஒரு நல்ல செய்தி. இந்தக் காட்டின் சிங்கராசா தான் இனிமேல் உயிர்க்கொலைப் பாவம் செய்வதில்லை என்று என் முன் சபதம் எடுத்துள்ளார். இனிமேல் உங்களைப் போன்று புல்,செடி,கொடிகளையும் செத்த விலங்குகளின் இறைச்சியையும் மட்டுமே தின்றுகொண்டு எல்லா மிருகங்களோடும் ஒற்றுமையாக வாழவே விரும்புகிறார்.

அதற்காக வரும் சித்திரை மாதம் முதலாம் நாள் செடியுண்ணிகள் அனைவரையும் அழைத்து விருந்து பரிமாறி நட்பை ஆரம்பிக்க விரும்புகிறார்.
உங்கள் எல்லாரையும் அந்த விருந்துக்கு அழைக்கும்படி என்னை அனுப்பியுள்ளார். நாளைக்கு உங்கள் சம்மதத்தை அறியத் தாருங்கள்." என்று கூறி அகன்றது. இது போலவே எருமைப் பட்டி மான் கூட்டம் என்று அனைத்துச் செடியுண்ணிக் கூட்டங்களுக்கும் அறிவித்தது. ஊனுண்ணி களுக்கும் இந்தச் செய்தியைக் கூறி வைத்தது. இனவிடுதலைக் கனவுகளில் திளைத்த செடியுண்ணிகள் நரியிடம் விருந்துக்குப் பூரண சம்மதத்தைத் தெரிவித்தன.பங்குனிக் கடைசி இரவு. காட்டின் எல்லையில் செழித்திருந்த வாழை,கரும்புத் தோட்டங்களைச் சுற்றி நரிகள் ஊளையிட்டுக் கொண்டும்,சிங்கங்கள் கர்ச்சித்துக் கொண்டும்,
புலிகள் உறுமிக்கொண்டும் விடியும்வரை ஓடிவிட்டுக் காட்டுள் ஓய்ந்தன. விடிந்ததும் கரும்பு, வாழைத் தோட்டங்களின் காவலர்கள் அச்சத்தோடு வெளியேறி ஊர்களுக்குள் ஓடி மறைந்ததனர். சிங்கராசாவேண்டிக் கொண்டபடி விருந்துக்கு வந்திருந்த செடியுண்ணிகள் கரும்பு,வாழைத் தோட்டங்களில் இறங்கி வயிறார இனிய வருந்துண்டு மகிழ்ந்தன. நரியும் தானும் விருந்துண்பதாய்ப் பாசாங்கு பண்ணியது. விருந்தின் முடிவில் சிங்கத்துக்கு நன்றி கூறிச் சொற்பொழிவாற்றிய நரி " செடி உண்ணிகளாகிய நாங்களும் ஊனுண்ணி களுக்குப் பதில் விருந்தை விரைவில் ஒருநாள் நடத்துவோம். " என்று பிரகடனம் செய்தது. சூழ்ச்சியை விளங்கிக் கொள்ளாத செடியுண்ணிகள் அதனை ஏற்றுக்கொண்டு கலைந்து சென்றன.

மறுநாள் அந்த நரி செடியுண்ணித் தலைவர்களை ஓடி,ஓடிச் சந்தித்தது.
"நாமுண்ணும் தாவர உணவில் மட்டுமே சிங்கராசா எங்களுக்கு விருந்திட்டதுபோல நாங்களும் ஊனுண்ணிகள் தின்னும் மாமிச உணவில்மட்டும் விருந்து கொடுப்பதே முறை. தான் கொல்ல மாட்டாரேயொழியச் செத்தவிலங்குகளின் இறைச்சியைத் தின்பார் என்பதே சிங்கராசாவின் சத்திய வாக்காகும். எனவே அப்படியான பதில் விருந்தை நாங்களும் வைக்க நாள் நிச்சயித்துச் சிங்கராசா வுக்கு அறிவிக்க உதவுங்கள்" எனறு கூறிஅகன்றது நரி. செடியுண்ணித் தலைவர்கள் தன்,தன் இனங்களைக் கூட்டி ஆலோசித்தன.
அந்த ஊன் விருந்துக்கு யாரைக் கொன்று மாமிசம் பெறுவது?
என்னைக் கொல்ல நான் அனுமதிக்க மாட்டேன்." என்று பல செடியுண்ணிகள் குரலெழுப்பின. அப்படிச் செய்யாவிட்டால் இனவிடுதலை கைநழுவி விடுமே என்று தலைமைகளும் விசிறிகளுங் கூக்குரலிட்டன.

இதனால் யானைக் கூட்டம் இரண்டு பகை அணிகள் ஆகியது.
எருமைகள் இரண்டு கட்சி எருதுகள் இரண்டு குழு என்று பிரிந்துநின்று தங்களுள் மோதத் தொடங்கின.அன்றாடம் இரண்டு மூன்று செடியுண்ணிகள் செத்து விழுந்துகொண்டிருந்தன. சிங்கம்,புலிகள் நோவின்றி அவற்றை உண்டு மகிழ்ந்து வந்தன.
செடியுண்ணிகள் தம்முள் மோதி மோதி அழிந்து உதிரிகளாகிப் பலமிழந்தன.
கடைசியில் எஞ்சிய சிலவான அவை தனித்தனியாக ஊனுண்ணிகளால் வேட்டையாடப்பட்டு இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றன.

நன்றி: வண்டி முன்னாக மாடு பின்னாக
*(உருவகக்கதைகள் தொகுதி)*

# மொழியியல் அடையாளப் பிம்பங்கள்

ஈழக்கவி

## அறிமுகம்

மொழி என்பது ஒரு தகவல் பரிமாற்ற கருவி மட்டுமல்ல; அது ஒரு சமூகத்தின் அடையாளம், பண்பாட்டு வரலாறு, அதிகார அமைப்புகளின் பிரதிபலிப்பு மற்றும் உரிமையின் வெளிப்பாடு ஆகும். மொழியின் மூலமாக ஒருவரின் தனி மற்றும் குழு அடையாளங்கள் உருவாகி, பரிணாமம் அடைகின்றன. நவீன மொழியியல், குறிப்பாக சமூக மற்றும் அரசியல் மொழியியல், மொழி அடையாளத்தின் வலிமை, சிக்கல்கள் மற்றும் அதிகாரம் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்து வருகிறது. தமிழ்ப் பொதுவில் இதனை பிரதிபலிக்கும் பல இலக்கிய உற்பத்திகளும் உள்ளன.



## மொழி மற்றும் அடையாளம்

*மொழி என்பது அங்கீகாரம் பெறும் ஒரு சமூக ஒப்பந்தம். மொழியின் மூலமாகவே ஒருவரின் பண்பாட்டு அடையாளம் மற்றும் சமூக நிலை வெளிப்படுகிறது. Edward Sapir மற்றும் Benjamin Lee Whorf ஆகியோரின் மொழி உறுதிப்பாடு கோட்பாடு (Linguistic Relativity) மொழி என்பது சிந்தனை வடிவமைப்பிலும், அடையாள உருவாக்கத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது என்று கூறுகிறது. உதாரணமாக, தமிழில் உள்ள பன்முகமான சொற்கள் மற்றும் வார்த்தைத் தொகுதிகள் அந்த மொழி பேசும் சமூகத்தின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் வெளிப்படுத்துகின்றன. மொழி மாற்றம் (Language shift) அல்லது மாயம் அடையாளம் இழப்பு (Identity loss) போன்ற நிகழ்வுகள் மொழி மற்றும் அடையாளத்துக்கு இடையில் உள்ள நுட்பமான தொடர்பை விளக்குகின்றன.*

## மொழி, அதிகாரம் மற்றும் சமூக கட்டமைப்புகள்

*மொழி அதிகாரத்தின் ஒரு கருவியாகும் என்று Michel Foucault வாதத்தை முன்வைக்கிறார். மொழி அரசியல் மற்றும் சமூக கட்டமைப்புகளை உருவாக்கி, வலிமையை நிலைநாட்ட உதவுகிறது. மொழி மற்றும் அதிகாரம் ஒன்றோடொன்று பரிமாற்றத்தில் இருக்கும். அதிகாரம் பெரும் சமூகக் குழுக்கள் தங்கள் மொழி வடிவங்கள் மூலம் தங்களை மேலோங்கி காட்ட முயற்சிக்கின்றனர். குறிப்பாக நாட்டின் இரண்டாம் மொழி அல்லது இளைஞர்களின் அசிங்க மொழி போன்றவை அடையாள அரசியலில் பெரும் தாக்கம் விளைவிக்கின்றன. தமிழில் இந்தப் பரபரப்பான மொழியியல் அரசியல் போராட்டங்கள், எடுத்துக்காட்டாக தமிழ் இயக்கங்கள் மற்றும் மொழி உரிமை போராட்டங்கள், மொழி மற்றும் அடையாளத்தின் இடையேயான வலுவான சம்பந்தத்தை காட்டுகின்றன.*

## மொழியியல் அடையாளங்கள் இலக்கியத்தில்

*மொழி அடையாளம் இலக்கியத்தில் ஒரு முதன்மை கருவியாகும். மொழியியல் அடையாளங்களின் சிக்கல், மாறுபாடு, மாயம் ஆகியவை இலக்கிய படைப்புகளில் ஆழமாக பிரதிபலிக்கின்றன. Ferdinand de Saussure சொல்வதுபோல், மொழி ஒரு சின்னம் (signifier) மற்றும் பொருள் (signified) என்ற இரண்டு பகுதிகளால் அமைந்துளது. இது சமூக ஒப்பந்தத்தின் மூலம் மட்டுமே பொருளடைகிறது. நவீன தமிழ் கவிஞர்கள், உதாரணமாக பா. ரஞ்சித், தமது கவிதைகளில் மொழி அடையாளம் மற்றும் மொழியின் சிக்கல்களை விவாதிக்கின்றனர். அவர்கள் தமிழ் மொழியின் பழைய வடிவங்களும், நவீன பரிமாணங்களும் இடையே மோதலை கவிதையின் உரையாடல் வடிவமாகக் கொண்டு வருகின்றனர். இது மொழி அடையாள சிக்கல்களின் நவீன வெளிப்பாடு ஆகும்.*

## சமூக மாற்றங்கள் மற்றும் மொழி அடையாளம்

*உலகமயமாக்கல், கலாச்சார பரிமாற்றங்கள், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை மொழி அடையாளங்களில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. பல சமூகக் குழுக்கள் தங்கள் அடையாளத்தைக் காக்க மொழி போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். உலகளாவியமாக ஆங்கில மொழியின் வெற்றியும், அதன் தாக்கமும் பிற மொழிகளின் அடையாள அழிவை உருவாக்கும் காரணியாக பார்க்கப்படுகிறது. தமிழ் மொழியும் இதற்குப் பின் செல்லாமல், அதன் அடையாளத்தைக் காக்கவும் புதிய வடிவமைப்புகளை உருவாக்கவும் செயற்படுகிறது.*

## மொழியியல் அடையாளத்தின் இலக்கிய உவமைகள்

*நவீன தமிழ் இலக்கியத்தில் மொழியியல் அடையாள சிக்கல்கள் மற்றும் அதனுடைய பிரதிபலிப்புகள் பல கவிதைகளில் காணப்படுகின்றன. பா. ரஞ்சித் "அடையாளம் இழந்த மொழி" போன்ற கவிதைகள் மொழியின் அடையாளம் இழப்பின் வேதனையை சொல்லுகின்றன. சுகுமார் அய்யர் மொழியின் பல்வேறு அடையாளங்களையும், அவற்றின் இடையேயான மோதல்களையும் படைப்புகளில் நுணுக்கமாக எடுத்துரைக்கிறார். இவை அனைவரும் மொழி, அடையாளம் மற்றும் சமூக சக்தியியல் இடையேயான உறவை வெளிக்காட்டுகின்றன.*

## மொழியியல் அடையாளங்கள் மற்றும் நவீன தமிழ்ப் பாணிகள்

*நவீன தமிழ் இலக்கிய பாணிகளில், குறிப்பாக கவிதைகளில், மொழி அடையாளம் பற்றிய ஆராய்ச்சிகள் பெருகியுள்ளன. இந்தக் கவிதைகள் மொழி வடிவங்களின் மாறுபாடு, மொழி இடைமாற்றம் மற்றும் அடையாள அரசியல் ஆகியவற்றை உணர்த்துகின்றன. கவிதைகளில் பயன்படுத்தப்படும் பன்முக சொற்கள், புதுமையான சொற்பொருள் மாற்றங்கள், மொழி சிக்கல்களை வலுப்படுத்துகின்றன. இது தமிழின் புதிய அடையாளத்தை உருவாக்குகிறது, அதே சமயம் பழமையான மொழி வடிவங்களின் நினைவுகூர்ச்சியையும் காப்பாற்றுகிறது.*

## முடிவுரை

*மொழி என்பது நம் அடையாளம், பண்பாடு, அதிகாரம் மற்றும் சமூக வரலாற்றின் பிரதிபலிப்பாக விளங்குகிறது. மொழியியல் அடையாள பிம்பங்களை ஆழமாக ஆராய்வதன் மூலம், நமது மொழி மற்றும் சமூகப் பண்பாட்டின் பரிமாணங்களை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். தமிழ் நவீன இலக்கியம் இந்த ஆராய்ச்சியின் முக்கிய பகுதியை வகிக்கிறது, நிறைவாக, மொழி அடையாள அரசியலை நவீன கவிதை வடிவில் தருகின்றேன்.*

*மொழியியல் அடையாளப் பிம்பங்கள்.*

### மொழி என் இரகசியம்

நான் பேசும் மொழி
என் அடையாளத்தின் துளிர்,
அது ஒரு பறவை போலப் பறக்கின்றது,
ஆனால் ஒவ்வொரு வார்த்தையும்
ஒரு சிறு வாளாகவும் மாறி,
என் நெஞ்சை வெட்டுகின்றது.

❍

### பகிரப்பட்ட மொழிகள்

சொற்கள் மாறுகின்றன,
அடையாளங்கள் மாறுகின்றன,
ஒரே சொல்லுக்கு பல அர்த்தங்கள்,
ஒரே மொழிக்கு பல முகங்கள்.
பேசும் மொழி அல்லாமல்,
பேச முடியாத மொழி நம்மை சுற்றி காத்திருக்கிறது.

❍

### மொழியின் சின்னம்

அடையாளம் மொழியில் இல்லை,
அது மொழியைப் பேசும் நெஞ்சில் உள்ளது.
ஒரு மொழி பேசுவோர்
அதன் உணர்வுகளின் கண்ணாடியாகவும்,
அடையாளமாகவும் வாழ்கிறார்கள்.

❍

### மொழி, அதிகாரம் மற்றும் அடையாளம்

அடையாளம் ஒரு மொழி மொழிந்திருக்கும்
அதன் அதிகாரத்தையும், அவமானத்தையும்
நமக்குச் சொல்லி நிற்கிறது.
மொழி எதற்கு வலிமை கொடுக்கும்,
அதைத் தடைசெய்யும்,
அது அடையாளத்தின் ஓர் பிம்பமாகும்.

❍

### நெறிப்படுத்தும் மொழி

மொழி சில சமயங்களில் நம்மை
தோற்றத்தைத் தடுத்துச் செல்கிறது,
மனித உரிமையை பறிக்கிறது.
ஆனால் அதே மொழி நமக்குக் காற்று தரும்,
மூச்சு, உயிர்.

❍

### முடிவு

மொழியியல் அடையாளப் பிம்பங்கள்
மனிதத்தின் நட்பும், போரும்,
அடையாளத்தையும் வர்ணிக்கும் கண்ணோட்டம்.
மொழி பேசுவது மட்டுமல்ல,
அது உணர்வுகளை மாற்றுவது,
அடையாளங்களை உருவாக்குவதும் ஆகும்.

### முக்கிய மேற்கோள்கள்:


1. *Sapir, Edward. Language: An Introduction to the Study of Speech. 1921.*
2. *Whorf, Benjamin Lee. Language, Thought, and Reality. 1956.*
3. *Foucault, Michel. The Archaeology of Knowledge. 1972.*
4. *Saussure, Ferdinand de. Course in General Linguistics. 1916.*
5. *Ramjit, Pa. “Language and Identity in Modern Tamil Poetry,” Journal of South Asian Literature, 2015.*
6. *Kumar, S. Sociolinguistics and Power: Language, Identity and Authority. 2018.*



# அந்நியமாகப் போகும் மூன்றாந்தலைமுறை

**கமலினி கதிர், சுவிஸ்**

**தா**யகத்தில் போர்மேகம் சூழ்ந்த காலந்தொட்டு புலம் பெயர்ந்த தமிழர்கள் பூமிப்பந்தின் எல்லா இடங்களிலும் கால் பதித்தனர்.பள்ளி நாட்களில் உலகப்படத்தில் பார்த்த நாடுகளிலெல்லாம் தம் இருப்பை நிலைநாட்டினர்.அயராத உழைப்பாலும் முன்னேற வேண்டும் என்ற வெறியாலும் தங்களை நிலைநிறுத்தினர்.அதற்கு அவர்கள் கொடுத்த விலை ஏராளம்.அகதியென்ற பெயரைச் சுமந்தபடி தன் அடுத்த தலைமுறை குடியுரிமையுடன் தலை நிமிர்ந்து வாழ வழி செய்தனர். ஆனால் அதற்கு அடுத்த தலைமுறை எந்தவித இடர்பாடுமின்றி அந்தந்த நாடுகளில் படிப்பு,பட்டம்,பதவி,அந்தஸ்து என மிக உயர்ந்த நிலையில் வாழும் நாட்டவருக்கு சரிசமனாக வாழத் தொடங்கி விட்டனர்.

ஆனால் நாமெல்லோரும் வேதனைப்படும்படியான ஒரு நிகழ்வு வளர்ந்து கொண்டு வருவதை தடுக்க முடியாமல் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இவற்றை முதலாம் தலைமுறை எவ்வாறு எடுத்துக் கொள்கிறது என்பது ஒவ்வொரு விதமாகவே

இருக்கிறது.சிலர் அதைப் பெருமையாகவும் பலர் வேதனையுடனும் பார்க்கிறார்கள்.தாயகத்தில் உரிமைகள் இழந்து ஒடுக்கப்பட்டாலும் தமிழ் வாழ்ந்து கொண்டிருக்கும். ஆனால் மேற்குலக நாடுகளில் கேள்விக்குறிதான்.

மூன்றாம் தலைமுறையினர்கள் எங்கள் தாயகத்தை தங்கள் தாய் நாடாக அங்கரிக்கப் போவதில்லை என்பதை நாம் வேதனையுடன் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். ஆங்காங்கே தூக்கியெறியப்பட்ட குப்பைகளும், அவற்றின் துர்நாற்றங்களும்,வீதிச் சட்டங்களுக்கு அப்பாற்பட்டு தாறு மாறாக விரைந்து செல்லும் வாகனங்களும் அவர்களால் ஜீரணிக்க முடியாதவையாகின்றன. தமிழரின் வழி வந்தவர்களாயினும் தமிழில் உரையாட முடியாமல்,தமிழ்ச் சொற்கள் பல அறிந்திருந்தாலும் அந்தச் சொற்கள் சுமந்துகொண்டுள்ள பண்பாட்டு அர்த்தங்களை உள்வாங்க முடியாதவர்களாய் இருக்கப் போகிறார்கள். தாயகம் சென்றாலும் கழிப்பறைக் காகிதம்(ரொய்லட் றோல்) இல்லாமல்,போத்தல் தண்ணீர் இல்லாமல் அவர்களால் அங்கு தாக்குப் பிடிக்க முடியாது. நுளம்புகள், பூச்சிகள்,எறும்புகள் என எல்லாமே தம்மைத் தாக்கவரும் எதிரிகள்போல கூச்சலிட்டு அலறுவதை முதலாம் தலைமுறை வேதனையுடன் வேடிக்கை மட்டுமே பார்க்கப் போகிறது.

தங்களைப் பற்றிய கூடிய பாதுகாப்பு உணர்வால் சுத்தப்படுத்தி (சனட்டைசர்) போத்தல்களுடனும், சுத்தப்படுத்தி காகிதங்களுடனும் (சனட்டைசர் ரிசியூக்களுடனும்) பயங்கலந்த உணர்வுடன் அவர்களால் எப்படி எம்மண்ணில் ஒட்ட முடியும்? எம்மண்ணில் வெறுங் காலுடன் நடக்க பயந்து அருவருத்து தயங்கி நிற்பதைப் பழைய தலைமுறை வேதனையுடன் பரிதாபமாகப் பார்க்கப் போகிறது.அகதிகளின் பிள்ளைகளின் பிள்ளைகள் எம் நாட்டுக்கு அந்நியமானவர்;கள் என்பதை வேதனையுடன் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். கைகளால் சாப்பிடுவதை சுகாதாரக் குறைபாடு என்று எண்ணும் அடுத்த தலைமுறை தாய் மண்ணில் எப்படி ஒட்ட முடியும்?உல்லாசப் பயணிகள் போல உறவுகளுடன் ஒட்டாமல் அங்கு போய்வருவார்கள். உறவுகளுடன் உரையாட முடியாமல்,அவர்கள் கூறுவதைப் புரிந்து கொள்ள முடியாமல்,அவர்களது பழமொழிகள்,பகிடிகளை விளங்கிக் கொள்ள முடியாமல் அந்நியப்பட்டு நிற்பது காலத்தின் கோலமாகப் போகிறது.

திருமணங்களின் புனிதத்துவம் ஐரோப்பிய,அமெரிக்க கலாச்சாரக் கால்களில் மிதிபட்டு அழியப் போவதை தடுக்க முடியாத கையறுந்த நிலையில் முதலாந்தலைமுறை விழி பிதுங்கி நிற்கப் போகிறது. துணை தேடி நான்கைந்து திருமணங்கள் செய்யப் போகும் தங்கள் சந்ததியினரைத் தடுக்க வழி தெரியாமல் தடுமாறப்போகிறார்கள்.

அமெரிக்க,கனடிய,ஐரோப்பிய கலாச்சாரத்திற்குள் நம் தமிழ்பண்பாட்டைத் தொலைத்துவிட்டு திருப்பி மீட்டெடுக்கத் தெரியாமல் நாம் கலங்கி நிற்கும் அவலம் இப்போதே தெரிகிறது.கண்மண் தெரியாமல் பணத்தைத் தேடி தலை தெறிக்க ஓடியதன் பலனை முதலாந் தலைமுறை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.ஆரம்ப காலத்தில் திருமணத்திற்காக தமிழ்பெண்களை இறக்குமதி செய்த எம் சமூகம் இப்போது அந்தந்த நாடுகளிலேயே வாழ்க்கைத் துணைகளைத் தேடத் தொடங்கி விட்டார்கள். தமிழ் எழுதத் தெரியாவிட்டாலும் தமிழைப் பேசி வந்த இரண்டாந் தலைமுறையுடன் எம் பண்பாடு,பழக்கவழக்கம் என்று எல்லாமே மூன்றாந் தலைமுறையினரிடம் இருக்கப் போவதில்லை.ஒரு கலப்படமான புதுக் கலாச்சாரத்துக்குள் அடியெடுத்து வைக்கப் போகிறார்கள்.

பொங்கல் வாழ்த்துகள் பரிமாறுவார்கள் பொங்காமலே. உடைகள் ஏற்கெனவே காலநிலைக்கேற்ப மாறிவிட்டது. உணவுப் பழக்க வழக்கமும் அடிபட்டுப் போய்விடும். வேலைப்பழுவைக் குறைக்க துரித உணவுகளிடம் சரணடைந்து விடுவார்கள்.தமிழரின் பாரம்பரிய உணவுக் கலாச்சாரம் மாறிக்கொண்டு வருகிறது.பின் முற்றாக மாறிவிடும்.ஆரம்பகாலத்தில் தம் பிள்ளைகளுக்கு அழகான தமிழ்ப்பெயர்கள் சூட்டியவர்கள் இப்போது எல்லாம் வாயில் நுழையாத அர்த்தமற்ற பெயர்களை வைத்துக் கொண்டு வருகிறார்கள்.இவ்வளவு காலமும் பெயரால் தமிழரென்று அடையாளம் காண முடிந்தது.இனி வருங்காலத்தில் பெயரால் தமிழர் என்று அடையாளம் காண முடியாமல் போய்விடும்.

பொருளாதார ரீதியாக வளம் பெற்றிருந்தாலும் எம் பண்பாட்டு இழப்பு என்பது எமக்கெல்லாம் பெரிய பின்னடைவே.எம் சந்ததியினர் மெல்ல மெல்ல எம் தமிழ் மொழியையும், பணபாட்டையும் விட்டு விலகி வெகு தூரத்திற்கு போவதை நாம் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோம்.காலத்தின் கோலத்தால் எம் மொழி,எம் பண்பாடு,எம் நூல்கள் எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு நிற்கப் போகிறோம். எனது பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாதென்று பெருமை பேசியவர்களெல்லாம் வேதனையுடன் தாங்கள் விட்ட தவறுகளை எண்ணி வேதனைப் பெருமூச்சு விடப் போகிறார்கள்.

கல்வியில் அந்தந்த நாட்டவருடன் போட்டி போட்டு உச்சந்தொடும் நம் அடுத்தடுத்த தலைமுறை தம் தாய்மொழி மறந்து,பண்பாடு தெரியாமல் தமிழ் பெரியார்களைத் தெரியாமல் வாழப் போகிறார்கள்.அதோடு தம் தாய்மொழியின் பெருமையையே அறியாதவர்களாகப் போகப் போகிறார்கள்.யாராவது திருவள்ளுவர் பற்றியோ திருக்குறள் பற்றியோ கூறினால் பேச முடியாது கூகுளில் தேடும் அவலம் நேரப் போகிறது. ஒரு உள்நாட்டுப் போர் எத்தகைய அவலங்களுக்குள் எம்மைச் சிக்க வைத்திருக்கிறது. இதற்குள்ளிலிருந்து எவ்வாறு மீளப் போகிறோம்.

# “காற்று வெளி” இதழ்

**மலர்மகள், மதுரை**

கலை இலக்கிய உலகில் புற்றீசலாய் பல இதழ்கள்.... மின்னிதழ்களாய்.... சிற்றிதழ்களாய்.... காலாண்டு இதழ்களாய் உலா வருகின்றன.

அந்த வகையில் லண்டனிலிருந்து வெளிவரும் ‘‘காற்று வெளி’’ஒரு மாறுபட்ட, தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது களி கூறத்தக்கது. அயலகத்தில் இருந்து வந்தாலும் தமிழ் மாதங்களின் பெயரில் இதழாக வருவது பாரம்பரிய அடையாளம்.

இதழின் அட்டைப்படம் வித்தியாச உயிர்ப்புடன் மனதில் பல எல்லைகளற்ற அற்புதங்களை நிகழ்த்துகிறது. உள்ளே கவிதை கட்டுரைகள் படைப்புகளுக்கு வரையப்படும் படங்களும் விழிகளை கொள்ளையடிக்கின்றன.

மேலும் ஒவ்வொரு நாட்டில் வாழும் எழுத்தாளர்களை ஊக்குவித்து அந்நாட்டு சிறப்பிதழை வெளியிடுவது யாவரும் செய்யாத ஒரு வண்ணச் செயல்.

முனைப்போடு, திட்டமிட்டு, இலக்குகள் நோக்கி உழைக்கும் ஆசிரியர் குழுவிற்கு முதலில் பாராட்டுகள்.

பல நாட்டு படைப்பாளிகளை கவிதைகள், சிறுகதைகள், நூல் விமர்சனம், கட்டுரைகள், மதிப்புரைகள், வாசிப்பு அனுபவம் எனப் பலப்பல உருவங்களில் ஒன்றிணைத்து அவர்களுக்குள் தளராத தன்னம்பிக்கையை விதைக்கும் இதழ்.

கவிதைகள் கதைகள் ஆகச்சிறந்த காலத்தின் நினைவுகளாக இருந்தாலும் உலகில் நடக்கும் அநீதிகள், சமூகம் சார்ந்த பிரச்சனைகள் பற்றிய படைப்புகள் கூடுதலாக இருப்பின் சிறப்பாக இருக்கும் என்பது என் தாழ்மையான கருத்து.

மானுட மனதை மென்மையுற, எண்ணங்களை வலுப்படுத்த வைக்கிற வாழ்வின் காட்சிகளை, தர்க்கம் தாண்டிய இயங்கியலில் எதிரொலிக்கும் படைப்பாளிகளின் படைப்புகள் பல வடிவங்களில் இருப்பதை அழகாக கட்டமைத்து வெளியிடும் பாங்கு போற்றுதற்கு உரியது.




எவரும் இதுவரை செய்யாத புதுயுக்தி, புதுமையை இந்த இதழ் ஆசிரியர்கள் செய்வது கவனத்தில் கொள்ளத்தக்கது. இதழ் வெளியிடுவதற்கு முன் படைப்பாளர்களை நலம் விசாரித்து, இதழை மெயிலில் அனுப்பி ஏதேனும் பிழைகள் இருப்பின், திருத்தி அனுப்ப வேண்டுகோள் விடுத்தும், பின் பிழைகள் அற்ற இதழை வெளியிடுவதும் ஆசிரியர் குழுவின் உழைப்பின் உயரத்தை பறைசாற்றுகிறது.

பல புதிய படைப்பாளுமைகளுக்கு இடம் கொடுத்தும், சிந்தனைகளின் செறிவுகளால் ஊக்கப்படுத்தி, மனவெளியில் புது மாற்றத்தை ஏற்படுத்தும் ‘‘காற்று வெளி’’ இதழ் மென்மேலும் வளர மனம் நிறை வாழ்த்துகள்.



### பாரதிசித்ரா

உனக்கும் எனக்குமான தேநீர்
பொழுதுகள் தனித்துவமானது ..

நிறைந்த வெறுமையோடு நாமும்..
தேநீரோடு கோப்பையும் ...

அள்ளியெடுத்த கரங்களில் பரவும்
வெப்பம் ஒத்தடமாகிறது..

இதழ்தொடும் முதல் மிடற்றில்
முத்தத்தின் சுவை...

அடுத்தடுத்த மிடருகளில்.
உரையாடல்கள் அமுதூற்றி
நிறைக்கிறது..

நாம் விரல் கோர்த்தபடி நகரும்
போது வெறுமை கோப்பைக்கு
இடம் மாறியிருந்தது...!!!

### ஐ.தர்மசிங், நாகர்கோவில்

# வாழ்வில் அழகு

பூவாக
இருக்க வேண்டிய இடத்தில்
மெல்லிய பூவாகவும்

முள்ளாக
இருக்க வேண்டிய இடத்தில்
கூரான முள்ளாகவும்

தோன்றுவது தான்
வாழ்வில் அழகு

பூவாகவே
இருந்துவிட்டால்

கிழித்து வீசுவதில்
குரங்கு மட்டுமல்ல
மிதித்து நசுக்குவதில்
செருப்புக் கூட
புளகாங்கிதம் அடைகிறது.

திருமலை சுந்தா

# கடுகு குறுங்கதைகள்:

### ஆலோசனை

*"தவறாகிப் போனதைப் பற்றி இனி
யோசித்து எந்த பலனும் இல்லை..
தவறு ஏற்பட எந்த காரணம் என்பதை
கண்டு பிடி.. "
திருடனுக்கு அவனது மனைவி ஆலோசனை
வழங்கினாள்.
திருடன் மனைவியை பரிதாபமாகப்
பார்த்தான்.*

❍

### நிழல்

*"என்னை பின் தொடராதே...."
வண்ணாத்திப் பூச்சி தனது நிழலிடம்
கூறியது.
"நீ.. வெளிச்சத்தில் பறப்பதை நிறுத்து
நானும் உன் பின்னாடி வருவதை
நிறுத்தி விடுகின்றேன்... "
என்றது வண்ணாத்திப் பூச்சியின்
நிழல்.
நிழல் கூறுவது உண்மையா..?
அல்லது பொய்யா..?
வண்ணாத்திப்பூச்சி இருளை நோக்கி
பறந்தது.
நிழல்....!!??*



*Dr* ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

# ஹைக்கூ கவிதைகள்



*நீண்ட பயணம்*
*நதியில் நீராட இறங்குகிறது*
*மணல் ஒழுங்கை*

❍

*விரித்த புத்தகம்*
*மேலெழுகிறது*
*பால்ய மரத்தின் வாசம்*

❍

*அமைதியான நதி*
*நனைந்து கொண்டிருக்கும்*
*வானப்பெருவெளி*

❍

*பிறந்தது சிசு*
*தொட்டில் ஆனது*
*குப்பைத்தொட்டி*

❍

*அன்னை மடி*
*வெடித்து விடை பெறுகின்றன*
*சோகமும் கண்ணீரும்*

❍

*கண்ணூறு பட்டால்*
*என்ன செய்யும்?*
*திருஷ்டி பொம்மை*

❍

*விதையும் நீருமில்லாமல்*
*விளைநிலங்களில் முளைக்கும்*
*வீடுகள்*

❍

*பாடுபட்டுழைக்கும் அப்பா*
*பசியாறுகிறார் மதியம்*
*பத்து ரூபாய் தேநீரில்*

❍

*தேடலில் கிடைத்தது*
*காலம் நிறுத்தப்பட்ட கணம்*
*பால்ய புகைப்படம்*

❍

*பணி உயர்வு விழா*
*விருந்து பரிமாறும்*
*பட்டினிப் பணியாள்*



த. ரவீந்திரன்

எங்கேனும் யாரேனும் உன்னை
ஏமாற்றிவிடுவாரோ என
எனக்குள் உண்டாகும் விரக்தியும்
கோபமும் ஏதோ ஒருவகையில் ஏதுமற்ற
என் இயலாமையின் வெளிப்பாடு
செவி சாய்க்க மறுத்து
மௌனமாய் கடக்கும் உன்
ஆணவத்திற்கும் அடிமைபட்டு
அடுத்த நகர்விற்கு அசைவற்று
வேர் பிடித்த மரமான என்னை
அசைத்து பறக்கிறது உன்மீதான
அக்கறையும் பாசாங்கற்ற அன்பும்..

க. புனிதன்

# வசந்த கால சுள்ளிகள்

பச்சைக் கிளி
கடை கண்களில்
வானின் நீலத்தைத் தொட்டது.

“மகிழ்ச்சியின் உயிர் ஊற்று,
வாழ்வில் கனியும்” —
சோசியரின் சொல்.

கிளி பசுமை இறக்கையைப் பார்த்தது.
“எங்கும் வெற்றி,
எதிலும் வெற்றி” —
கணிகரின் தீர்ப்பு.

தத்தையின் கண்களில்
வெண் மேகம் மிதந்தது.
“அமைதி மலரும்” —
நிமித்தியர் கூறினார்.

அஞ்சுகம்
ஆரஞ்சு வானத்தைப் பார்த்தது.
“புதிய ஞானம் பிறக்கும்” —
சோதிடரின் நம்பிக்கை.

சொர்ணம்
கடித்த கொய்யாப் பழத்தின்
இளம் சிவப்பில் திளைத்தது.
“மீனாட்சிக்கும் சுந்தரருக்கும்
மீண்டும் காதல் வரும் காலம்” —
கால கணிதரின் கணிப்பு.

கிளி வானவில் பார்த்தது.
வசந்த கால சுள்ளிகள்—
எரியும் காலம்,
நிமித்தியரின் முடிவு.



# ச. இராஜ்குமார் கவிதைகள்:

வெகு நாட்களுக்கு பிறகு
நான் அதை பார்த்தேன்
அதே அழகுடன்
சிறகை அசைத்தபடி வந்தமர்ந்தது
ஒரு பச்சைக்கிளி

❍

நிகழ் கணங்களுக்குள்
வாழ்பவனை தான் இந்த உலகம்
ஏளனமாக பார்க்கிறது ..

❍

**கனமழை**

கனமழையில் ஒரு பூ பூக்கிறது,
கனமழையில் ஒரு குருவி நனைகிறது.
கனமழையில் ஒரு செடி துளிர் விடுகிறது,
கனமழையில் ஒரு இலை உதிர்கிறது.

கனமழையில் ஒரு நாய் நனைகிறது,
கனமழையில் ஒரு குயில் கூவுகிறது.
கனமழையிலும் ஒரு மயில் தோகை விரித்தாடுகிறது,
கனமழையில் ஒரு சிறுவன் சிரித்தாடுகின்றான்.

கனமழையில் ஒரு ஆறு பொங்கி ஓடுகிறது,
கனமழையில் ஒரு மீன் நீர்முகத்தில் குதிக்கிறது.
கனமழையில் ஒரு கிராமம் மண் வாசம் வீசுகிறது,
கனமழையில் ஒரு காதல் இதயம் மலர்கிறது.

கனமழையில் ஒரு விளக்கு தீப்பொறி துளிர்கிறது,
கனமழையில் ஒரு விவசாயி நம்பிக்கையால்
நனைகிறார்.
கனமழையில் வானம் கீதம் பாடுகிறது,
கனமழையில் பூமி புது உயிர் பெறுகிறது.



# பரணியில் உறங்கும் அப்பாவின் காதல் கடிதங்கள்...

லி .நௌஷாத் கான் (அபுதாபி)

எலி உருட்டுவது போல பரணியில் உருட்டி கொண்டிருந்தான் செல்வம் ..அவனுக்கு தேவைப்படும் அந்த திருமண சான்றிதழ் மட்டும் கிடைத்து விட்டால் விவாகரத்துக்கு விண்ணப்பித்து விட வேண்டியது தான் ..ஒண்ணும் இல்லாதவள்னு கூட பார்க்காம காதலிச்சு கட்டிக்கிட்டு வந்ததுக்கு ஒரு புருஷனா மதிக்க வேணாம் அட்லீஸ்ட் ஒரு மனுசனா மதிக்கலாமே,பொட்டச்சி அவளுக்கே அவ்வளவு இருந்தா எனக்கு எவ்வளவு இருக்கும் .என்ன பொண்ணுடா அவ ,அவளை எப்படிடா காதலிச்சு கல்யாணம் கட்டிகிட்ட?? தன்னை தானே கண்ணாடி பார்த்து  வெறுப்பாய் காரி உமிழ வேண்டும் என்று போலிருந்தது ..

தன் மனைவி காயத்திரி மேல் கொண்ட கோபத்தினால் தான் அவளுடைய புகைப்படம் ,அவள் பயன்படுத்திய பொருட்கள் ,திருமணசான்றிதழ் என்று எல்லாவற்றையும் அந்த பரணியில் மேல் தூக்கி எறிந்திருந்தான் ..இப்ப விவாகரத்துக்கு திருமணசான்றிதழ் முக்கியம் என்பதால் தேடி கொண்டிருக்கிறான் ..

அவன் தேடிக்கொண்டிருக்கும் போது அவன் அப்பாவின் இரும்பு பெட்டியொன்று கைதவறி அந்த பரணியின் மேலிருந்து கீழே விழுந்து சிதறியது ..என்ன தான் அவர் இறந்து எட்டு வருடத்திற்கு மேல் இருந்தாலும் இந்த உலகில் அவனுக்கு அதிகம் பிடித்தது அவன் அப்பாவை தான் ...

சிதறிய பெட்டியை எடுக்க கீழே இறங்கினான் ..எப்போதும் பக்திப்பழமாய் காட்சியளிக்கும் அப்பாவின் பெட்டியில் ஒரு நான்கு ,ஐந்து கேசட்டுகள் ,ஆயிரத்துக்கும் மேலான கடிதங்கள் ,ஒரு மூன்று டைரி ,அம்மாவின் ஒரு சில புடவைகள் ,சில மிட்டாய் தாள்கள் ,முடிக்கற்றை ,நகம் என்று எல்லாத்தையும் பொக்கிஷமாய் அந்த பெட்டியினுள் வைத்திருந்தது இப்போது தான் செல்வத்துக்கு தெரிய வந்தது ...

அம்மா -அப்பாவுக்கு திருமணமாகி நாற்பது வருடங்களுக்கு மேலாக இருந்தாலும் அவர்கள் மொத்தமாய் ஒன்றாய் வாழ்ந்தது மிஞ்சி மிஞ்சி போனால் ஒரு மூன்று வருடங்களுக்குள் தான் இருக்கும் ..ஏனென்றால் வெளிநாட்டு வேலையில் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை, ஒரு இரண்டு மாதங்கள் தான் விடுமுறை கிடைக்கும் ..அந்த விடுமுறை நாட்களில் தான் அப்பா அம்மாவோடு இருந்திருப்பார் ...

08.09.1990

சனிக்கிழமை

என் இரு கண்ணிலும் நீங்காமல் இமையாய்,

என் இதயத்துடிப்பாய் துடித்து கொண்டிருக்கும்

என் ஆசை குல்பி ராதாவுக்கு ஆயிரம் முத்தங்களோடு உன் அன்பு கள்வனான குள்ள கணவன் லிங்கம் எழுதி கொள்வது ...

பசியிருந்தும் உண்ணும் உணவு தொண்டையில் இறங்க மறுக்குதடி,

கண் சொக்கி ,சொக்கி மூடினாலும் உறக்கம் வருவதில்லை,

சுவாசிக்கும் காற்றில் கூட மணக்கும் உன் மல்லிகை வாசம் ,

வெளிச்சமான என் இரவு

என் தனிமை கண்டு

கேலி செய்யும் பரிகாச கூத்தை

உன் கண்களால் கண்டால்

என் நிலை கண்டு உன் கண்கள் சிவக்குமோ ??

என் சிவப்பி பதில் சொல்லடி ??

நீ கேசட்டில் பேசி அனுப்பும்

உன் குரல் கேட்டே

என் ஜீவ நதி உயிர்மையுடன் ஓடுது

அரபு நாட்டு வெந்நீரில் வெந்து சாவது

என் இளமையும் தான் என்று

அந்த நியாயமற்ற கடவுளுக்கு புரியவில்லையோ??

ராமன் வனவாசம் பதினான்கு வருடத்தில்

முடிவடையும் .

என் ராதா உனக்காக நான் ஏற்றியிருக்கும்

இந்த அயல்நாட்டு வனவாசத்துக்கு

எப்போது தான் முடிவோ ...?

இரவில் உறக்கம் வராமல் பித்துகுளியாய் திரியும் சமயங்களில்

உன் புடவையை தானடி அணைத்து கொண்டு உறங்குகிறேன்

பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை

நீ அனுப்பும் கடிதம் கண்டே முகம் மலர்கிறேன்

எப்போதும்

உன்னையே நினைச்சுகிட்டு இருக்கேன்

நீயும் என்னை அதை விட அதிகமா நினைச்சுகிட்டு இருப்பேன்னு எனக்கு தெரியும்

நேரா நேரத்துக்கு நல்லா சாப்பிடு

உடம்ப பார்த்துக்கோ

ஊர்ல இருந்து யாராவது வந்தா கேசட்டுல நிறைய பேசி அனுப்பு

அடிக்கடி கடிதம் போடு

உம்மா.....உம்மா ......

ஆயிரம் முத்தங்களுடன்

உன் அன்பு கணவன்

லிங்கம்.

08.09.1990

சனிக்கிழமை இரவு

12 மணி

அந்த கடிதம் படித்து முடிக்கும் தருவாயில் செல்வத்தையும் அறியாமல் கண்ணீர் , செல்வமாகிய நான் ,தங்கச்சி ,அம்மா நல்லா இருக்கணும்னு அப்பா தன்னுடைய இளமையோட ஆசைகளை புதைச்சுகிட்டு எங்களுக்காக வெளிநாட்டில் கஷ்டபட்டு வாழ்ந்து இருக்கிறார் ..அம்மாவும் எங்களுக்காகவே வாழ்ந்து இருக்கிறாள் ..

அம்மாவும் -அப்பாவும் சாகுற வரைக்கும் ஒருத்தரை ஒருத்தர் விட்டு கொடுத்ததே இல்லை ,இப்ப இருக்கிற மாதிரி உறவுகளுக்கிட்ட ஈஸியா தொடர்பு கொள்ளுறதுக்கு டெக்னாலஜியும் அப்போதைக்கு இல்லை ஆனாலும் அவங்க ஒற்றுமையா தான் இருந்தாங்க நாம்ம தான் ,சாரி நான் தான் எல்லா வசதியும் இருந்தும் ஒரு உறவை முறிக்க நினைக்குறேன் ...

அடுத்த நொடி ....

ட்ரிங் ...ட்ரிங் .....

ஹலோ .....

ஹலோ ...

காயத்திரி ..நான் செல்வம் பேசுறேன் ,சாரி டி ..இனிமே நமக்குள்ள சண்டையே வராது..விட்டு கொடுத்து வாழ்வோம்

மிஸ் யூ அண்ட் லவ் யூ

அடுத்த சில மணிநேரங்களில்

காயத்திரி திரும்ப கணவன் வீடு வந்து சேர்ந்தாள் ,அவள் வந்ததும் வராததுமாக ஓடி சென்று கட்டிப்பிடித்து சாரி சொல்லியதோடு மட்டுமின்றி அவள் காதருகே ஐ லவ் யூ சொல்லி அவன் கழுத்தில் செல்லமாய் முத்தமிட்டான் ..தன் கணவன் செய்வது புதுசாக தெரிந்தாலும் அவளுக்கும் அது பிடித்திருந்தது ..

சேஹு மொஹம்மது பெனாஸிரா

# பிடிக்கவில்லை

நீதியை விட்டு
நீண்ட தூரம் பயணிக்க
விருப்பமில்லை

நாதியாய் நின்றாயினும்
நன்மைக்காய் வாழப்
பிறந்ததால்...

பிடிவாதம் கொண்டு
பிறரோடு பழக விருப்பமில்லை

பீதியின்றி நெடுந்தூரம் பயணிக்க
கூடவே நானும் இருப்பதால்....

சுயநலம் காத்து சுயத்தைத்
தேடச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை

நித்தமும் மனிதனாய் மனிதனுக்குள்
வாழ்ந்து கொண்டிருப்பதால்...

ஏழ்மையைக் காட்டி
ஏழுபேரைச் சம்பாதிக்கப் பிடிக்கவில்லை....

உறவுகளுக்குள் ஏளனம்
இன்றி கரம் பிடித்து நடை பயில
நாட்கள் தெரியாததால்...

என்றே சிலதை மட்டும்
தொட்டு நகர்கிறேன்
பகிரப் பலதும் இருப்பதால்...



# நூதன கொள்ளை...

பாலமுருகன். லோ

டிங், டிங்.. டிங், டிங் என்று கைப்பேசியிலிருந்து ஒலித்துக்கொண்டிருந்தது. 'விடாப்பிடியாக ஒலிக்கும் ஒரு சிள்வண்டைப் போல அந்த ஒலி அவர் காதைக் குடைந்தது.' போர்வையினுள் தலையை மூடியபடியே தூங்கிக்கொண்டிருந்த கிஷோருக்கு முழிப்பு தட்டவே! போர்வையில் தலையை மறைத்துக்கொண்டிருந்தவர், தன் தலையைப் போர்வையிலிருந்து விலக்கி ஒலி வந்த திசையில் தலையைத் திருப்பினார். தன் இடது கையைப் போர்வையிலிருந்து சற்றே விலக்கி ஒலி வந்த திசையில் செலுத்தி கைப்பேசியைக் கைப்பற்றி, ஒலி எழுப்பிய கைப்பேசியிலிருந்து வந்த ஒலியை அமர்த்தினார்.

வலதுபுறம் இருக்கும் மேஜையின் மீது இருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து தன் முகத்தில் மாட்டிக்கொண்டார். பிறகு மணி எவ்வளவு என்று பார்த்தார். 'ஏன் அலாரம் தான் அடித்ததே, அவருக்கு மணி எவ்வளவு ஆயிருக்கும் என்று தெரியாதா?' என்றால். அது அப்படியில்லை, கைப்பேசியில் ஓர் அலாரம் வைத்தால் பரவாயில்லை, மூணு, நாலு அலாரம் வைத்தால் எந்த அலாரம் அடித்தது என்று கைப்பேசியை எடுத்துப் பார்த்தால்தான் புரியும்.

மணியைப் பார்த்த கிஷோர் படுக்கையை விட்டு வேக வேகமாக எழுந்து கல்லூரிக்குப் புறப்படத் தயாரானார். கிஷோர் ஒரு மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிகிறார். நன்கு படித்தவர், நிறையப் பட்டம் பெற்றவரும் கூட. அவருடைய மனைவி சங்கீதாவும் நன்கு படித்தவள். ஆனால் திருமணத்திற்குப் பிறகு அவள் பார்த்து வந்த வேலையை ஐ.டி நிறுவனத்திலிருந்து தற்காலிகமாக வேண்டாம் என்று கூறிவிட்டு வீட்டோடு இருந்து வந்தாள்.

கிஷோர், சங்கீதா திருமணம் ஒரு காதல் திருமணம். ஆம், யாவரும் எண்ணுகிற மாதிரிதான் இருவரது வீட்டிலும் எதிர்ப்பு நிலவியதால் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் வீட்டின் சம்மதம் தேவையில்லை. காதலித்த பெண்ணைக் கைப்பிடிப்பேன் என்ற உறுதியுடனும், காதலித்தவனையே கல்யாணம் செய்ய வேண்டும் என்ற மன உறுதியுடனும் சங்கீதா இருந்ததால், ரெஜிஸ்டர் மேரேஜ் செய்துகொண்டனர். அன்றுமுதல், சொந்த பந்தங்கள் என்ற வானில், அவர்கள் இருவரும் வேரற்ற நட்சத்திரங்களைப் போல மிதக்கத் தொடங்கினர்.

இரு வீட்டிலும் எதிர்ப்பு என்றாலே தனிக் குடித்தனம் தானே? இருவரும் வாடகை வீட்டில் குடியிருந்து வந்தனர். கிஷோர் வீட்டிலும் மற்றும் சங்கீதா வீட்டிலும் யாவரும் திருமணத்திற்குப் பிறகு இவர்களிடம் பேசுவதில்லை; இரு வீட்டாரும் மௌனம் சாதித்து வந்தனர். இருபத்தைந்து வருடங்கள் பெற்றோருடன் இருந்த பையன் மற்றும் பெண், திடீரென்று தனியே இவ்வுலகில் காலம் தள்ள வேண்டும், அதுவும் பெற்றோரின் உதவியும், ஆலோசனையும் இல்லாமல் இருப்பது எவ்வளவு கடினம் என்பதைக் கிஷோர், சங்கீதா நன்கு உணர்ந்தனர். அந்தத் தருணத்தில் 'இது நல்லது, இது கெட்டது, கொஞ்சம் யோசித்துச் செய்யலாமே' என்றெல்லாம் சொல்வதற்கு இவர்கள் இருவருக்கும் யாருமில்லை. எல்லாப் போராட்டங்களையும் சந்தித்தனர் இருவரும்.

கிஷோருடைய ஒற்றைச் சம்பளத்தை வைத்து இந்தக் காலத்தில் அதுவும் தனியாகக் குடும்பம் நடத்த வேண்டுமென்றால் அது முடியாத காரியம் என்று சங்கீதாவுக்குப் புரிந்தவுடன் மீண்டும் அவள் பார்த்து வந்த ஐ.டி நிறுவனத்திலேயே சேர்ந்துவிட்டாள். ஒற்றைச் சம்பளத்தில் குடும்பம் நடத்துவது, ஒற்றைக் கையால் ஓடம் செலுத்துவது போலப் பெரும்பாடாக இருந்தது. இப்போது இருக்கும் காலகட்டத்தில் இருவர் சம்பாதித்தாலே குடும்பத்தை நல்லா நடத்த முடியவில்லை. இதில் ஒற்றைச் சம்பாத்தியத்தை வைத்து முடியாது என்பதைச் சங்கீதா ஆறு மாத காலத்தில் நன்றாகப் புரிந்துகொண்டாள்.

கிஷோருக்குச் சிறு வயது தொடங்கியே வெளிநாட்டிற்குப் போய்க் கைநிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளூற இருந்ததால், அந்த ஆசை, அவர் இதயத்தில் அணையாமல் எரியும் ஒரு கற்பூரத்தைப் போல எப்போதும் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

அவ்வப்போது செய்தித்தாளில் வரும் விளம்பரத்துக்கு எல்லாம் விண்ணப்பம் போடுவது வழக்கம். எங்காவது, யாராவது நாம் படித்த படிப்பிற்குக் கூப்பிட மாட்டார்களா என்று ஒரே எண்ணம்தான் கிஷோருக்கு.

பல முறை பல இடங்களுக்கு விண்ணப்பம் போட்டுவந்தார். சங்கீதா கூடச் சில சமயம் கேட்பாள்.

"ஏங்க இங்க நீங்க கைநிறையத்தானே சம்பாதிக்கிறீங்க, பிறகு என்ன?" என்பாள்.

"சங்கீதா, அது அப்படி அல்ல! ஒவ்வொருத்தருக்கும் ஒரு ஆம்பிஷன் இருக்கும்... எவனொருவன் அந்த ஆம்பிஷனை நோக்கிச் செல்கிறானோ அவனே வெற்றிக் காண்பான். நிறைய நபர்களிடம் ஆம்பிஷன் இருக்கும் ஆனால் அவர்கள் அவர்களது ஆம்பிஷனை நோக்கிச் செல்ல ஒரு வித பயம், தயக்கம், குடும்பச் சூழல் இவையெல்லாம் அவர்களுக்கு முட்டுக்கட்டையாகத் திகழ்கிறது. எவனொருவன் தடைக்கல்லை படிக்கல்லாக நினைத்து அதன் மேல் தனது கால்களை வைத்து ஏறி

மேலே செல்கிறானோ அவனே தனது ஆம்பிஷனை அடைகிறான்.

"நான் இரண்டாவது ரகம். தடைக்கல்லை படிக்கல்லாகப் பார்ப்பவன்" என்று ஒரு பெரிய விளக்கத்தைத் தன் மனைவி சங்கீதாவிடம் கூறி அவளுக்குப் புரியும்படி செய்தார் கிஷோர்.

❍ ❍ ❍

"சரி உங்க விருப்பம். நான் என்ன குறுக்கே நிற்கப் போறேன்" என்றாள் சங்கீதா.

சங்கீதாவை எண்ணி மனதளவில் பெருமை கொண்டார் கிஷோர்.

கணவனின் ஆசைக்கு குறுக்கே நிற்காமல் முடிந்தமட்டும் அவனுக்கு உறுதுணையாகக் கூடவே நிற்பது என்பது சாதாரண காரியமில்லை. அவனது சுக துக்கங்களில் கூடவே பயணித்து ஆறுதல் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி கூடவே நிற்பது என்பது மகத்தான காரியம். இதை வெகு அழகாகப் பார்த்துவருகிறாள் சங்கீதா.

ஒரு நாள் கிஷோர் மிகுந்த சந்தோஷத்துடன் வீடு வந்து சங்கீதாவிடம்,

"எனக்கு மின்னஞ்சலில் ஒரு செய்தி வந்திருந்தது என்றார். அவரது முகம், பல நாள் இருண்டிருந்த வானில் திடீரெனத் தோன்றிய முழுநிலவைப் போலப் பிரகாசித்தது. ஐரோப்பாக் கண்டத்திலிருக்கும் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் நல்ல வாய்ப்பு உள்ளதாக எழுதியிருந்தது..." டாக்டர் பட்டம் பெற்றமையால், மற்றவர்கள் மாதிரி ஐ.இ.எல்.டி.எஸ் பரீட்சையெல்லாம் எழுத தேவையில்லை. நேரடியாக நேர்முகக் காணல் அல்லது காணொலி மூலம் நேர்முகக் காணல் நடத்தி அந்த வேலையை உறுதி செய்வர்" என்று கூறினார் கிஷோர்.

பரவாயில்லை உடனே பதில் எழுத வேண்டியதுதானே" என்றாள் சங்கீதா.

"இல்லை சங்கீதா, அதில் ஒரு சிக்கல் இருக்கு..."

"இந்த மாதிரி கல்வி நிலையங்களுக்கு வேலை எடுப்பவர்கள் இடைத் தரகரை வைத்துத்தான் வேலைக்கு வருபவர்களைத் தேர்வு செய்வர். இதில் நாம் முக்கியமா பார்க்க வேண்டியது என்னவென்றால், நாம் ஒரு 'காஷன் டெபாசிட்' ஆக முன்பணம் செலுத்த வேண்டும்.

அதை வைத்துக்கொண்டு அந்த இடைத்தரகர் நாம் சேரவிருக்கும் கல்வி நிறுவனத்திற்குப் போய் நம்மைப் பற்றி அவர்களுக்கு எடுத்துக்கூறி நம் பேசிய காணொலியை அவர்களிடம் காண்பித்து, இவர் தகுதியானவர்தான் என்று உறுதி செய்வார்.

பிறகு கல்வி நிறுவனம் இவரது கூற்றுக்கு இணங்க சம்மதம் தெரிவித்தால் நமக்கு அவர்கள் முதலில் தெரியப்படுத்துவர். பின் நமக்குக் கல்வி நிலையத்திலிருந்து அதிகாரப்பூர்வமான தகவல் வெள்ளை காகிதத்தில் அவர்களின் ஒப்புதல் மடல் வேண்டுமெனில் நாம் ஒரு தொகையைச் செலுத்த வேண்டும். அதான் சற்று தயக்கத்துடன் இருக்கிறேன் என்று கூறினார் கிஷோர் தன் மனைவியிடம்.

"ஏங்க எவ்வளவு பணம் முன்பணமாகச் செலுத்த வேண்டும்? ... இல்லை எனக்கு ஒரு சந்தேகம்? நாம் பணம் கொடுக்கிறோம், அதற்கு இவர்களிடம் தான் பணம் கொடுக்கிறோம் என்பதற்கு ஏதாவது அத்தாட்சி இருக்கிறதா?" என்றாள்.

"ஆம், கொடுத்த பணத்திற்கு அந்த இடைத்தரகர் அவரது நிறுவனத்தின் மூலம் ரசீதை கொடுப்பார்".

"உங்க பல நாள் கனவு கண்டிப்பா நிறைவேற வேண்டும். ஒண்ணும் யோசிக்க வேண்டாம். இப்போது யூரோவின் மதிப்பு 1 யூரோ = 60 ரூபாய். கட்டாயம் இன்னும் பத்து வருஷத்தில் இது உயரும் சாத்தியம் இருக்கு. நாம் இப்பவே ஐரோப்பக் கண்டத்திற்குப் போய்விட்டோமென்றால் இன்னும் பத்து வருஷத்தில் யூரோவின் மதிப்பு நல்லா உயர்ந்து இருக்கும். நம் வாழ்க்கை தரமும் நல்ல நிலைக்கு உயர்ந்து இருக்கும்.

நான் முன்னரே சொன்ன மாதிரி ஒண்ணும் யோசிக்க வேண்டாம். இந்தாங்க இந்த நகையை விற்று முன்பணமாகச் செலுத்துங்க" என்றாள் சங்கீதா.

❍ ❍ ❍

மனமில்லாமல் தான் கிஷோர் தன் மனைவியின் நகையை விற்று முன்பணமாகச் செலுத்தினார். அவளது நகைகளை விற்கும் ஒவ்வொரு கணமும், தன் கனவிற்காக அவளது சந்தோஷத்தை விலையாகக் கொடுப்பதாகவே அவர் உணர்ந்தார். அவர்களும் அதாவது இடைத்தரகர் அவரது நிறுவனத்திலிருந்து இவருக்கு ரசீதைக் கொடுத்தார். ஒரு பத்து நாட்கள் பொறுக்கச் சொன்னார். கிஷோரும் 'பத்து நாள் தானே, நாம் பொறுத்துக்கொள்ளலாம்' என்று அவரது பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

இரண்டு வாரம் ஆகியும் கிஷோருக்குப் பதில் வரவில்லை, கிஷோர் பதற்றத்துடன் காணப்பட்டார். பதினைந்தாவது நாள் மீண்டும் ஒரு மின்னஞ்சல் வந்தது. அந்த மின்னஞ்சல், நம்பிக்கையோடு நட்ட செடியில் விழுந்த இடியைப் போல இருந்தது. ஏதோ மறுபடியும் பணம் செலுத்த வேண்டும், சில கிளியரன்ஸ் ஃபார்மாலிடிஸ் இருக்கு, அதற்கு இரண்டாயிரம் யூரோ செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது...

இதை எப்படிச் சங்கீதாவிடம் சொல்வது என்று ரெண்டு மூணு நாளாக மனதில் போட்டு வைத்திருந்தார். ... ஒவ்வொரு நாளும் அவளிடம் சொல்லிவிடலாம் என்று முன்வருவார், ஆனால் சொல்லத்தான் மாட்டார்.

ஒரு நாள் சங்கீதாவே, "ஏங்க என்னமோ போல இருக்கீங்க, என்ன ஆச்சு?" என்றாள்.

"ஒண்ணுமில்லை சங்கீதா, அந்த நபரிடமிருந்து மின்னஞ்சல் மீண்டும் வந்திருக்கிறது" என்றார்.

"என்ன அப்பாயின்மெண்ட் ஆர்டர் வந்துடுச்சா?" என்றாள்.

"இல்லை சங்கீதா, மேலும் பணம் கட்டச் சொல்லி மின்னஞ்சல் வந்திருக்கிறது" என்றார்.

"சில கிளியரன்ஸ் ஃபார்மாலிடிஸ் இருக்காம், அதற்காக யூரோ ரெண்டாயிரம் கட்டச் சொல்றாங்க".

"என்ன யூரோ ரெண்டாயிரமா? இப்ப இந்திய ரூபாய் மதிப்புப்படி சுமார் லட்சத்தைத் தாண்டுமே! என்ன செய்யறது?"

"அதான் எனக்கும் தெரியல."

"இந்தப் பணத்தைக் கொடுத்தால் கட்டாயம் அப்பாயின்மெண்ட் ஆர்டர் கிடைத்திடுமா?"

"கட்டாயம் கிடைத்திடும் என்று தான் அந்த மின்னஞ்சலில் குறிப்பிட்டிருந்தார்கள்" என்றார்.

"சரி, என்ன செய்வது என்று கொஞ்சம் யோசிக்கலாம்" என்றாள் சங்கீதா.

ரெண்டு, மூணு நாள் அப்படியே சென்றது. சங்கீதா கழுத்தில் இருக்கும் சங்கிலி, வளையல், காதில் மாட்டும் கம்மல் எல்லாத்தையும் கழற்றி கிஷோரிடம் கொடுத்தாள். தன் மாங்கல்யச் சங்கிலியைத் தவிர மற்ற அனைத்தையும் கழற்றிக் கொடுத்தபோது,

அவள் தன் கனவுகளின் கடைசி மிச்சத்தையும் அவரிடம் ஒப்படைப்பதைப் போல உணர்ந்தார் கிஷோர்.

"இதை வைத்துக் கடைசியாகச் செலுத்த வேண்டிய பணத்தை அவர்களுக்குச் செலுத்திடுங்க" என்றாள். ...இதை விற்றுப் பணத்தைக் கட்டுங்க.

நாம் அங்க போயிட்டோமென்றால் இன்னும் ஒரு வருஷத்தில் இதையெல்லாம் மீட்டுவிடலாம்" என்றாள்.

இதைக் கேட்ட பிறகு வேறு வழியில்லாமல் கிஷோர் நகைகளை விற்றுப் பணத்தைச் செலுத்தினார். ... பதிலுக்காகக் காத்திருந்தார்.

○ ○ ○

ஆனால் கிஷோருக்குப் பதில் வரவில்லை, என்ன செய்வது என்று தெரியாமல். தன் நண்பனின் நண்பன் ஐரோப்பாவில் ஜெர்மனியில் ஒருவர் இருந்தார். அவரிடம் சொல்லிக் கேட்டுப் பார்த்தால் என்ன என்றுத் தன் நண்பனை வேண்டி, அவனுடைய நண்பனுக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு கேட்டனர்.

அந்த நண்பனும் அங்கு விசாரித்து, அந்த இடைத்தரகர் நடத்தும் நிறுவனம் போலியானது, ... என்று அவரிடமிருந்து பதில் வந்தது.

இந்தப் பதிலைக் கேட்டவுடன் அதிர்ந்தார் கிஷோர். அவர்கள் கட்டிய கனவுக் கோட்டை, ஒரு சீட்டுக்கட்டைப் போலச் சரிந்து நொறுங்கியது. 'இப்படியும் நடக்குமா?' என்றதற்கு அந்த நண்பன், "ஆம், இது நைஜீரியன் ஸ்கேம் மாதிரி தெரிகிறது... போலீசாலும் கூட இதைக் கண்டுபிடிக்க முடியாது" என்று கூறவே, கிஷோர் மற்றும் அவரது மனைவி மனம் உடைந்து போனர்.

ஆனால் இருவரும் துவண்டு போகவில்லை. சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் ஃபீனிக்ஸ் பறவைகளைப் போல, அந்தத் தோல்வியின் சாம்பலிலிருந்து அவர்கள் மீண்டும் எழுந்தனர். மனதில் தெம்பை வரவழைத்துக்கொண்டு மீண்டும் போராடினர். கிஷோர் மிடில் ஈஸ்டில் உள்ள ஒரு கல்வி நிலையத்தில் அவரது படித்த படிப்பின் அடிப்படையில் அவர் எண்ணியபடியே வேலை கிடைத்தது.

நாம் அனைவரும் என்ன பார்க்க வேண்டியது என்றால், படித்த படிப்புக்கு வேலை கட்டாயம் கிடைக்கும். பணம் செலுத்தினால்தான் வேலை என்றால் அந்த வேலையை உதறித் தள்ளுங்கள்.

கிஷோர் மாதிரி நல்ல படித்தவரே நைஜீரியன் ஸ்கேம் என்ற நூதன கொள்ளையில் மாட்டி அதிலிருந்து வெளியே வர முடியாமல் தன் பணத்தை இழந்தது போல, வேறு யாரும் பணத்தை இழக்கக் கூடாது.

ஆசை கண்ணை மறைக்கும் போது ஒரு தடவைக்கு மேல் பல தடவை நாம் யோசித்தே ஒரு முடிவுக்கு வர வேண்டும். கிஷோர் நல்ல படித்திருந்ததால் வாழ்வில் மீண்டு முன்னுக்கு வந்துவிட்டார். ஒரு தோல்வியைக் கண்டபோதும் அதிலிருந்து தளராமல் மீண்டும் போராடி வெற்றியும் கண்டுவிட்டார்.

"ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருக்கிறாள்" என்ற கூற்று உண்மைதான் என்பதை மிகச் சரியாகச் சங்கீதா தனது செயலால் அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறாள். ... இது எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான உண்மைதான்.

**டீன் கபூர்**

# வெற்றுக் கதிரைகளின் நிழல்

நான் பேச எழுந்தபோது
கதிரைகளில்
யாரும் இருக்கவில்லை.
ஆனால்
கதிரைகளின் காலியிடங்களில்
மங்கிய நிழல்கள்
மூச்செடுத்தது போலத் தோன்றின.
ஒரு நாற்காலியின் கைப்பிடியில்
பழைய குரல் ஒன்று
சிக்கிக் கிடந்தது.
அது என் சொற்களை
தன் தொண்டையில் விழுங்கியது.
நான் பேசும் போது
ஒலிகள்
சுவரில் மோதாமல்,
அமைதியின் ஆழ்குழியில்
மாய்ந்தன.
அந்த மேடை
என் உடலைத் தாங்கியபடி
என் குரலை
மெல்ல விழுங்கிக் கொண்டிருந்தது.



**சே கார்கவி கார்த்திக்**

# அந்த ஓரிரு மணித்துளிகள்

நீண்ட நேரமாக சுற்றிக் கொண்டிருந்த்து
சீலிங் பேன்
எப்போது அமர்த்துவாய் எனும் கேள்விகளுடன்

அப்போதுதான் ஒட்டடைக் குச்சியுடன்
மனைவி நுழைகிறாள்
வீட்டினுள்
எழுந்தரிங்க வென்று.....

நீண்ட நேரமாக எரியும் விளக்கிலும்
காற்றை சுழற்றி
வெப்பம் தணிக்கும் விசிறியிலும்
அப்பாவின் கைவண்ணம்

வாசலில் யாரோ அழைப்பது போன்று
அசரீரி எழுப்பல்கள்

களைப்புடன் வந்தமர்ந்த அப்பாவிற்கு தாகம் தீர்த்திட
தொண்டைக்குழியில்
நீரோடும் சத்தம்

எல்லாம் ஒன்றமர்ந்து
எனது செவிகளை துளைத்தது
மின்சாரம் கைவிட்ட அந்த ஒரிரு மணித்துளிகளில்....

யாரும் பார்த்துவிடாத எதிராளி நான்
படுப்பறிவற்ற திருடனின்
கையில் கிடைத்த
கூர் மழுங்கிய உளி நான்

இழுத்து கட்டிய கயிறிறின்
கடைசியான முடிச்சு நான்
இதயத்தின் ஓரமாய்
துடிக்கும் நீணநீர் முடிச்சு நான்

நிர்வாணத்தை
களையத்தொடங்கியதும்
யாரும் காணாத வெட்கம்
நான்

இடை நழுவிய விரல்களில்
வெட்டப்படாத
நகங்கள் நான்

எப்படியாவது சென்றுவிடலாம்
என
காத்திருப்பு பட்டியலின்
கடைசி கசங்கிய நுனி நான்

அவன் உனக்கு கொடுக்கபோவது
மிதிகட்டைகள் உழுத்துப்போன
ஏணியொன்று
ஏறி உடைவதற்கு பதிலாக
உயரப் பறக்க பழகு

பிடித்த கரங்களெல்லாம் விலகட்டும்
வெற்றி கரங்களில்
நெழிந்தாடும் புழக்களெனும்
தயக்கங்கள்

ஒரு முறையாவது சொல்லிவிடத்தான் காத்திருக்கிறது
அந்த உண்மை

யாரேனும் முன்னரே சொல்லியிருந்தால்
கண்டிப்பாக அதன் வாய் மௌனத்தைதான்
சொல்லியிருக்கும்...

எதற்காக இந்த மௌனமென
யோசித்த காலகட்டத்தில்
ஒரே ஒரு உண்மை மட்டும் கையத்துக் கொண்டே
இருந்தது

இருக்கட்டும்
என்றாவது ஒருநாள் எவருக்கும் கைக் கட்டி
சொல்லிவிடாத உண்மையாய்
அது கண்டிப்பாக குரலெழுப்பும்

அன்று கண்டிப்பாக உண்மையெனவே
கருதப்படும்
அதுவரை அதனை மௌனிக்க விடுங்கள்
உண்மை உறங்கட்டும்

பாவலர் கருமலைத்தமிழாழன்

# அன்றைய அம்மாக்கள்

காலைமணி ஐந்திற்கு மேலும் கங்குல்
காட்டுமணி பத்திற்கு முன்பும் அம்மா
காலைநீட்டிப் படுக்கையிலே படுத்தி ருக்கும்
காட்சிதன்னை அந்நாளில் கண்ட துண்டோ !
சேலையினைச் சொருகிடுப்பில் விடியு முன்பே
செவ்வண்ணப் பொடிகளிலே கோலம் தன்னைச்
சோலைமலர் அழகினிலே நெஞ்ச மெல்லாம்
சொக்குமாறு போடாத நாளு முண்டோ !

சிற்றுண்டி உண்பித்துப் பள்ளிக் கூடம்
சீருடையில் அனுப்பாத நாளு முண்டோ
நற்சுவைதாம் இல்லையென்று விடுதி சென்று
நண்பகலோ இரவுணவோ உண்ட துண்டோ !
உற்றதொரு வீட்டுவேலை செய்வ தற்கே
உடனாளாய் வேலையாளை வைத்த துண்டோ
நற்கணவன் பெற்றோரைப் பேணு தற்கு
நாவினிலே சுடுசொற்கள் உதிர்த்த துண்டோ !

வீட்டிற்கு வருகின்ற சுற்றம் கண்டு
விரைத்துமுகம் கடுகடுப்பாய்ச் சுழித்த துண்டோ
காட்டாக உவமைகளில் சொன்ன தன்றிக்
கணவனவன் பெயர்தன்னை உரைத்த துண்டோ !
கூட்டாகக் குடும்பத்தைக் காத்த தன்றிக்
கூறுபோட்டுப் பிரிப்பதற்கு நினைத்த துண்டோ
மாட்டுப்பெண் தனைமாண்பு பெண்ணாய் அன்று
மதித்ததாலே பொலிவுடனே திகழ்ந்த தில்லம் !

# உறவுகள் என்பது கண்துடைப்பே சுந்தரிமணியனின் ‘தவம்’ சிறுகதை – ஓர் விமர்சனப்பார்வை

திரு.சமயக்கண்ணு

**ஊ**டறு இணைய இதழில் வெளிவந்த ‘தவம்’ என்ற கதை படித்தேன். இந்தக் கதை ஒரு கற்பனையே என்றாலும்..இது பற்றி எங்கோ நாம் ஒருவர் இல்லத்தில் இருந்து நேரில் பார்ப்பது போன்ற உணர்வு ஒளிர்கிறது என்பதில் ஐயம் இல்லை.

அந்தி மாலை. இள வெயில். அந்த இதமான வெயிலை ரசித்துக் கொண்டு இருந்தாள் கண்மணி. அது போல் முதுவேனில் காலத்தில் இயற்கையின் அழகும் ஏற்றம் பெற்றிருக்கும்.... என்பது அவள் எண்ணம்.

அவள் வீட்டில் பூத்து இருந்த செம்பருத்திப் பூ ஒன்று...என் அழகைக் கூட நீ ஏறிட்டுப் பார்க்க மாட்டாயா? என்று கேட்பது போல் தலையை நீட்டி எட்டிப் பார்த்ததாம். அந்தப் பார்வை எப்படி எனில் அது ஓர் நல்ல ‘பால் ரோஸ் கலரில்’ அதன் இதழ்கள் விரிந்து மலர்ந்திருந்தனவாம்! ஆசிரியர் இங்கே இயற்கையோடு ஒன்றி மகிழ்வதைப் பின்னிப் பிணைந்து இக்கதை நுழைவு வாயில் இருப்பதை கண்மணி மூலம் நமக்கு அழகுபடக் கூறி மகிழ்வதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அது மட்டுமல்ல தவிட்டுக் குருவிகள் எல்லாம்....

‘கீச் கீச்’ என்று அந்த அருமையான மாலைப் பொழுதைத் தாலாட்டி வரவேற்றுப் பாடிக்கொண்டு இருந்தனவாம். ஆசிரியர் பார்வையில் மலர்ந்த அந்த மாலை மணிப்பொழுதை நாமும் மறக்க முடியுமோ?.

அது மட்டுமல்ல கண்மணிக்கு மனதில் இருந்த அழுத்தமெல்லாம் வடிந்திட இந்த இனிய இயற்கை தான் மிகப்பெரிய வடிகாலாக இருந்ததாம்!

இருப்பினும் வீட்டில் இருந்து வந்த கார்முகிலனின் ‘முனகல் சத்தம்’ தன்னையும் அறியாமல் ஒரு அலுப்பை உண்டு செய்ததாம்...

எத்தனை காலம் தான் இந்த நிலை? அடக்கடவுளே இதிலிருந்து விடுபட்டு ஓடிப்போய் விடலாமா என்றும் அவளை எண்ணச் செய்ததாம். ஆம்! அவளின் மனநிலை எப்படி இருந்தது என்பதை ஆசிரியர் விவரிக்கும் விதம் அருமை..

ஒரு பெண்ணின் அடுக்கடுக்கான கடமைகளைப் படிக்கும் நம்மை ஒரு வகையில் வியப்பில் ஆழ்த்துகின்றன. அதாவது அதிகாலை எழுந்து சமைத்திட வேண்டும், நோய்வாய்ப்பட்ட கணவன் கார்முகிலனுக்குப் பல் துலக்க பிரஷ் எடுத்துக் கொடுத்ததோடு....அதில் பேஸ்ட் வைத்தும் கொடுக்க வேண்டும், வாய் கொப்பளிக்கச் செய்திடல் வேண்டும், அது மட்டுமா? பெட்பேன் வைத்து கழிவை எடுத்துக் கொட்டிச் சுத்தம் செய்யவேண்டும். தலைவிதி ஒருத்திக்கு தாவிக் குதித்து வந்த கொடூரத்தை ஆசிரியர் விளக்குவது... தாங்க முடியா வலியால் துடிக்கும் கண்மணிக்கு அல்லவா தெரியும்.

இவ்வளவும் செய்துவிட்டு ....சாப்பிட அமரும் போது...சாப்பாடும் ஒருவித வெறுப்பை மற்றும் அருவருப்பை உண்டு செய்கிறது.

இந்த நிலை ஒரு ஆறு மாதம்....அல்ல! ஒருவருடம் அல்ல...ஆறு வருடம் என்றால் தாங்குமோ தங்க மகள் கண்மணி இதயம்? அடேங்கப்பா... இன்னும் இவருக்கு சரியாவது போல் தெரியவில்லையே அவள் உள் மனம் பேசியது.

மருத்துவர் வசம் கேட்டால்... மேற்படி நோயாளியின் உடல் நிலைதேறினும் காலில் ஏற்பட்ட, 'வெரிகொஸ் பெயின்' இருப்பதால்...நடக்க முடியா வலி அவனை முடக்கி விட்டது என்று கூறிவிட்டார்.

மருந்து, மாத்திரை, மருத்துவமனை என்று அலைந்தது தான் மிச்சம்....

வருடங்கள் பல ஓடியும் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை...

காலையில் இருந்து ஒரே மாதிரியான வேலை.. மனம் மகிழ்ச்சி அற்று சோர்ந்து போனது, கண்மணிக்கு....

இதற்குத் தானா இனிய தமிழ்ப் புலவன் ஒருவன்....

'மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திருக்க வேண்டும்' என்று புகழ்ப் பாடல் பாடினான்... என்று கண்மணி நினைந்து நினைந்து பாடல் மீதும் நொந்து கொண்டாள்.!

தனக்கான சமையல்.... தனக்குப் பிடித்தமான சினிமா....கலை... இலக்கியம் என்ற ரசனைகள் காணாமல் ஓடிப்போயிட்டாலும் பரவாயில்லை. அது செத்த நிலை கண்டு அஞ்சினாள்..

உறவுகள் எல்லாம் தள்ளிப் போய் விட்டார்களாம்... எப்போதும் கூட எவரும் வந்து எட்டிப்பார்ப்பதில்லையாம்.... படுக்கையில் படுத்தபடி கிடக்கும் கணவனின் நிலை அவள் வாழ்வை இப்போது மட்டுமா பாழாக்கியது....

இல்லை..! இல்லை...!

கண்மணி அழகும் வயதும் கண்ணுக்கு விருந்தளிக்கிற வாலிப வயதில் அவள் 'துறு துறு'என்று இளமை கொஞ்சும் காலம்...எங்கோ தேடினும் கிட்டாது மறைந்து?

மனம் மகிழ்ச்சி மருந்துக்குக் கூட இல்லை...

வானில் பறக்க நினைத்த காலம் முதல்...அவள் ஏக்கத்திலேயே மடிந்து போனாள் இயற்கையும் இளமையும் தந்த பேரின்ப வாசலில் நின்று...இன்பத் தூறலில் மகிழ்ந்து நனைந்திட நினைத்த அந்த மாது. ஆசைக்குக்கூட ஒண்ட வில்லை ஓர் பிறவிப் பயன் தரும் பனிப் பொழிவில் என்று விசனப்பட்டு பெருமூச்சு விட்ட தன் ஏக்கத்தை... விதியை யாரிடம் போய்க் கூறுவது?

ஆசிரியர் இந்த இடத்தை விவரிக்கும் விதம் அருமை... ஆம் எல்லோராலும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

மேலும் கண்மணி பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின் வீட்டில் ஓரளவு சுகமாக இருக்கலாம் என்ற கனவும் விரைவில் தகர்ந்தது...

தன்னுடைய உடலும் காலப்போக்கில் சோர்வடைந்து வந்தது தெரிந்தாலும்....அதைப் பற்றி பெரிது படுத்தவோ... பேசவோ ஒருவருமில்லை...இவ்வுலகில்...

மகன் கபிலனுக்கோ அவனது படிப்பு மற்றும் அவனது வேலை பற்றி மட்டுமே சிந்திக்க நிலைமை சரியாய் இருந்தது...

அவன் மட்டுமே தனக்கான பிடிமானமாகக் கண்மணி எண்ணினாள்.

மகனிடம் பேசினால் மனதில் உள்ள கவலைகள் சற்றுக் குறையும் என்று நினைத்தாள்..

அதுவும் தன் கணவன் கார் முகிலனின்...உடல் நிலை மற்றும் மருத்துவம் பற்றி இருந்தால் பேச்சே ஒட்டு மொத்தமாய்ப் புளித்துப் போய் விடுமாம்.

இங்கே ஆசிரியர் ஒரு இல்லத்துச் சூழ்நிலை அதோடு ஒட்டிய உலக இயல்பு சூழ்நிலைப் பற்றி அப்படியே உரித்துக் காட்டும் விதம் மிக அருமை அன்றோ?

வீடு தாண்டிய விசயங்கள் பேச மனம் அலைபாயும். ஆனால் நேரமின்மையால் பிறகு பேசலாம் என்று கபிலன் அம்மாவிடம் கூறுவான். அதோடு ஊமை ஆகிப் போய் விடுவாள் கண்மணி...

அன்றொரு நாள் திடீரென்று கார் முகிலனுக்கு மூச்சுத் திணறல் வந்தது..

கபிலனிடம் அறிவுரை செய்து ஆம்புலன்சுக்கு போன் செய்து....

உடனே கபிலனும்... கண்மணியும்..டிரைவரும் கார் முகிலனை மருத்துவமனையில் சேர்த்தனர்.

சாதாரணமாகச் சரியாகிவிடுவார் என்று நினைத்த கண்மணிக்கு....டாக்டர் 'பிழைப்பது சிரமம்' என்று கூறியவுடன் திடுக்கிட்டுப் போனாள். மகனும்... தாயும் நண்பர்களும் கலந்து பேசி முடிவெடுத்து...கார் முகிலனை வீட்டுக்குக் கொண்டு போக திட்டமிட்டநேரம்...

கண்மணி, "இல்லையப்பா வேண்டாம்... வீட்டுக்குக் கொண்டு போய் என்ன செய்யபோகிறோம்? அவர் கூடப் பிறந்தவர்களுக்குத் தகவல் சொல்லியும்.... ஒருத்தர் கூட எட்டிப் பார்க்கவில்லை"

இந்த இடத்தில் ஆசிரியர் ஓர் அருமை விளக்கத்தைக்

கூறுகிறார்....

அதாவது சொந்த பந்தங்கள் கூட...சொத்துச் சுகத்தோடு... ஏற்கை சேர்க்கையோடு கண்ணுக்குத் தைக்கும் வாழ்க்கை வசதியோடு இருந்தால்தான் அதற்கென்று அவர்கள் பார்வையில் ஒரு கெத்து நீண்டு மதிப்பு மரியாதை ஓடிவரும்.

இல்லை என்றால் எல்லாம் முகமூடி மனிதர்களாய் சந்தர்ப்பவாதிகளாகவே இருப்பார்கள். ஆனால் பாசம் படிந்து உறைந்து போன பக்கா சொந்தங்கள் 'கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே' என்ற கொள்கை அடிப்படையில் வாழ்வின் கடைசி எல்லைவரை உயிருக்கு உயிராய் இருப்பார்கள் என்பது மெய்யாம். அதே நேரம் கார் முகிலனின் சொந்த பந்தமோ கூடப் பிறத்தோர் எவரும் எட்டிக் கூடப் பார்க்கவில்லை என்ற விசனம் கண்மணிக்கு இருந்ததை ஆசிரியர் இன்றைய உலக நடைமுறை எப்படிப் பட்டது என்பதை விளக்குவது அருமையிலும் அருமை.

கார்முகிலனும் மருத்துவமனையிலேயே கண்ணை மூடினான்...

ஏற்கனவே கண்மணி எடுத்த முடிவுப்படி கபிலனும் ஒத்துழைத்து....

உரிய நேரத்தில் மின் மயானத்தில் கொண்டு போய் தகனம் செய்தனர்..

கண்மணியின் நெருங்கிய தோழி மறு நாள் வந்து காலமானவரை வீட்டுக்குக் கூட கொண்டு வரவில்லையே... என்ற விபரம் பற்றிக் கேட்டபோது....

ஊரைக் கூட்டி அழுவதால் யாது பயன்? என்றும் சொந்தம் பந்தம் உடன் பிறந்த எவரும் எட்டிக்கூட பார்க்காத நிலையை எடுத்துரைத்துக் கண் கலங்கினாள். நோய் வாய்ப் பட்டவரோடு ஆறு ஆண்டு அவதிப்பட்டும் எந்தப் பயனும் இன்றி எங்களையும் விட்டுச் சென்றார் என்று கண்மணி கண் கலங்கி சோகத்தில் நிலை குலைந்த போது, ஆதிரை கைகளைப் பிடித்து ஆறுதல் கூறினாள்.

ஏதோ கபிலன் என்ற பிள்ளையைத் தான் பெற்றதோடு.. என்ன பாவமோ கண்மணி எந்த ஒரு சுகத்தையும் தான் அடையவில்லை...என்று கண் கலங்கினாள். அவள் வாழ்வு போல் வேறு எந்த ஒரு பெண்ணுக்கும் இப்படி அமைந்து விடக்கூடாது என்பதே ஆசிரியர் கூறும் அறிவுரை....

இந்தக் கதையில் ஒருவர் வாழ்வும்... அவனுக்குத் துணைவியாய் வந்தவள் வாழ்வும் எந்த அளவுக்கு சோகப் புயலில் சிக்கித் தவித்தார்கள் என்பதும்.... உற்றார் உறவினர்.. உடன் பிறந்தார் எல்லாம் ஒரு சிலர் வாழ்வில் வெறும் கண்துடைப்பே என்று ஆசிரியர் எடுத்துரைப்பது உண்மையிலும் உண்மை..வாழ்க ஆசிரியப் பெருந்தகை.

நடேஷ் கன்னா, கல்லிடைக்குறிச்சி

# புதுக்கவிதைகள்

உலகின் மிக ஆழமான
அன்பின் முதல் கேள்வி
நீ சாப்பிட்டியா என்பதுதான்

❍

யார் வேண்டுமானாலும்
யாரையும் சுலபமாக ஏமாற்றி
விடலாம்
ஆனால் தன் மனசாட்சியை
ஒரு போதும் ஏமாற்ற முடியாது

❍

வளர வேண்டும் என நினைத்தால்
உங்கள் மொத்த பரம்பரையே
உங்கள் காலத்திற்குப் பின்
உங்கள் பெயரை சொல்லும் அளவுக்கு
நிலைத்து இருக்க வேண்டும்

❍

ஒரு ஆண் சொல்வதை
அவன் மனைவி பொய் என்று
கண்டுபிடிக்க முடியாவிட்டால்
உலகில் எந்த கொம்பனாலும்
கண்டுபிடிக்க முடியாது

❍

ஒரு காலத்தில் வாக்காளர்கள்
அரசாங்கத்தை தேர்வு செய்தனர்
ஆனால் இப்போது அரசாங்கம்
வாக்காளர்களை தேர்ந்து எடுத்து
வருகின்றனர்

இரா.வெங்கடேஸ் குமார்

# விழிகள் மட்டும் பேசிடும் மொழிகள்

முடியாத வானின் அளவில் துளியே விழி காணும் ஒளிகள்
ஆயிரம் துளியை மாரி பொழிந்தும் கடலில் மேலே சிறு தூரல்
ஆழியின் அலையில் சில அலையே தொட்டிடும் கரையில்
கற்பனை கரையின்றி எழுந்தும் சில வண்ணமே ஓவியத்தில்

ஓசைகள் ஓய்வின்றி ஒலித்தும் ஒருசில மட்டும் சொல்லாகும்
மனதோடு ஆயிரம் சொல் தொடித்தும் ஒருசில மட்டும் கானமாகும்
மரத்தோடு மலர் எத்தனை பூத்தாஅலும் ஒருசில மட்டும் கனியாகும்
நிகழ்வுகள் தினம் எத்தனை கடந்தாலும் ஒருசில மட்டும் நினைவாகும்

நினைவுகள் நிதம் தேக்கிடும் சேமிப்பு கோப்பை தான் மனமே
நினைவுகள் நித்தம் சேர்க்கையில் இருந்து தான் உயிர்க்கிறது மனிதமே
நினைவுகள் நிரைக்கையில் தான் அன்பு, பாசம் மனதில் ஊருமே
நினைவுகள் தொடர்கையில் மட்டும் தான் நாம் இவ்வுலகின் பந்தமே

ஆழமாய் நினைவுகள் கொண்டும் துளி வார்த்தை இல்லையே
அழகாய் ஒளிகள் இருந்தும் நினைவை காட்டும் காட்சிகள் இல்லையே
ஆசையாய் கானம் ஒலித்தும் நினைவின் தாகம் அடங்கவில்லையே
கவர்ந்திடும் வாசம் நாசி தொட்டும் நினைவின் மணம் நெருங்கவில்லையே

விழி கானாத வானின் துளியையும் நினைவோடு கற்பனை சேர்க்கும்
சேராத காதல் நிகழ்வோடு மட்டும் தான் நினைவில் சேர்ந்திருக்கும்
நினைவுகள் மொழியில் வார்த்தைகள் இன்றி பரிமாற்றம் நடக்கும்
விழிகள் மட்டும் பேசிடும் மொழியில் அதிசியமாய் உலகமே இருக்கும்.



ம.ஆச்சின்.

## பசுமை நெஞ்சின் ஓய்வு.!

நெற்கதிர்கள் முத்தமிடும் நிலம்,
நிழலாடும் தென்னை மரம்.
சோர்வுற்ற உடல் சாய்ந்திருக்க,
சிறு நிமிட ஓய்வு பரவசம்.
பகலின் வெப்பம் சுடர்கொடுத்து,
பசுமை காற்று குளிர்ந்தழைத்து.
வெயிலின் நடுவே கனவு வந்தது,
வீழ்ந்த பனித்துளி நெஞ்சில் கலந்து.
வாழ்க்கை சுமைகள் தோளில் இருந்தும்,
வானம் தந்த அமைதி திருந்தும்.
நெல் வயல் பாடும் தாலாட்டில்,
உழைப்பின் முத்தம் மனம் நிறைந்தது.
சேற்றின் வாசம் சுகம் பரப்ப,
சேமித்த வியர்வை சுவை தருகிறது.
பசுமை பூமி தாயின் அரவணைப்பு,
பணியாளனுக்கு பரிசாகிறது.
மரத்தடி நிழலில் ஓய்வெடுத்தால்,
மனமும் மலரும் மலரொன்றுபோல்.
நாளை மீண்டும் உழைப்பதற்காக,
இன்றைய சோர்வு கனவாகிறது.!!

அ.சீனிவாசன்

## களையும் பூக்கின்றது..

அது நெல்லென்று
களைக்குத் தெரிவதில்லை
அது களையென்று
நெல் பழிப்பதில்லை.

தாங்கும் மண்ணுக்கும்
பொழியும் மழைக்கும்
புல்லென்றும் நெல்லென்றும்
பாரபட்சம் கிடையாது.

பசுவின் வாயும்
யானையின் காலும்
வித்தியாசம் பார்ப்பதில்லை
நெற்பயிரையும் களைச்செடியையும்..

களையும்
கலையாகத் தான்
விழுகிறது
கலை தேடும்
விழித்திரைகளில்..



## மீ. யூசுப் ஜாகிர், வந்தவாசி

எங்கள் குடும்பத்தின் ஆதி
தேவதை இறந்து விட்டாள்.,
விழுதுகளை தாங்கி நிற்கும்
ஆலமரமாய், உறவுகளை
தாங்கி நின்றவள்.,

தாய் பெற்றெடுத்த பிறகு
மீண்டும் உயிர் தந்தவள்.
பாதுகாப்பாய் வளர்த்தவள்.,

நான் நேசித்த முதல் பெண்..,
நான் காதலித்த முதல் காதலி..,
நான் நேரில் பார்த்த முதல் தேவதை..
என் பாட்டி.

அம்மாவை விட பாட்டியை அதிகம்
பிடிக்க அவள் வளர்ப்பு
ஒரு காரணமாக இருக்கலாம்..,
அதையும் தாண்டி அவளின்
பாசம், தன்னம்பிக்கை, வைராக்கியம்
எல்லாமே அவளைப்போலவே
வாழவேண்டும் என்று மனதில்
விதையிட்டதும் காரணம்.

என் மனதில் இரக்கத்தின் கதவுகளை
திறந்து வைத்தவள்,
யாரையும் எதிர்பார்க்காத
வைராக்கியத்தை என்
மனதிலும் ஊன்றியவள்..,

எப்போதும் சிரித்த முகத்துடன்
சந்திக்கும் அவளை பிடிக்காது என்று
சொன்னவர்கள் யாருமில்லை.
பெற்றெடுத்த பிள்ளைகள் எட்டு..,
பெறாத பிள்ளைகள் எண்ணிக்கையில்லை.

யாருக்கும் இல்லையென்று
சொல்லாமல் அன்னமிடுவாள்.
யாரும் கேட்காமலே
ஆசி தரும் தேவதை அவள்.

72 வயது வரை அவள் சந்திக்காத
சோதனைகள் இல்லை,
சோதனைகளை கடந்து அவள்
ஒரு சாதனைப்பெண்மணி
நல்ல மகளாக,
நல்ல சகோதரியாக,
நல்ல மனைவியாக,
நல்ல தாயாக,
நல்ல மாமியாராக,
நல்ல பாட்டியாக..,
இப்படி எல்லாவற்றிலும் அவள்
நல்லவள் தான்..!!!

நான் நேசத்தை வெளிக்காட்டி
கொள்வதில்லை அவளைப்போல
எல்லாவற்றையும் மனதிற்குள்ளே
வைத்துக்கொள்ளப் பழகிக்கொண்டேன்..!!!

அவள் சுறுக்குப்பை சில்லறை காசுகள்
எனது மழலைப்பருவத்தை சுமந்தது.
அவளின் தன்னம்பிக்கை மிகுந்த
பேச்சுக்களால் தான் நான் பல
வலிகளிலிருந்து மீண்டு வந்திருக்கிறேன்.

மற்றவர்களுக்கு எப்படியோ
எனக்கு அவள் மட்டும் தான் தேவதை..,
மரணத்தின் வேளையிலும்
பிள்ளைகளுக்காக பிரார்த்தனை செய்யும்
அவள் தேவதையாக இல்லாமல்
யாராக இருக்க முடியும்..!!!

பௌர்ணமி நிலவை முகத்தில் ஒற்றி,
உயிரற்று,சலனமற்று கிடக்கும்
என் தேவதையின் உடலைக் காணும் போது..,
என் உயிரை கொஞ்சம் கிள்ளியெடுத்து
அவளுக்கு கொடுத்து உயிரோடு
எழுப்பிடத் தவிக்கிறேன்.

அதற்கு எந்த வழியுமில்லை..,
அவள் நிரந்தரமில்லாத இந்த உலகை விட்டு
விடுதலையாகி விட்டாள்.
நாங்கள் சிறைப்படுகிறோம்
அவள் நினைவுகளில்..!!!

அவள் மரணிக்கவில்லை மீண்டும்
மலர்ந்திருக்கிறாள் சொர்க்கத்தின் வாசலில்.,
அவளின் மறுமை வாழ்விற்காக
பிரார்த்தனை செய்யுங்கள்..!!!

அ. லில்லி ஏஞ்சல், திருக்கோவிலூர்

# சொல்லெனும் நெருப்பு.....

*நெருப்பே...நெருப்பே....உன்னிட மிருந்து
நீசரைப் பொசுக்கும்
வல்லமை கேட்டேன்....*

*நேரில் ஒன்றும்
நினைவில் ஒன்றும்
கூறும் நாக்கின்
கொள்கை யென்ன?*

*பேரும் புகழும்
இருந்தும் என்ன
பேச்சில் ஈரம்
துளியு மில்லை*

*ஊரும் உலகும்
கூர்ந்து பார்க்கும்
உண்மைத் தெரியும்
தூரம் இல்லை.!*

*சொல்லால் மனத்தை
சல்லடை யாகத்
துளைக்கத் தானே
செய்கின்றார்*

*கல்லாய் இதயம்
கனத்துப் போகும்
காயம் ஆறிட
காலங்கள் ஓடும்*

*நில்லா உலகில்
நிம்மதியை மனம்
நிறைந்த சொல்லால்
வர வழைப்போம்*

*கொல்லும்சொல்லை விட்டொழிப் போம்மனம்
வெல்லும் சொல்லைத் துணைக் கழைப்போம்!*

*கண்ணே என்பார் கனியே என்பார்...
மின்னிடும் வார்த்தையில் பொய் மிதக்கும்....*

*முன்னே ஒன்றும்
முதுகில் ஒன்றும்
மூடர் கூட்டம்
வாய் திறக்கும்*

*பொன்னை பொருளை
பார்த்தால் மனதும்
கண்ணிய மின்றி
பல்லிளிக் கும்*

*எண்ணிட எண்ணிட.
இவர்தம் செயல்கள்
எரிச்சல் மனத்தில் வர வழைக்கும்!*

பார்வதி பாலசுப்ரமணியம்

# காதல் ஓவியம்!

காந்த அலை அழைத்து வரும்
ஒளி எழுத்துக்களில் தளும்பி வழியும்

நேசத்தை பருகிய படி ஒவ்வொரு நாளையும்
துவங்குறேன்

புத்துணர்வூட்டும் எண்ணப் பகிர்வுகள்
சுவை மிகுந்த தேநீராய் தித்திக்கிறது

விடியலில் ஆதவனோடு ஆலபனைக்கீதம் பாட
இசை சுமந்தபடி இறகுதிர்க்கும் மென் தீண்டல்
ராகத்தில்
இதயத்தில் மின்னல் வெட்டுக்கள்

இடம் வலமாக மாறி மாறி ஓடி
இனிமை சேர்க்கும் அதன் மெட்டுக்கள்

எழுத்துருக்களில் எழுந்து வரும் உன்னை
ஏந்திக்கொள்கிறது மனம்
காதல் விதையொன்றை நட்டு வைத்து
காத்திருக்கிறேன்
அது அன்பையே நகலாக்கி பூக்கும் என்று

பெரும் வீரனின் கையிலிருக்கும் கூர் வாளாக
வளைந்து நிற்கும் இமைக்குள்
இறங்கி
அதன் பக்கச் சுவர்களில் பதுங்கிக்கொண்டது
உன் உருவம் ஓவியமாக

புற பிம்பகளிலும் உன் பிரதிபலிப்பு
அகச்சுவரில் ஆராய்கிறேன் ஆழப்
பதிந்திருக்கிறது
உன் அழகோவியம்!



## ஆதி.பார்த்திபன்

# கணம்

மிகப்பெரும் ஞானம்
அளப்பெரும் காமம்
கதகதக்கும் உள் குளிர், உன் நாவுலரப் பேசு ஒரு கணம்
உருக்கிப் பருகிய உடல் சாறு, நம் உடல் திறக்க அணை மறுகணம்
உள் உணர்வெல்லாம் நீ முன் நிற்க கலங்கும் கணம் இக்கணம்
உடல் தழுவி உடல் பிளக்கும் தீக்கங்கு இருந்தும்
அந்தரத்தில் குளிர் விறைக்கும் நறும்மழை
அது அப்பிய புள்ளின் சிறகெனவுன்
கண்முன் சிலகணம் சிலிர்ப்பேன், அணைத்து முத்தமிடு இக் கணம்
இளமைக்கும் முதுமைக்கும் இடையில் நாம்
ஊடாடும் பருவமிது, மிகப்பெரும் ஞானம்
அளப்பெரும் காமம்
சித்திரத்தின் முதல் பென்சில் கோடுகளென அலையும் உன்
நெற்றிப் பிறையின் நரையினில் தானே இன்றும் வாழ்கின்றேன் வா
இன்றெனும் பொழுது கணத்தில் மின்னி மறையும்

நன்றி:முகநூல்



---

## நேசன் மகதி

# சொர்க்கத்தின் வாசற்படி

மேளதாளம் முழங்க
மண விழா முடிந்த கையோடு
விருந்துண்ட பின்
நீண்டநாள் காணாத உறவுகள் ஆர அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்
புகைப்படம் எடுத்து ஓய்ந்த மணமக்கள்
சில வார்த்தைகளை கிசுகிசுத்திருக்க
அலங்காரத்தில் இருந்த பலூன்களை பிரித்து எடுத்து
மண்டபம் முழுமைக்கும் மேலே பறக்கவிட்டு
குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்த அத்தருணம்
திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பெற்றதாகிறது..

## இளையவன் சிவா

பறந்திடும் மின்மினிகள்
கலைந்திடும் தியானம்
புத்தரின் புன்னகை

❍

எரியும் சுடர்
ஆடும் கடவுள்
தரிசனத் தடுமாற்றம்

❍

கண்ணாடியில் தெறிக்கிறது
நின்றுவிட்ட மழை
சாலையில் படுகுழி

❍

விளையாடி மகிழ்கிறது
சாலையில் யானை
கால்ச்சங்கிலி இழுத்து

❍

மரத்தின் நிழல்
குறைந்து வருகிறது
வெட்டும் கோடரி

❍

கப்பலின் பயணம்
காற்று வீசியும் கலையவில்லை
குழந்தையின் ஓவியம்

❍

கரைபுரண்ட வெள்ளம்
கடைசிவரை தேடுகிறது
நதியின் மணலை.

❍



வீட்டிற்குள் உலகம்
விடுமுறையில் பள்ளி
ஓயாத சமையலறை

❍

காட்டை உயிர்ப்பிக்கிறது
வெயிலில் கருகிய மண்
விதையின் விழிப்பு

❍

தெருவெங்கும் விளம்பரம்
தேட முடிவதில்லை
உண்மையின் விலை

❍

அரசியல் தஞ்சம்
அமோக வாழ்வு
முன்னாள் திருடனுக்கு.

❍

ஊர்தியில் ஓடுகிறது
ஊரைப் புறக்கணித்துவிட்டது
மணல் சுமந்த நதி

❍

எழுத்தில் இசை
உள்ளத்தில் ஒழுகுகிறது
கேட்பதன் ராகம்

❍

கடந்து போன மேகம்
கண்டும் இணக்கமில்லை
பாலை மனதில் நேசம்

❍

காத்திருக்கும் மனிதர்கள்
கண்டு ரசிக்கின்றன
மலைப்பாதை குரங்குகள்.

❍

நின்றுவிடும் தூறல்
நிலைத்து விடுவதில்லை
குடை பிடிக்கும் வாழ்வு

❍

பாடை கட்டினோம்
புதைக்கவே முடியவில்லை
சாதிச் சுடுகாட்டை.

❍

சிரிக்கும் நிழல்
நின்றபடி ரசிக்கிறது மரம்
உதிரும் கொன்றைப் பூக்கள்.

❍

விடைகளைக் கற்கும் குரு
வினாக்களோடு சீடன்
குழம்புகிறது ஞானம்.

❍

வெயிலை நிரப்பியது
வெறுமை கொள்ளாத மனம்
விரிதலே குடையின் அழகு

❍

பள்ளியெங்கும் நிறைகிறது
பதுங்கு குழிகள் திட்டம்
பாதாளத்தில் சமாதானம்

❍

நீடிக்கும் பசி
சபித்தபடி நடக்கிறான்
நாட்டுக்குள் அகதி

❍

பூங்கொத்து மலர
தேடித் திரிகிறாள் சிறுமி
தரைமட்டமான பள்ளியில்.

❍

ஓயாது பறக்கும் ஏவுகணைகள்
சுடுகாட்டைப் பிரசவிக்கின்றன
மனிதத்தைப் புதை.

❍

கரையோர மரங்கள்
காணக் கிடைப்பதில்லை
வெறுமையின் வேர்கள்

❍

பிள்ளைகள் விளையாட்டு
கண்டு தவிக்கிறது
திண்ணையில் கிடக்கும் கிழவி

❍

சுருக்குப் பைக்குள் நடுங்குகிறது
கிழவியின் கைகள்
காசுகளில் ஒட்டியிருக்கும் காலம்.

❍

வற்றிய குளமெங்கும்
சிரித்துக் கிடக்கிறது
கூழாங்கல் வெயில்

❍

வாடியும் உதிராத பூக்கள்
விரிந்து சிரிக்கின்றன
மொட்டுகளில் வேரின்
வெளிச்சம்.

❍

நெகிழிப் படகுகள்
நீந்திக்கொண்டிருக்கின்றன
நிலமிறங்கா மழையில்.

❍

எண்ணற்ற காலடிகள்
வழி விடுகிறது மணல்
வாசிக்க வரும் காற்று

❍

வெள்ளம் விடு தூது
மலையின் கொதிப்பு கரைகளைப்
புசிக்கும் நதி

❍

இப்போது நுகர்வோம்
மரம் எங்கும் பூக்கள்
சாலையாகலாம் நாளை.

❍

விரியும் அலை
பறவை தாங்கும் பசி
குளமெங்கும் வலை

❍

நிலைபெறுவதில் நிம்மதியற்று
கடந்துவிடுகிறது தேனீ
பூந்தோட்டத்தின் வாசம்.

# தமீம்.அசாருதீன் கவிதைகள்

*நான் தான் சாமி என்றால்*
*கேள்விகளற்று காலில் விழுகிறான்*
*சக மனிதனை காலால் உதைக்கிறான்!*

*ஒவ்வொரு வருடமும் புதுப் புது*
*சாமிகள்!*

*கடவுளுக்கு ஒரே*
*கேள்வி யார் சாமி*
*நீங்க எல்லாம்!*

❍

*இப்படியும் சிலரை சந்தித்தோம்*
*அனுபவப்பட்டோம் அவ்வளவே !*

*ஏமாந்துவிட்டோமே என்று புலம்பி*
*தீர்க்க அல்ல...*

*இறுதியில் ஒரு கெட்டவனிடமிருந்து*
*ஒரு நல்ல பழக்கத்தை கற்க*
*காலம் தரும் பிரம்படி !*





பாக்யபாரதி, தருமபுரி

# உன் ஒளி நீயே!

அவமானத்திடம்
உன் மனதை
அடமானம்
வைத்துவிடாதே
மீட்க முடியாமல்
மரணமே மிஞ்சும்!

துரோக வலைக்குள்
சிக்கிக் கொண்டதற்காக
துளிகூட வருந்ததாதே...
கவனமாயிருக்க
வாழ்க்கை
கற்றுத்தரும் பாடமது!

விழுந்து விட்டோமென்று
அழுது புலம்பாதே...
உயரத்திலிருந்து
குதிக்கும் அருவியை
உற்றுப் பார்
விழுந்தவுடன் எப்படி
எழவேண்டுமென்பது புரியும்!

மரக்கிளையில் தொங்கும்
தேன்கூட்டை
மறுபடியும் சென்றுபார்
உறுதியுடன் எப்படி
உழைக்க வேண்டுமென்பது தெரியும்!

அருவியோ தேனியோ
அடுத்தவர் உதவியை நாடியதில்லை!
தன் பாதையிலுள்ள தடைகளைத் தகர்த்தெறிய
தடுமாறியதில்லை!

உனக்கு நீதான் உரம்!
உனக்கு நீதான் பலம்!
உன் ஒளி நீயே!

தன்னம்பிக்கை
உனக்குள் இருக்கட்டும்
முயற்சி
உன்னுடன் இருக்கட்டும்

துயரங்களைத் தூக்கியெறி
உயரங்கள் உனக்காக
காத்துக் கிடக்கின்றன!



# யக்ஷன்

ரஞ்சகுமார் (அவுஸ்திரேலியா)

ஒடுங்கிய ரெயில்வேலைனைக் கடந்ததும் புறநகரம் ஆரம்பிக்கிறது. இந்தத் தண்டவாளத்தில் ஓடுகின்ற ட்ரெயின் கையடக்கமான பெட்டியைப் போலச் சிறியது. மலைகளிலிருந்து இறங்கி ஆறுதலாக நகருக்குள் ஓடி வரும் அது. தண்டவாளங்களுக்குச் சமாந்தரமாக, ஆனால் சற்றுத் தூரே விலகிச் செல்கின்ற தார் ரோட்டின் ஒரு வசதியான திருப்பத்தில் தெரிவதுதான் ''பன்சல''.

பன்சலவுக்கு நான் முதன்முதலில் சென்ற சந்தர்ப்பம் மிக அழகானது. கோடை காலத்தின் அந்திப்பொழுதொன்றில், திடீரெனச் சொல்லாமல் கொள்ளாமல் இறங்கிய பெருமழையில் எல்லாமே கழுவித் துடைத்துச் சுத்தம் கொண்டிருந்தன. மழை இருள் வானிலிருந்து விலகிக் கொண்டிருக்க, மறுபுறத்திலிருந்து இரவிருள் துரத்திக்கொண்டு வந்தது.

நகரின் சந்தடிகளிலிருந்து விலகி ஓடிப் போய், அமைதியான ஒரு தனித்தீவில் தவம் புரிவதெனத் தெரிந்தது பன்சல. விகாரையின் உட்பிரகாரச் சுவர்களில், யாரோ ஒரு புகழ் பெற்ற வட இந்தியச் சைத்ரீகன் தீட்டிய அபூர்வமான ஓவியங்கள் இருக்கின்றனவெனச் சொன்னார்கள்.

வளவு நிறைய முதிர்ந்த மரங்கள், ஏதோவொரு வினோத ஒழுங்கில் வளர்ந்திருந்தன. நுழைவாசல் எப்போதும் விரியத் திறந்தே கிடக்கும். அதைக் கடந்து ஒரு காலடி வைத்ததும், ''சைத்ரிய'' நான்கைந்து படிகளின் மீதேறி உட்கார்ந்திருப்பது தெரியும். அதற்குப் பக்கத்தில் விசாலமான கூடம் போன்று தெரிவது ''பணமடுவ''. இரண்டுக்கும் பொதுவானதாகவொரு பெருமுற்றம். முற்றத்தில் சொரிந்திருந்த பருமணல் ''பரபர''வென்று கால்களைத் தேய்த்துத் தரும்.

முற்றத்தின் இடதுபுறமாக ஒதுங்கியிருந்தது விஹாரை. மிகவும் சிறியதுதான், ஆனால் பவித்திரமானது. பெரியதும் சிறியதுமான நான்கைந்து அரச மரங்களின் இதமான நிழல். அரசமிலைகள் காற்றில் சலசலத்துக் கொண்டிருக்கும் ''கிண்'' எனும் கீதம்.

நிசப்தம் கொண்ட பணமடுவவைத் தாண்டிப் போனால், பின்புறத்தில் சாம்பல் பூத்துப்போன சிங்கள ஓடுகளும், அழுக்கேறிப் போய்த் தெரிகின்ற சிங்கள மரத்தூண்களும் கொண்ட ஒரு பழைய வீடு. சுவர்களின் பூச்சுக்கள் ஆங்காங்கே உதிர்ந்திருந்தன. வீட்டுடன் இணைந்தாற்போல பெரிய சமையல் கூடம். ஒரு நூறு பேருக்கு சமைக்கலாம். அருகே அம்பாரம் அம்பாரமாக குவிக்கப்பட்டுத் தெரிந்த விறகு.

வீட்டின் அறைகளில் சிலபேர் குடியிருந்தார்கள். ஒரு அறை மட்டும் காலியாகவும், தூசு நிறைந்தும், தனிமையின் ஏக்கத்துடனும் இருந்தது. இந்த அறையில்தான் புதிதாகக் குடிபுகுவதற்கு நான் உத்தேசித்திருந்தேன்.

மீதமான வளவெங்கும் தென்னை மரங்கள் கை கோர்த்திருந்தன. நிலமெங்கும் தலையசைக்கும் புற்கள். அவற்றினூடே ஓடிச்சென்று ஒளிந்து கொள்கின்ற ஒற்றையடிப் பாதை. அந்தப் பாதையின் முடிவில் வளவின் மறுமூலையில் செங்கற் சுவர்களினால் தன்னை மறைத்துக் கொண்டு நாணம் மிகக் காட்டியது ஒரு கிணறு. இதம் மிகத் தரும் ஒரு குழுமை அங்கிருந்து வீசியது.

நான் நகரத்துக்கு மீண்டும் திரும்பும் சமயத்தில், மழைத் துளிகளை ஏந்தி ஏந்தி மீண்டும் சொட்டி விளையாடிக் கொண்டிருந்த மரங்களின் கீழே, அம்மரங்களின் பாஷையைக் கிரகிப்பவரே போன்று தோன்றிய ஒரு சாதுவைக் கண்டேன். வயது இருபதுமிருக்கலாம், முப்பதுமிருக்கலாம். அன்றைக்குத் தான் தலையை மீண்டும் மழுங்கச் சிரைத்திருக்க வேண்டும். என்னைக் கண்டதும் ஒரு சிரிப்பு.... அப்பாவித்தனமான வெள்ளைச் சிரிப்பு! ஆனால் வெற்றிலைக் காவியோ வேறேதோ காவியோ படிந்து கறுத்துப் போய்த் தெரிந்தன பற்கள்!

அவரது கண்கள்...

அந்தக் கண்கள் மட்டும் மிக அமானுஷ்யமானவை. ஒரு வித குழப்பத்தில் ஆழ்ந்தனவேபோலும்... மற்றவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவனபோலும் இருந்தன அந்தக் கண்கள்.

ரெயில்வேலைனைக் கடந்ததும் பஸ்ஸிலிருந்து இறங்க வேண்டும். அவ்விடத்திலிருந்து பார்த்தால் ஒரு சேரி தெரியும். எந்நேரமும் அழுக்கில் மிதந்துகொண்டும், தூஷணை வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டும் முகத்தைச் சுளிக்கின்ற சேரி அது. சேரியை இருகூறாக வகிர்ந்து கொண்டு தண்டவாளங்கள் கவலையற்றுப் போய்க் கொண்டிருக்கும்.

தினமும் முன்னிரவு வேளைகளில் அலுத்துக் களைத்தவனாய் அறைக்குத் திரும்புவேன். விஹாரையின் முற்றத்தில் வரிசை வரிசையாகத் தெரிகின்ற "தகழி"களில் சுடர்கள் தேங்காய் எண்ணெயில் மிதந்து விழித்திருக்கும். நெருப்புப் பூத்தபடி புகையுடன் சேர்த்துச் சுகந்தம் பரப்பும் ஊதுபத்திகளுக்கு அவை காவல் புரிவதைப் போலிருக்கும்.

சைத்ரியவின் அருகாகப் போகும்போது, ஜன்னல் வழியாக துண்டு துண்டாக வெட்டப்பட்ட வெளிச்சக் கற்றைகள் படரும். அறைகளின் உத்தரங்களிலிருந்து நுளம்பு வலைகள் இறங்கி, கட்டில்களின்மேல் பரவுவது தெரியும். குறுக்கும் மறுக்குமாக கட்டிய கொடிகளிலும், கதிரைகளிலும், கட்டில்களிலும் "சிவுர" ஆடைகள் மஞ்சட் தோகைகளைப்போல விரிந்திருக்கும். சைத்ரியவின் பக்கமிருந்து எப்போதும் பச்சை மஞ்சள் கிழங்கின் சிறிதே காரமான நெடி வீசும். ஜன்னல்களிலும், கதவுகளிலும் மழுங்கச் சிரைத்த தலைகள் அவ்வப்போது தோன்றி மறையும்.

பூரணை தினங்களில் பணமடுவவிற்கு ஒரு கொம்பு முளைத்ததேபோன்று தோன்றுகின்ற ஒலிபெருக்கி அலற ஆரம்பிக்கும். மற்றும் நாட்களில் அங்கு நிரந்தரமான நிசப்தம் வாசம் செய்யும். இரவு நேரங்களில் ஒற்றை மின்விளக்கின் மந்தமான ஒளி, இருட்டில் தடுமாறும். இருட்டுடன் சேர்ந்து தானும் முணுமுணுத்தபடி சோமய்யா தொந்தி சரியப் புரண்டு புரண்டு படுப்பார். சாதுக்களுக்கு சேவகம் புரிவதுதான் அவரது உத்தியோகம். பூர்வாசிரத்தில் தேங்காய் வியாபாரமாம். எங்களது ஊருக்கெல்லாம் சோமய்யா போய் வந்திருக்கிறாராம். அதெல்லாம் அந்தக் காலம்!

ஒருதரம் சோமய்யா சொன்னார்:

"ச்சா.... உங்கட ஊரு தண்ணி மிச்சம் ரேஸ்ற் தானே"

பூரணை நாட்களில் சமையல்கூடத்தின் அடுப்புக்கள் "திகுதிகு"வென விளாசி எரியும். பெரிய பெரிய கிடாரங்களில் சமைக்கின்ற பெண்களின் கூப்பாடுகளும், வெக்கையும் நாளெல்லாம் நம்மை அடிக்கும். மற்ற நாட்களில் சோமய்யா சின்னச் சமையல்கள் செய்வார். ரீ போடுவார். ஜோதி சாது சோமய்யாவுக்குப் பின்னே கனகாரியமாக இழுபட்டுத் திரிவார். எந்நேரமும் சிரிப்பு.... கறுத்தப் பற்களைக் காட்டிச் சிரிக்கின்ற வெள்ளைச் சிரிப்பு.... சமயங்களில் தடம் புரண்டு "ஓ...ஹோ... ஹோ" வென்கின்ற அதிர்வெடிச் சிரிப்பு!

அந்தச் சிரிப்புடன் ஜோதி சாது அங்கும் இங்கும் பாய்ந்து திரிவார். இடுப்பில் விஹாரைக் கதவுகளினதும், சைத்ரியவின் கதவுகளினதும் சாவிக் கொத்துக்கள் பாரம் கூட்டும். எங்களது அறை வாசல்களில் திடீரெனத் தோன்றி மறைவார். சிரிப்பு மட்டும் "ஹெஹ்...ஹெஹே" என்று எங்களுடன் கொஞ்ச நேரம் நின்று விட்டு, அவர் பின்னால் ஓடிச் செல்லும்.

மற்றைய சாதுக்களோவெனில், மிகக் காரியார்த்தமானவர்கள்....

தமது கவிதைகள் காரணமாக தாம் எந்நேரமும் கைது செய்யப்பட நேரும் என கவலை கொண்டுள்ள பஞ்ஞாவாஸ சாது...

சோதிடம் பார்ப்பதில் புலி எனப் பட்டம் கொண்டுள்ள சாஸ்திர சாது....

கலை பற்றி ஓயாது என்னுடன் விவாதம் நடத்தி போரடிக்கிற மண்டாவள சாது....

எந்நேரமும் குமிண்சிரிப்புடன், தந்திரப் பார்வையும், அதிகார மிடுக்கும் கொண்டு வளைய வரும் நாயக்க ஹாமதுரு...

வாழத் துடிக்கும் "ஜொலி சாது"... அவர் அடிக்கடி சொல்வார்,

"இஹனகன இவருணாம மம மாஹன அத்த அரினுவ"

(படித்து முடிந்ததும் நான் துறவைக் கை துறப்பேன்)

பக்கத்து அறைகளில் வசிக்கின்றவர்கள் எல்லோரும் விடிய விடியத் தூங்குவார்கள். பிறகு, அரக்கப்பரக்க வேலைக்கு ஓடுவார்கள். நன்கு இருள் சூழ்ந்ததும், சோற்றுப் பார்சல்களுடன் வியர்வையையும் சுமந்து கொண்டு, களைப்பின் மிகுதியில் ஆடியசைந்து கூடு திரும்புவார்கள்.

பிறகு, கிணற்றடியில் ஒரே காறி உமிழும் சத்தமும், குளிக்கும் சந்தடிகளும், சோப்பின் வாசனையும், ஈரக்காற்றும்....

சாப்பாட்டுக்குப் பிறகு ரேடியோக்கள் தம்பாட்டில் அலற, ஏதேதோ பேசி உரத்துச் சிரிப்பார்கள். நாயக்க ஹாமதுரு அந்தப் பக்கமாக வந்தால், கதை குசுகுசுப்பாகத் தேயும்.

ஜொலி சாது இடைக்கிடை கள்ள ஆட்டுக்கடாவைப் போல எட்டிப் பார்ப்பார். அவர்களுடன் சேர்ந்த ஒரு "தம்" அடிப்பார். பிறகு சாரைப் பாம்பு போல இருளில் மெல்ல நழுவிச் செல்கையில் ஒரு முணுமுணுப்பு...

"மட்ட ஹரியட்ட பாடங் கரன்ட தியனுவ"

(எனக்கு படிப்பதற்கு நிறைய உண்டு)

மஹிந்த மட்டும் வித்தியாசமானவன். அவனுக்கு எங்கே வேலை, எப்படிப் பிழைக்கிறான் என்பதெல்லாம் நான் அறியேன். அடிக்கடி எல்லோரிடமும் கடன் வாங்குவான். சில நாட்களில் திருப்பியும் தருவான். ஆனால், அடுத்த நாளே திரும்பவும் கடன் வாங்குவான்!

அவனது கண்கள் பளீரென ஒளி வீசும். எதிரே இருப்பவரை ஊடறுத்துப் பார்க்கும். சமயங்களில் கனவில் மிதக்கும். சதாகாலமும் வெற்றிலைச் சாற்றில் சிவந்திருக்கின்ற உதடுகளில், கூடவே சிகரெட்டும் தொங்கிக் கொண்டிருக்கும்.

அவனது அறைக்குள் தூசு நிறைந்து கிடக்க, கட்டிலிலும் கதிரைகளிலும் ஜன்னல் கம்பிகளிலும் துணிகளைப் பொதிந்து வைத்திருப்பான். மேசைமீது புத்தகங்களுடன், புகைத்த சிகரெட் துண்டுகளும் இறைந்து கிடக்க, அறையெங்கும் விதவிதமான தூரிகைகளும், வண்ணங்களும் பரந்து கிடக்கும். முகட்டிலிருந்து ஒட்டடை தொங்கித் தெரிய... நிலத்தில் சுவருடன் சாய்த்து வெள்ளை வெளேரென்ற "கான்வஸ்"கள் பல கிடந்தன. சிலவற்றில் பென்சிலால் இழுத்துவிடப்பட்ட இலாவகமான கோடுகள் சில, மாயம் போட்டன. அநேகமாகப் பூர்த்தியான நிலையிலுள்ள சில ஓவியங்கள் சுவர்களில் தூக்கி மாட்டப்பட்டிருக்கும்.

சில இரவுகளில், அவனது அறையிலிருந்து எளிமை கொண்ட சிங்களக்கீதங்கள் இனிமை கொண்டு பிரவகிக்கும். பின்னர், நெடுநேரம்வரை வெளிச்சம் தெரியும். அவன் மேலும் கீழும் நடந்து திரிவதென, மெல்லிய சீரான காலடியோசைகள் காட்டிக் கொடுக்கும். இடைக்கிடை திருப்தியுடன் பெருமூச்செறிவதும், கை விரல்களைச் சொடுக்குவதும் கேட்கும்.

இரவுகளில், நடுநிசி நெருங்கும்போது ட்ரெயினின் தடதடக்கும் ஓசை மெலிதாகக் காதில் படரும். வரவர அது மிகையாகி இடியோசைபோன்று பெருகி அதிர, ஏறத்தாள பன்சலவை அண்மிக்கும்போது "கூய்ய்ய்...." என நீட்டி முழக்கிக் கூச்சலிடும். அது யாரையோ கேலி செய்வதைப்போல இருக்கும்.... யாரையோ மிக வருந்தி அழைப்பதைப் போலவும் இருக்கும்.....

சில இரவுகளில் சிரிப்பு கட்டுக்கடங்காது பெருகிவிட, அடிவயிற்றிலிருந்து பொங்குவதுபோல "ஹெஹ்... ஹெஹே..." என முழங்குவார் ஜோதி சாது. கண்களில் நீர் துளிர்த்து, மூச்சு முட்டும்வரை அவர் சிரித்து ஓய... சொல்லி வைத்தாற்போல ட்ரெயினின் தடதடப்பு ஒலிக்க ஆரம்பிக்கும். அந்த அகால வேளையில் "கூய்ய்ய்..." என்ற அந்த அவலக் கூப்பாடு கேட்பவர் மனதைத் துணுக்குற வைக்கும்.

அப்புறம்... அமைதி....

பேரமைதி.......

விருட்சங்களின் முணுமுணுப்பான பாஷை மட்டும் சில சமங்களில் கேட்பதைப் போலிருக்கும். பிறகு அதுவும் அடங்கிவிடும்.

காலை விடிகின்றபோது எழுந்து பார்த்தால், பனசல வளவெங்கும் சரசரக்கும் குப்பைகளை சாதுக்கள் கூட்டிப் பெருக்குவதைக் காணலாம். தனை மறந்து லயித்துவிட்ட நடன மாதின் கூந்தலிலிருந்து உதிர்வதே போன்று பெருவிருட்சங்களிலிருந்து நுண்ணிய பூந்துணர்கள் உதிரும். ரோட்டோரமாக வரிசை வரிசையாகத் தெரிகின்ற பூ மரங்களிலிருந்து அன்றலர்ந்த மலர்கள் நிலம் நோக்கி நீந்தும்.

அவற்றுள் ஒரு மரம் இருந்தது... அது அரளி வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். அதன் பூக்கள் மயக்கம் மிகத் தரும் கிறக்கம் கொண்ட வாசனை வீசுவன. ஆனால் அவற்றின் நிறத்தை மட்டும் என்னால் நிதானிக்க முடியவில்லை... நான் முன்பு எங்குமே கண்டிராத விபரிக்க இயலாத நிறம் அது!

ஜோதி சாதுவின் சிரிப்பு எனது தூக்கத்தை விரட்டிவிடும் சமயங்களில் நான் மஹிந்தவின் அறைக்குள் புகுந்து விடுவேன். அவனது ஓவியங்கள் மனத்தை ஒடுக்க வல்லன. பார்க்கப் பார்க்க, ஒவ்வொரு நாளும் அவை என்னுடன் ஒவ்வொரு கதைகள் பேசும். சில சமயங்களில் அடங்கிய குரலில் யாரோ விம்முவதைப் போன்ற ஒரு ஒலி எங்கிருந்தோ கேட்பதைப் போலிருக்கும். அந்நேரங்களில் நான் வயமிழந்து கூறுவேன்,

"ஒருவிதமான சத்தம் உனக்குக் கேட்கிறதா..?"

மஹிந்த அர்த்தபுஷ்டியுடன் கண்கள் பளபளக்கச் சிரிப்பான்.

"அந்தப் பெரிய மரங்களிலிருந்து சத்தம் உதிர்வதை நீ உணரவில்லையா...?"

அதற்கும் அவன் சிரிப்பான். பின்,

"மரங்களிலிருந்து யக்ஷனின் கூச்சல்கள் அல்லவா கேட்கும்" என்பான் கேலியாக...

வெளியில் படர்ந்திருக்கும் இருள் வனத்தின் பெரு விருட்சங்கள் வானம் அடைபட மேலும் விஸ்வரூபம் கொள்வதை அந்தப் பொழுதுகளில் நான் காண்பேன். அவை எங்கும் வியாபித்து வெளிகளை எல்லாம் அடைத்துவிட்ட ஒரு இரவில், மனம் இளகி ஒழுக ஆரம்பித்த ஒரு பொழுதில்...

ஜோதி சாதுவின் சிரிப்பு திடுமென எம் முன்னே குதித்தது. அது பிரவகித்துப் பிரவகித்து வளவெங்கும் எதிரொலிகளைக் கிளப்பிற்று. கூடவே, முற்றத்தில் ஜோதி சாது கட்டற்று ஓடித் திரிவதைக் கண்டோம். அவிழ்ந்து தொங்கும் "சிவுர" ஆடையை ஒரு கையால் இடுப்புடன் சேர்த்து அணைத்தபடி, மறு கையால் காற்றை ஓங்கி ஓங்கி வெட்டியபடி, ஒரு குழந்தையின் துள்ளலுடன் அவர் குதிக்க ஆரம்பிக்க... சிரிப்பொலியெனில் கணத்துக்குக் கணம்

சுருதி புரண்டு, இறுதியில் அவலமான கூவல்களாகி..... பின் அர்த்தமற்ற அரற்றல்களாக மாறியது.

கூடவே நாயக்க ஹாமதுருவின் ''சோமய்யா... சோமய்யா'' என்னும் குரல் துரத்தத் துரத்த, ஜோதி சாதுவின் திமிறல்களை அடக்க சோமய்யா தொந்தி குலுங்கக் குலுங்க முயன்று கொண்டிருப்பதையும்... ஜன்னல்கள் வழியே துண்டு துண்டாக வெட்டப்பட்டு விழுந்த வெளிச்சக் கீற்றுக்கள் வழியாக ஜோதி சாதுவை அவர் இழுத்துப் போய் பணமடுவவினுள் தள்ளுவதையும் கண்டோம்.

பிறகு......

பணமடுவவின் இருள், சிரிப்பும்.... அர்த்தமற்ற சொற்களும்... கேவல்களும்.... வசவுகளும் கொண்டு வெகுநேரம் அதிர்ந்தது. அந்நேரம் சொல்லி வைத்தாற்போல ட்ரெயினின் தடதடப்பு கேட்க ஆரம்பித்தது. தொடர்ந்து அதன் கூவலும்.....

இந்த ஆர்ப்பாட்டங்களை மெல்லத் தன்னுள் அமிழ்த்துவது போல பெருவிருட்சங்களிலிருந்து விம்மியழும் சோக கீதம் எழுந்தது.

பிறகு அதுவும் அடங்க... அமைதி....

பேரமைதி.....

அடுத்தநாள் காலையில் ஜோதி சாதுவை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

அன்று மதியமே நானும் மஹிந்தவும் ஜோதி சாதுவைப் பார்க்கப் போனோம். ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியெங்கும் பெருவிருட்சங்கள் இரு மருங்கிலும் வானை மூடியிருப்பதைக் கண்டோம். அவற்றின் பாஷை எம்மை அணுக... அவற்றின் இதம் தரும் நிழல் எம்மீது படர நாம் நடந்தோம்.

நாங்கள் சென்ற அதேசமயத்தில் ஜோதி சாதுவை எங்கிருந்தோ ஒரு ஸ்ட்ரெட்சரில் வைத்துத் தள்ளிக் கொண்டு வந்து கட்டிலில் புரட்டினார்கள். அவருக்கு மின்சார அதிர்ச்சி கொடுத்திருப்பதாக எங்களிடம் குசுகுசுத்துச் சென்றார்கள். ஜோதி சாது நனைந்து போன கந்தல் துணியைப் போல மயக்கமாகக் கிடந்தார். சிறிது நேரத்தில் கண்களைத் திறந்து மலங்க மலங்க விழித்தார். அந்நேரத்தில் அந்தக் கண்களில் கிறக்கம் இருக்கவில்லை. அவை எம்மைக் குழப்பத்திலும் ஆழ்த்தவில்லை. ஈயம் போன்று கனமான கண்ணீர்த் துளிகளைச் சிந்தின அந்தக் கண்கள்... மிகுந்த துக்கம் கொண்ட ஒரு ஊமைச் சிறுவனின் கண்ணீர்த் துளிகள் அவை.

திரும்பி வரும் சமயத்தில் மஹிந்த சொன்னான்:

ஜோதி சாது சிறுவயதிலிருந்தே பன்சலவில் வளர்ந்தவர் எனவும்...

அவரது தாயும் தந்தையும் முன்னர் கொல்லப்பட்டனரெனவும், அப்போது ஆண்டு எழுபத்தியொன்றெனவும்....

அவர்களது உடல்கள் பெருவிருட்சங்களில் தலைகீழாகத் தொங்க விடப்பட்டிருந்தனவெனவும்....

கொஞ்சக் காலம் செல்ல ஜோதி சாது பித்துக்குளியானார் எனவும்....

அவர் பேசுவதே அபூர்வம் எனவும்.... சிரிப்பே அவரது பாஷை எனவும்.....

ஓ.... அதனால்தான் அந்தப் பெருவிருட்சங்களிலிருந்து யக்ஷனின் கூக்குரல்களை மஹிந்தவும்.... சோக சங்கீதங்களை நானும் கேட்க நேர்ந்ததோ.....!

நாட்டில் விரும்பத் தகாத மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. வடக்கே யுத்தம் தீவிரமடையத் தொடங்கியது. அந்நியர் தமது விமானங்களிலிருந்து முதலில் பாணும், பருப்பும், வெங்காயமும் எம்மீது வீசினர். பின்னர், துப்பாக்கிகளுடனும், பீரங்கிகளுடனும் தாமும் எம்மீது குதித்தனர்.

நான் மிகவும் குழப்பமடைந்தேன். செய்வதறியாது திகைத்தேன். மஹிந்தவோவெனில் பைத்தியக்காரனைப்போல நடந்த கொள்ள ஆரம்பித்தான். அவனது அறைக்கு அடிக்கடி எல்லோரையும் அழைப்பான். ஒரு கண்டிப்பான உபாத்தியாயனின் தோரணை அவனிடம் குடி கொண்டது. தனது கான்வாஸ்கள் சிலவற்றை அவன் நாசமாக்கி அவற்றில் தேசப்படங்களை வரைந்தான்.

''மூன்றில் ஒரு பங்கு நிலம்... மூன்றில் இரண்டு பங்கு கடல்... போகிறது... பறி போகிறது'' என்று அரற்றுவான்.

''விடக்கூடாது சும்மா'' என்பான்.

''சாவது ஒரு நாளைக்குத்தான்'' என்று நெஞ்சிலடித்து வெஞ்சினம் உரைப்பான்.

ஒரு நாள் கோப மிகுதியில் எனது கன்னத்தில் அடித்தான்.

பன்சல வளவெங்கும் உள்ள விருட்சங்கள் யாவும் என்னை நோக்கி விசிலடித்துச் சிரிப்பதைப் போலவும், சாதுக்கள் என்னையும் அந்நியனாகக் கண்டு அருவருப்புடன் பார்ப்பது போலவும், தகழிகளில் சுடரும் தீபங்கள் என்னைக் கண்டதும் வெறுப்பு மிகுதியில் புகைந்து ''டப்..டப்'' என அணைவதைப் போலவும் எனக்குத் தோன்றியது.

மஹிந்த தனது அறைக்கு வரும் நாட்கள் குறையத் தொடங்கின. வெளியே சுற்றித் திரிகிறான் போலும். தன்னொடொத்தவர்களுடன் தங்குகிறான் போலும். அவனது நண்பர்கள் அடிக்கடி அவனுடன் வந்தனர். அவர்கள்

என்னை ஒரு விசித்திரப் பிராணியாக நோக்கினர்.

நான் அங்கிருந்து அகன்றுவிட உத்தேசித்தேன். எனது ஊருக்கே போய்விடுவது உசிதமானதாக எனக்குப் பட்டது.

ஒரு விடிகாலை நேரத்தில்... சாதுக்கள் வளவெங்கும் கூட்டிப் பெருக்கும் சமயத்தில்... அன்றலர்ந்த மலர்கள் நிலம் நோக்கி நீந்தி வரும் வேளையில்.... எனது பிரயாணப் பைகள் முதுகில் இடிக்க இடிக்க நான் பயணமானேன். ரோட்டோரத்து அரளி மரத்திலிருந்து முகையவிழ்ந்து கொண்டிருந்த புத்தம் மலர்களின் கிறக்கும் வாசனையும், சாதுக்களின் விளக்குமாறுகளிலிருந்து எழும் ‘‘சரக்... பரக்’’ ஓசையும் என்னை வழியனுப்பின.

அரளி மரங்கள் என்னூரிலும் உள்ளன. என்னூரின் வயல்வெளிகள்... குதூகலத்துடன் குதிக்கும் காற்று... எமது பள்ளக்கூடம்... பள்ளிகூடத்தின் வேலிகளில் வளர்ந்திருந்த பூவரசுகளும் அலரிகளும்... அங்கே நான் ஓடித் திரிந்து வளர்ந்த காலங்கள்...

எல்லாவற்றின் மீதும் அந்நியர் மேலும் மேலும் வந்து குதித்தனர். இரவென்றும் பகலென்றும் எங்கள் ஊர்களினூடே அவர்கள் ஊர்ந்தனர். வயல்களில் அரும்பி நின்ற இரண்டிலைப் பயிர்களின் மீது தமது பூட்ஸ் கால்களால் உழக்கிச் சென்றனர். துன்பம் மிகத் தரும் நாட்கள் எம்மை சுற்றி வளைத்து நெருக்கின.

நான் எத்தனை தரம் அவர்களால் பிடித்துச் செல்லப் பட்டிருப்பேன், எத்தனை கைகளால் அடி வாங்கியிருப்பேன், எத்தனை விதமான புரியாத மொழிகளால் தூஷிக்கப்பட்டிருப்பேன்... என்பதையெல்லாம் என்னால் நினைவு கொள்ள முடியாமல் போனது.

ஒரு நாளில் சில தடவைகளாவது துப்பாக்கிகள் முழங்கும் சத்தத்தையோ, குண்டுகள் வெடிக்கும் இடியோசையையோ கேட்பேன். ஒரு நாளில் ஒரு தடவையாவது மக்கள் பிரேதங்களுடன் அவலம் சோரும் அழுகையொலிகளையும் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்வதைக் காண்பேன்.

தென்பகுதியிலோவெனில், பிரேதங்களை மயானங்களில் எரிப்பதைத் தவிர்த்து, வீதியோரங்களில் கொழுத்துவதாகச் சொன்னார்கள்...

ஆறுகளில் அஸ்திகளைத் தூவுவதற்குப் பதிலாக, குற்றுயிரான மனிதர்களை அடித்துத் தள்ளி விடுவதாகச் சொன்னார்கள்...

வரவர, என்னால் எங்கும் வசிக்க முடியாமல் போயிற்று. எங்கெங்கு காணிலும் எளியவராக அடிக்கப்படும் எமது வாழ்வு அவலம் தரும் ஒன்றே எனும் பரமார்த்தத்திலிருந்து என்னால் தப்பித்துக் கொள்ள முடியாமல் போயிற்று.

மீண்டும்ஒரு விடிகாலைப் பொழுதில், பிரயாணப்பைகள் எனது கால்களைத் தடுக்கத் தடுக்க, நான் தலைநகர் நோக்கிப் பயணமானேன். பிரயாண மார்க்கங்கள் முழுமையாகச் சீர் கெட்டிருக்கவில்லை. பஸ்களும், ட்ரெயின்களும் இன்னும் ஓடிக் கொண்டுதானிருந்தன. எனினும், நடுக்காட்டிலோ, ஊர்களின் எல்லைகளிலோ அவை அடிக்கடி நிறுத்தப்பட்டன. தண்டவாளங் களிலும், வீதியோரங்களிலும் பிரேதங்கள் கிடந்து அழுகுவதாக பயணிகள் விழிகள் பிதுங்க பீதியுடன் குசுகுசுத்தனர்.

நான் சென்ற பஸ் வண்டியும் நிறுத்தப்பட்ட ஒரு வேளையில் துர்நாற்றமும், அருவருப்பும், அச்சமும் எம்மைச் சூழ்ந்தன.

..... ஒரு நவீன சிற்பம் போலிருந்தது. அது. இரண்டு பிரேதங்களை ஒன்றாகப் போட்டுக் கொழுத்தியிருப்பார்கள் போலும். இரண்டும் ஒன்றாகப் பின்னி முறுகி வளைந்து கிடந்தன. ஒன்று கைகளையும் கால்களையும் வான்நோக்கி உயர்த்தி நீட்டி வாய் பிழந்து அரற்றியது. மற்றையது கைகளையும் கால்களையும் நிலத்தில் ஊன்றி, பிருஷ்டபாகத்தை வானத்தில் உதைத்துக் கொண்டு, முகத்தை எமது பக்கமாகத் திருப்பி ஊமையின் ஊளைகளாக முறையிட்டது. இரண்டும் தீயினால் பாதி கருகியிருந்தன.

காகங்கள் கரைந்தவண்ணம் மிக விருப்பத்துடன் அவற்றைச் சுற்றி வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தன. அவை கொத்திக் கொத்தி, தோலைப் பிராண்டி உண்ட இடங்களில் பாதி வெந்துபோன தசைகள் தெரிந்தன. அவ்விடங்களிலிருந்து அழுக்கேறிய வெள்ளை நிறமாக ஏதோ கசிந்து சொட்டிக் கொண்டிருந்தது.

வெந்துபோன, தோலுரிந்த மனித உடல்..... அதன் நிறம்....

அதன் நிறம் ஒரு வகைப் பூவை ஞாபகம் காட்டியது.

பன்சல வளவில் நான் கண்ட அரளிப்பூவின் அதே நிறம்!

நகரின் சந்தடிமிக்க தெருக்களில் நான் தங்குமிடமும், வேலையும் தேடித் திரிந்தேன். யாரோ என்னைக் கூப்பிடுவது போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன். பழைய லொறியொன்றின் கிழிந்துபோன, தும்புகள் குத்தும் ஆசனத்திலிருந்து சோமய்யா தலையை நீட்டிக் கொண்டிருக்கக் கண்டேன்.

‘‘ச்சா... உங்கள பாத்து மிச்சம் நாள் தானே தம்பி’’

சோமய்யா பகலில் லொறி ஓட்டுகிறாராம்.... இரவில் மட்டும் பனசலவில் தங்குகிறாராம்.... பனசலவில் பழையவர்கள் ஒருவரு மில்லையாம்..... மிகவும் பயமாக இருக்கிறதாம்....

“மஹிந்த சுகமாக இருக்கிறானா...?” என்றேன். சோமய்யாவின் முகம் சற்றே வலித்துக் கொள்வது போலிருந்தது.

“ஜோதி சாது இப்போதும் சிரிக்கிறாரா...?” என்றேன். சோமய்யா என்னைக் கண் கொட்டாமல் பார்த்தார். அவரது தாடைகள் இறுகுவது போலிருந்தது.

அந்த வெப்பம் மிகுந்த பகலிலும், ஒரு கடையில் தேநீர் அருந்தியபடி ஒன்றன்பின் ஒன்றாக சிகரெட்டுகளை புகைத்துக் கொண்டிருந்தோம். அடிக்கடி இருமியவாறும், அடைக்கும் தொண்டையை செருமிச் செருமி சரி செய்தவாறும் சோமய்யா சொன்னார்:

மஹிந்த காணாமல் போனான் என்றும்... அவனை பன்சலவில் வைத்துப் பிடித்த மறுகணமே அவனது கைகளை உடைத்தனரெனவும்,

பன்சலவில் உள்ள அனைவரையும் விசாரணைக்கெனக் கூட்டிச் சென்றனரெனவும்,

இரவு நேரங்கள் அச்சம் தருவனவாயும்... பகல் நேரங்கள் துன்பம் தருவனவாயும் அங்கே மாறிவிட்டதெனவும்,

ஜோதி சாதுவின் நோய் நன்கு முற்ற.... ஒருநாளின் நள்ளிரவு நேரத்தில், கூவிக் கொண்டே விரைந்தோடி வந்த ட்ரெயினின் முன்னே அவர் பாய்ந்தார் எனவும்,

அந்த இரத்தம் உறைந்து காய்ந்துபோன வெகுநாட்களின் பின்பும், அவ்விடத்தில் ஈக்கள் மொய்த்தன என்றும்.

சோமய்யாவின் தொண்டை கமற, அவர் சற்றே செருமினார்.. செருமலின் சுருதி கொஞ்சம் கொஞ்சமாக மாறித் துன்பம் ததுந்தும் சிரிப்பாக மாறியது. அச்சிரிப்பின் தொனி கணத்துக்குக் கணம் விசித்திரமாக மாறுகின்றதென எனக்குத் தோன்றியது.

“எப்பசரி அங்கிட்டு வாங்க தம்பி“

நான் அங்கே மீண்டும் சென்றபோது இருள் மெல்லச் சூழ ஆரம்பித்திருந்தது. இருட்டிய பின்னரும் தகழிகளில் விளக்கேற்றி வைக்க அங்கு எவருமே இல்லைப்போலும். ஒரேயொரு தீபம் மட்டுமே தனியே நடுங்கிச் சோர்ந்தது.

சைத்ரியவினுள்ளே தயங்கி நுழைந்தேன். பென்னாம் பெரிய மர அலுமாரிகளில் அடுக்கித் தெரிந்த கனத்த அட்டைகள் கொண்ட புத்தகங்கள் தூசி படிந்துபோய்த் தெரிந்தன. அறிமுகமற்ற சில சாதுக்கள் அறைகளில் முடங்கியிருக்க, நான் நாயக்க ஹாமதுருவின் அறையினுள் எட்டிப் பார்த்தேன். அவர் தனது கால்களை வாசல்பக்கமாக நீட்டி, மல்லாந்து படுத்து, முகட்டை வெறித்துக் கொண்டிருந்தார். அவர் என்னைக் காணவில்லை. ஆனாலும், அவரது பாதங்களில் பெரும்பிழவுகளாக வெடித்திருந்த பித்தவெடிப்புகளை நான் கண்டேன்.

கிணற்றடிக்குப் போய் இருளில் கரையும் தண்ணீரை எட்டிப் பார்த்தேன். பல மாதங்களாகவே கிணற்றை எவரும் கலக்கி இறைக்கவில்லைப்போலும். தண்ணீர் புளித்து மணத்தது. சீமெந்து மிதிகளில் பாசி வழுக்கியது.

நான் முன்னர் வசித்த பின்புறத்து வீட்டில் மனிதர் எவரும் புழங்கும் அடையாளங்களைக் காண முடியவில்லை. அறைகளெல்லாம் மெல்லத் திறந்தனவாய் தூசி படியத் தெரிந்தன. மஹிந்தவின் அறைக்குள் எட்டிப் பார்த்தேன். அவனது ஓவியங்களில் மிகப்பல காணாமல் போயிருந்தன. ஒரேயொரு ஓவியம் மட்டும் சுவரோரமாகச் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது.

அது கனத்த கருங்கற்களால் கட்டப்பட்ட சிறிய அறையொன்றின் உட்புறம். சுவர்கள் சிதிலமாகிக் கொண்டிருந்தன. கற்களின் பொருத்துகளிலிருந்து நீர் கசிவது போலிருந்தது. சுவரில், வெகு உயரே நான்கே நான்கு கம்பிகள் பொருத்திய ஒரு சதுர வடிவான துவாரம், அதனூடே புகுந்து வரும் ஒளியின் கதிர்கள். தரையில் ஒரு பூச்சாடி வைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து வளர்ந்து வளைந்து உயரே சென்றது, ஒரு ரோஜாப்பதியன். அதன் இலைகள் மிகவும் வெளுறி மஞ்சள் பூத்திருந்தன. ரோஜாப்பதியனின் உச்சியில் ஒரு பூ. சிறியதுதான் எனினும் பனியைப்போல மெல்லென்றிருந்தது. வெளிச்சத்தை எட்டித் தொட அது தவித்தது.

வெகுநேரம் அதைப் பார்த்தபடியே நின்றேன். சுவர்களிலிருந்து கசியும் நீர்த்துளிகளில் சில அச்சாடியினுள் சொட்டாதா என ஏங்கினேன்.

பிறகு, விகாரைக்குள் போனேன். தூய்மையான பீடமொன்றில் சுகந்தம் பரிமளிக்கும் காற்றைச் சுவாசித்தபடி புத்தனின் பிரமாண்டமான திருவுருவம். பகவானின் கருணை ததும்பும் முகவிலாசம். அரைவாசி மூடியபடி, இம்மூட உலகின் வேதனைகளை சகித்துக் கொள்ள முயலும் நேத்திரக் கமலங்கள். பகவானின் பாதசரணங்களில், முகமறியாத எவரோ உள்ளம் உருகிச் சமர்ப்பித்திருந்த வெண்மலர்கள்.

சுவர்களில் சில ஓவியங்களைக் கண்டேன். பெயர் அறியாத வடஇந்தியச் சைத்ரீகன் தீட்டிய ஓவியங்கள் அவை.

மரங்களின் நிழலில் அபய முத்திரை காட்டியபடி, நிர்ச்சிந்தையாக கண்கள் மோனத்தில் தோய, தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார் புத்தர். பகவான்மீது பாய்வதற்கு தயாரான நிலையில், மரக்கிளைகளில் குரங்குகள் பல தொங்கின.

*அல்ல! அவை குரங்குகளல்ல, யக்ஷர்கள்!*

மரங்கள் பாறும் வண்ணம் தீவினைகள் பல புரிந்து, மரத்துக்கு மரம் தாவிக் கூக்குரலிட்டுப் பயமுறுத்தும் யக்ஷர்கள். கறுத்துப் பருத்த உடலும், தீயுமிழும் கோபவிழிகளும், நீண்ட பற்களும், கூரிய உகிர்களும் கொண்டு தோலாடை அணிந்து கூத்தாடும் யக்ஷர்கள். அவற்றின் பாய்ச்சல்களால் மரங்களெல்லாம் ‘‘மடமட’’வென முறிந்து வீழும் எனத் தோன்றியது. பகவானின்மீது பாயும் முதல் யக்ஷன் யாராக இருக்கலாம் எனக் குழம்பினேன்.

உண்மையிலேயே வெளியே, ஏதேதோ அரவங்கள் கேட்டன. மூச்சை அடைத்தவனாய் வெளியே அவசரமாக நழுவினேன். இருட்டைக் கிளைகளால் துளாவிப் பரிதவிக்கும் பெருவிருட்சங்களில் வௌவால்கள் சுற்றிச் சுற்றிப் பறந்து அமர்வதைக் கண்டேன். மரங்களின் கீழே நிற்கையில் அவற்றின் எச்சம் என்மீது தெறித்தது. அவை என்னை ஏசி அச்சுறுத்துபவையெனக் ‘‘கிக்கிறிச் கீக்கிறீச்’’ என ஓலமிட்டன.

நன்றாக இருள் சூழ்ந்துவிட்டது. அன்றிரவில் அங்கேயே தங்குவது உசிதமெனத் தோன்றியது. வீட்டின் வெளிவிறாந்தையில் கிடந்த வாங்கின்மீது கைகளால் தட்டிவிட்டுப் படுத்தேன். தூசி படலங்களாகக் கிளம்பி நாசியை அடைத்ததில் அடுத்தடுத்துத் தும்மினேன். கொட்டக் கொட்ட ஆந்தையென விழித்தவனாய், புரண்டு புரண்டு உழன்றேன். அண்ணாந்து படுத்திருந்தபடி, மர உச்சிகளில் வௌவால்கள் சிறகடிப்பதைக் கண்டேன்.

யாரோ அந்தப் பக்கமாக அரவங்களேதுமின்றி நடந்து போனார்கள். பிறகு மெல்ல மெல்லத் தூங்க முயன்றேன். தூக்கமா அது? கிறக்கம்! மனமோ, அரைகுறையாய் விழித்தெழுந்து அச்சத்துடன் துடிதுடித்தது.

நள்ளிரவு நெருங்குகின்றது போலும். நள்ளிரவுக்கே உரிய வாசனை. நள்ளிரவுக்கே உரிய கடுமையான இருண்ட நீலநிறம். நள்ளிரவுக்கே உரிய மெல்லத் தேயும் பேரமைதி. அந்த அமைதியைக் குலைத்தபடி கிணற்றடியிலிருந்து வருகின்ற சத்தம். யாரோ அந்தப் பேயிருட்டுக்குள்ளும் குளிக்கிறார்கள்! ஒருவரா, இருவரா, அல்ல.... பலரா? என்னால் நிதானிக்க முடியவில்லை. முடிவேயின்றிக் குளிக்கிறார்கள். தண்ணீர் நிலத்தை அறையும் ‘‘சளார் சளார்’’ எனும் சத்தம். வாளியில் நீரை மொள்ளும் ‘‘மொளுக்’’ எனும் சத்தம்.

‘‘கூய்’’ என்ற கூக்குரல் என்னை மிரட்டத் திடுக்கிட்டு விழித்தெழுந்தேன். வாங்கிலிருந்து கீழே விழுந்து விடுவேன் போலிருந்தது. காதுகள் செவிடுபடும்வண்ணம் ட்ரெயின் கடகடாய்த்தபடி ஓடிச்சென்று மறைந்தது.

சொல்லிவைத்தாற்போல பணமடுவவினுள்ளிருந்து குடல் புரளச் சிரிக்கின்ற சத்தம் கேட்டது. யாரது?

சோமய்யா! தொந்தி சரியச் சரிய புரண்டு படுத்தபடி சோமய்யா ஒரு வெறியனாகச் சிரிக்கின்றார்.

மீண்டும் கிறக்கம்.

மரங்களிலிருந்து வௌவால்கள் ஒன்றன்பின் ஒன்றாக இறங்குகின்றன. இறங்கியவுடன் தம் சிறகுகளை உதிர்க்கின்றன. விஸ்வரூபம் கொள்கின்றன. நிலம் அதிர நடந்து திரிகின்றன. யக்ஷர்கள். எங்கும் பயமின்றித் திரிகின்ற யக்ஷர்கள்.

பெருமரங்கள் பயத்தால் மொறுமொறுவென மறுகுகின்றன. சோககீதங்களை இசையாய் ஒலிக்கின்றன.

‘‘மரத்திலிருந்து சங்கீதம் கேட்குமா? என முனகினேன்.

’’யக்ஷர்களின் கூக்குரல்கள்தான் கேட்கும்’’ என்றவனாய் மஹிந்த வாய் நிறைந்த வெற்றிலைச்சாற்றுடன் வானத்தை அண்ணாந்து கொளகொளத்துச் சிரிக்கிறான்.

விடிகாலையில் குளிர்கின்றது. நடுங்குகின்றேன். வெளிச்சம் பரவுவதை உணர்கிறேன். கண்மடல்களினுள்ளே சிவந்த புள்ளிகள் வட்டமடித்துத் திரிகின்றன.

சிவப்புப் பொட்டுக்கள்! பொட்டுக்களா அவை? தண்ட வாளத்தில் மின்னுகின்ற ஜோதிசாதுவின் இரத்தம். ஈக்கள் கணமணவென மொய்க்கின்றன.

முனகியபடி விழித்தெழுந்தேன். நன்றாக விடிந்திருந்தது. சூரியப்பிரகாசத்தில் கண்கள் கூசின. காதோரமாகப் பறந்த ஈக்களையும், கொசுக்களையும் கைகளை வீசி விரட்டினேன்.

அவசரமாக அங்கிருந்து வெளியேற முனைந்தேன். முற்றம் கூட்டும் வேளை இன்னும் வரவில்லைப் போலும். வௌவால்களின் எச்சமும், சருகுகளும் சேர்ந்து பாதங்களில் பசையாக ஒட்டின. ரோட்டோரத்து அரளி மரத்திலிருந்து இரத்தநிறத்தில் பூக்கள் உதிர்ந்து கொண்டிருந்தன.

அவ்வேளையில், மீண்டும் நாயக்க ஹாமதுருவை நான் கண்டேன்.

தனியே அல்ல. அவருடன் ஒரு பால பிக்கு!

மஞ்சள் துணியில் கோவணம் மட்டும் கட்டியிருந்தவொரு பாலகன். மழுங்க மழித்த தலையில் அப்போதுதான் தோய்ந்து குளித்த தோற்றம். தோய்த்துப் பிழிந்த அவரது சிறிய ‘‘சிவுர’’ ஆடையை ஈரம் போகவெனச் ‘‘சடார்’’ என உதறி உடுக்கக் கொடுத்தார்... நாயக்க ஹாமதுரு!

(நந்தலாலா ஒக்டோபர் 1995)

-2021 ஒக்டோபரில் திருத்தப்பட்ட பிரதி-

# வ.ரகுநாத் கவிதைகள்

தன் கூடென்றறியாமல்
மரத்தின் பின்புறத்திலிருந்து
தீண்டிக்கொண்டிருக்கிறது மரங்கொத்தி.

❍

பறவையின் கூண்டில்
இலைகளாய் உறங்குகின்றன
மரத்தின் நிழல்கள்.

❍

சிலேட்டிலிருந்த ஒட்டுமொத்த இருளையும்
போக்கியது
மகள் வரைந்த நிலா.

❍

தைக்கும் தொழிலாளியிடம் பேரம் பேசுகையில்
கடிக்கிறது செருப்பு.

❍

தறி கெட்டு ஓடுகிறது
நெசவாளியின் காலில்
சிக்கிய நூல்கண்டு.

❍

சரளைக்கற்களை
கூழாங்கல்லாக மாற்றுகையில்
ஆச்சரியக்குறி நீட்டுகிறது
குளம்!

❍

ஆணியின் எலும்பு உடைந்ததால்
ஆடுகிறது மாநகரப் பேருந்தில்
முதலுதவிப் பெட்டி.

❍



சலூன் கடையினை
ஏக்கத்தோடு பார்க்கிறது
தாடியோடு ஆலமரம்.

❍

நூலாம்படையில் சிலந்தி
மரத்தில் கூடு
சாளரத்தில் நிலா!

❍

உணவு வரைகையிலெல்லாம்
தீர்ந்து போய்விடுகிறது
ஏழை ஓவியரின் வண்ணம்.

# கவிஜி கவிதைகள்

**நினைவோடையில் நிற்கிறேன்**

கொய்யா மரத்திலிருந்து
இறங்க தெரியவில்லை
ஒற்றைப் பாலத்தில்
அமர்ந்த ஓவியம் அழியாது
சூட மரத்தடியே
சம்மணமிட்டுருப்பதே
வரம் தான்
வளைவுகளின் ஒலிப்பான்
வாய் வலித்தாலும் சிரிக்கும்
செல்ல நாய்களிடையே
ஜெனியின் சிநேகிதன் வருகிறான்
ஊர்ப்பெருந்தின் படியில்
கடவுளின் கரங்கள்
பாட்டியின் மடி வாசனைக்கு
பட்டாம்பூச்சி மினுங்கல்
மலையுச்சியில்
நிலவு தொடும் விளையாட்டு
மாமாவின் கதைகளில்
மாய மனிதன் நானே
பறவையிடம் கொஞ்சிப் பேசி
வானம் வாங்குகிறேன்
தொன்றுதொட்ட மயிலிறகு
பச்சை மலைப் பூ பாடலுக்கு
ஈடாகாது
புல்வெளி சறுக்கு விளையாட்டில்
தியானம் இருக்கிறது
இறந்த நண்பனோடும்
பேசும் வாய்ப்பு
இறகுள்ளவனுக்குத் தானே
நினைவோடையில் நிற்கிறேன்
கரையேற மறுக்கிறது
பால்யம்....!



**உயிரற்ற புகைப்படங்கள்**

திசையறியா சிறகுகள்
சோர்ந்து விடும்
உள்ளக்களிப்பை
உண்டு செரிக்க
முடியாத உழற்றல்
இப்படித்தான்
உயிரைப் பணயம் வைக்கும்
உடல் மீறும் உற்சாகம்
உயிருக்கு தூண்டிலிடும்
இடம் பொருளற்ற இசை
ஒப்பாரிக்கு ஒத்தூதும்
விடுமுறை கொண்டாட்டம் சரி
உயிரை விட்டு விட
வழி தேடுதல் முறையா
எச்சரிக்கைப் பலகை
சொன்னதே ஆழமென்று
சுழல் இருக்கென்ற
வாய்ப்பேச்சை
அசட்டை செய்யலாமா
அழைப்புகள் அலறுகின்றன
சொல்பேச்சு கேட்காத
புகைப்படங்கள்
உயிரற்று வீடு திரும்புகின்றன

**கண்ணாடிப் புன்னகை**

வண்டியின் முதுகு முழுக்க
நொறுக்குகள்
வகை வகையான பொட்டலங்கள்
நூல் கோர்த்த
அடுக்கு கூடிய அழகு
முதுகில் தொங்கும்
சிறு பிள்ளைகள் போல
வகை வகையாய்
வண்ண பாக்கெட்டுகள்
முதுகு நீட்டும் பூங்கொத்து
வா வா என்கிறது
பின்னாலேயே செல்கிறேன்
கண்ணாடி சரி பார்த்து
போய்க்கொண்டே இருக்கிறான்
காற்றில் கைகளை ஆட்டி
சட்டைப்பைக்குள் இருந்து
புறாவை எடுப்பது போல
ஒலிப்பானற்ற
ஓர் ஓய்ந்த வேகத்தில்
பின்னால் வருகிற என்னை
கண்ணாடியில் பார்த்து பார்த்தே
சிறுவனாக்கி விட்டான்
மெல்ல புன்னகைக்கிறேன்
தோகை விரிந்த
நொறுக்கு மயிலென
படக்கென
என்னைப் பார்த்து விட்டு
திரும்பிக் கொள்கிறான்
இப்போது
அந்தத் தின்பொறியாளன்
கண்ணாடியிலும்
சிறு புன்னகை...!

# மனதென்று ஒன்று

தங்கேஸ்



ஐந்தாவது முறையாக அருணிடம் கேட்டாள் தீபிகா " நீ என்னை எவ்வளவு லவ்வு பண்றேன்னு சொல்லு? "

" என் மனசளவுக்கு '

" ப் பூ இவ்வளவு தானா? "

" ஏய் எம் மனசு எவ்வளவு பெருசுன்னு உனக்கு தெரியுமா?

எவ்வளவு?

'' உன் மனசை மாதிரி ரெண்டு மடங்கு ''

' அவ்வளவு தானா? ''

'' அவ்வளவு தானாவா? அப்டின்னா உன் மனசு அவ்வளவு சின்னதா? ''

'' யார் சொன்னது?''

'' அப்போ எவ்வளவு பெருசு சொல்லு? ''

'' அது கடல் ''

'' அப்போ என் மனசு ரெண்டு கடல் ''

'' அடேங்கப்பா! விட்டா நீ அளந்துகிட்டே இருப்பே, யார் மனசு எவ்வளவு பெருசுன்னு யாருக்குத் தெரியும் ''

'' வேண்ணா என் மனசு எவ்வளவு பெருசுன்னு அளந்து பாரு ''

'' அடச்சீ ''

'' அப்ப உன் மனசை காட்டு நான் அளந்து பார்க்குறேன் ''

'' வேற பொழப்பே கிடையாது உனக்கு '' என்று செல்லமாக அருணின் மார்பில் குத்தினாள் தீபிகா. அவன் மல்லாந்து படுக்கையில் விழுந்து அவளை கழுத்தோடு சேர்த்து இழுத்து அணைத்துக் கொண்டான். விழுந்த வேகத்தில் அவன் மார்போடு தலையால் முட்டினாள்.

'' நீ நல்லா வாங்கி கட்டப் போற ''

' அதான் கட்டிக்கிட்டுத்தான இருக்கேன் ''

'' ஏன் கை எங்கெங்கெயோ போகுது? ''

'' சும்மா ஒரு சின்ன டூர் ''

'' உனக்கு என்னவோ ஆகிருச்சு, இதுக்குத்தான் அண்ணா நகர்ல வீட்டை வச்சுகிட்டு பத்து கிலோ மீட்டர்ல எக்மோர்ல ரூம் போட்டியா?''

'' என்ன அப்படி சொல்லிட்ட? எக்மோர் எப்படிப்பட்ட இடம் தெரியுமா? இங்க இருந்து தான் இந்தியாவுல இருக்குற எல்லா ஸ்டேசனுக்கும் பயணத்தை ஆரம்பிக்கிறாங்க, அது போல நாமளும் வாழ்க்கையை இங்க இருந்தே ஆரம்பிக்கலாம்னு தான் இங்க வந்திருக்கோம் ''

'' அப்புறம் ஏன் ஒரு மாதிரி பார்த்துக்கிட்டு எச்சில் விழுங்கி கிட்டே இருக்கிறே உன் சின்ன புத்தி உன்னை விட்டுப் போகலையே? ''

'' எல்லாத்தையும் நீ தப்பாவே பார்க்குற, இப்ப ஒரு கவிதை ஒண்ணு சொல்லுறேன் அதையும் தப்பா புரிஞ்சுக்க மாட்டியே? ''

' ஏதாவது விவகாரமா சொல்லுவ ''

' ச்சே ச்சே அப்பிடியெல்லாம் இல்லை, இது உண்மையான தெய்வீக காதல் சம்பந்தப்பட்ட கவிதை ''

'' சரி சொல்லித் தொலை ''

'' உன்னை கண்ட நொடியில் என் இதயம்

எவ்வளவு பேசுகிறது என்பதை

என் மார்பில் கொஞ்சம் காதை வைத்துக் கேள் என்றாள் அவள்.

பொதுவாக முயல் குட்டிகளின் பாஷை எல்லாம்

எனக்கு அவ்வளவாக தெரியாது என்றான் அவன் ''

கவிதை எப்படி இருக்கு?

அப்படியே உன்னை மாதிரியே தான் இருக்கு.உன் கவிதை எப்படி இருக்கும் உன்னை மாதிரியே அல்பமா தான இருக்கும்?

உன் இதயம் என்ன சொல்லுது?

' உன் காதை திருக சொல்லுது ''

ஏன்?

'' தப்பு தப்பா யோசிக்றியே? ''

'' தப்பு தான் ஒரு நாள் சரியா மாறும் ''

'' இந்த தப்பு ஒரு நாளும் மாறாது ''

''ஒரு நாள் நாம இந்த தப்பை பண்ணத்தானே வேணும் ''

' அதுக்காக?''

'' அத இப்பவே பண்ணிட்டா என்ன? ''

'' அது தப்பு, நம்ம ரெண்டு குடும்பமும் நம்ம மேல நிறைய நம்பிக்கை வச்சிருக்காங்க, ''

'' அவங்க தான் நம்ம கல்யாணத்துக்கு ஓ கே சொல்லிட்டாங்களே ''

'' கல்யாணத்துக்குத்தான ஒகே சொன்னாங்க ''

'' எனக்கு ஒரு ஆசை ''

'' என்ன? '

'' என் பர்த்டே அன்னிக்கு உன்னை உன் பர்த்தேடே

ட்ரெஸ்ல பார்க்கனும் ''

'' இன் டீசன்டா பிஹேவ் பண்ணாத, எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் தான்னு நாம ரெண்டு பேரும் தான பேசி முடிவெடுத்தோம் ''

'' ஆமா பெரிய முடிவு ஐநா சபையே முடிவை மாத்தி மாத்துது, அரசியல்வாதிகள் எல்லாம் தினம் தினம் முடிவை மாத்துறாங்க, நாமளும் கொஞ்சம் மாத்துனா என்ன தப்பு ''

நீ என்ன அரசியல்வாதியா? கொச்சைப்படுத்தாத காதலை ''

'' ஆஹா உனக்கு ஒன்னுமே தெரியாதுல்ல சின்னக்குழந்தை, உன் சைடு மட்டும் தெய்வீக காதல், நாங்கள்ளாம் சீப்பு ''

'' உன் பேச்சு அப்படித்தான் இருக்கு ''

'' அப்புறம் எதுக்கு ஏன் கூட ரூம் போட்ட ''

'' லூஸ் மாதிரி பேசாத, அதான் ரெண்டு வருச போராட்டத்துக்குப் பிறகு நம்ம காதலுக்கு ரெண்டு வீட்டுலயும் ஒத்துக்கிட்டாங்க, அதனால தான் உன் பிறந்த நாளை கொண்டாட விஜிபிக்கு போயிட்டு வர்றோம்னு சொன்ன உடனே நம்பி அனுப்பி வச்சிட்டாங்க ''

'' ஆனா ரூம் போடும் போது நீ ஏன் தடுக்கலை ''

'' உன் பிறந்த நாளை மூன்றாம் மனுசன் கண்ணில படாம நாம இரண்டு பேருமா கொண்டாடனும்னு தான நீ சொன்ன? அதனால தான் நீ ரூம் போடுறேன்னு சொன்னப்ப, சரின்னு நானும் நம்பி வந்துட்டேன்,ஆனா இப்ப பேச்சை மாத்துற ''

'' யார் பேச்சை மாத்துறது, நீ தான என்னோட பர்த்டேவுக்கு என்ன கிப்ட் கேட்டாலும் தருவேன்னு பிராமிஸ் பண்ணே, அதனால தான ஸ்பெசல் ஏசி ரூம் இரண்டாயித்து ஐநூறுக்கு போட்டு கூப்பிட்டு வந்தேன் ''

'' அசிங்கப்படுத்தாதடா, உனக்கு என்ன நான் ஒரு கிப்ட்டா?

'' ஆமா ''

'' செக்ஸ் வச்சுக்கிறது என்ன பர்த்தே கிப்ட்டு? ஏன் என் சம்மதம் முக்கியமில்லையா?''

'' அதான் நம்ம கல்யாணம் இன்னும் இரண்டு மாசத்துல நடக்கப் போகுதே? ''

'' அதுக்காக எல்லாத்தையும் இப்பவே பார்த்துடனுமா?''

'' ஏன் உன்னை என் பர்த்டே அன்னைக்கு பர்த்டே ட்ரெஸ்ல பார்த்தா என்ன தப்பு ''

'' அசி ங்கமா பேசாத, எனக்கு இதெல்லாம் சுத்தமா பிடிக்காது '

'' என்னது? ''

'' கை யை எடு முதல்ல, ஏன் கண்ட இடத்துலயெல்லாம் கையை வைக்குற? ''

'' உனக்கு இதெல்லாம் பிடிக்காதா இல்லை என்னையே பிடிக்காதா?''

'' இப்பிடி நடந்துகிட்டா எனக்கு உன்னையும் பிடிக்காது ''

'' ஆஹா பெரிய பத்தினி மாதிரி பேசுறா ''

'' பத்தினி தான் உனக்கு என்ன சந்தேகம், உன்னை மாதிரி ஊர் மேயுறவள்னு நினைச்சியா என்னை? ''

'' பத்தினி தான்டி நீ, உன் எதிர்த்த வீட்ல இருக்குறானே, ஜூவல்லரி வேலை பார்க்குற ரமேசு அவன் கூட நீ பைக்குல சுத்தறத பலவாட்டி நானே பார்த்துருக்கேன் ''

'' அந்த அண்ணா எங்க பேமிலி பிரண்டு, ஏற்கனவே மேரேஜ் ஆனவங்க, ''

'' மேரேஜ் ஆனவன் வசதியாப் போச்சு உனக்கு ''

'' அவங்களைப் பத்தி தப்பா பேசாத எனக்கு கோபம் வரும் ''

'' கோபம் வந்தா என்னடி செய்வ? ''

'' கத்துவேன், டார்ச்சர் பண்ணா வெளில போயிருவேன் எனக்கு இதெல்லாம் பிடிக்காது ''

'' போடி போய் அந்த அண்ணன் கூடயே போய் படுடி என்னைத் தான் உனக்குப் பிடிக்கலையே ''

'' பிடிக்கலைன்னு தெரியுதுல்ல வழியை விடு நான் கிளம்புறேன் '

'' அப்ப நீ நான் சொல்றதை கேட்கமாட்ட?''

'' உனக்கு என்னை விட என் உடம்பு தான் முக்கியமா ''?

'' ஆமாண்டி, 'ச்சே போயும் போயும் உன்னைப் போய் லவ் பண்ணி தொலைச்சேன் பாரு அதுக்காக நான் சூசைட் பண்ணிச் சாகனும் ''

'' போதும் வாயை மூடு, இப்படி பட்ட மோசமான புத்தி உள்ளவன்கிட்ட பழகுனதுக்காக நான் தான் தூக்குல தொங்கனும் ''

'' அப்ப தொங்குடி ஏன் பார்த்துகிட்டு இருக்க? ''

'' கட் கட் கட் இரண்டு பேரும் அருமையா நடிச்சீங்கம்மா, நான் கூட பத்து இருபது டேக்கு போக வேண்டியதிருக்கும்னு நினைச்சேன் நீங்க ஒரு டேக்குலயே முடிச்சிட்டீங்க '' என்றார் இயக்குநர் மௌரியன் திருப்தியாக. படத்தின் ஹீரோ நிர்மலும் ஹீரோயின் தீப்தியும் சந்தோசமாக சிரித்தார்கள்.

பேக் அப் சொல்லியவுடன் மொத்த யூனிட்டும் அவரவர்களின் உபகரணங்களை எடுத்துக் கொண்டு தயாரானார்கள்.

காரில் ஏறி கிளம்ப ஆயத்தமான இயக்குனரிடம் போய் தீப்தி கேட்டாள்.

'' சார் நாளைக்கு நிஜமாவே இந்த கேரக்டர்ல ஒண்ணை தூக்குல தொங்க விடப்போறீங்களா? ''

'' அப்படித்தான் நினைச்சிருக்கேன் '' என்றார் இயக்குனர்

'' அப்டின்னா நாளைக்கு தூக்குல தொங்கப் போறது யாரு சார் அருணா? இல்லை தீபிகாவா? ''

'' ஏம்மா அதுக்குள்ள சஸ்பென்ஸ் தாங்க முடியலையா? ''

'' ஆமா சார் ''

'' அது நாளைக்குத்தான் எனக்கே தெரியும்மா ''

'' என்ன சார் சொல்றீங்க?''

'' ஆமாம்மா ரெண்டு பேருல யாரை கொல்றதுன்னு எனக்கே குழப்பம் இருக்கு, யோசிச்சுப் பார்த்தா பேரு பக்கமுமே நியாயம் இருக்கிற மாதிரி தான் எனக்குத் தோணுது, ரெண்டு பேருல யாரு சாகப் போறதுன்னு நாளைக்குத்தான் முடிவு பண்ணணும் ''

'' ஒகே சார் நாளைக்கு மட்டும் எப்படி முடிவு பண்ணுவீங்க?''

'' நாம ஏன் முடிவு பண்ணணும்? அது தான் காலையில தமிழ் தினசரியை பார்த்தா இந்த மாதிரி பத்து சம்பவம் வருதே, அதுலயிருந்து ஒண்ணை எடுத்துகிட்டா போகுது. நீ ஒண்ணும் ஸ்ட்ரெய்ன் பண்ணிக்காதம்மா ' என்ற படி அவரது கிளம்பினார்'

மறுநாள் காலை எல்லா தமிழ் தினசரியிலும் '' பிரபல தமிழ் நடிகை தீப்திகா தற்கொலை என்ற சோகமான செய்தி முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகியிருந்தது. கூடவே, இவருடைய தற்கொலைக்கும் காதல் தோல்வி தான் காரணமா? என்ற வாசகங்களுடன் தீப்திகா தூக்கிட்டு தொங்கும் முழுப் புகைப்படமும் அதே பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது.

## கலா புவன் –லண்டன்

வானம் ஒரு பிச்சைக்காரி
இருட்டை போர்வையாக
போர்த்தியிருக்கிறாள்

போர்த்தியிருக்கும் துணியில்
ஆயிரம் பொத்தல்கள்

பொத்தலிருக்கும் இடத்திலெல்லாம்
அவள் மேனி வெளித்தெரிகிறது

இதைத்தான் நாம் நட்சத்திரம்
என்கிறோமோ?

நிலவும் பொத்தலின் வெளியே முகமாய்
வெளிப்படுகிறது
இருட்டினால் கறுப்பு நிறக் கூந்தல்
தெரிவதில்லை

நகத்தின் பூச்சாக எரிநட்சத்திரங்கள்
பிரகசிக்கின்றன
அவ்வப்போது மேகங்கள் நட்சத்திரங்களை
மறைத்து விடுகின்றன

சூரிய வெளிச்சம் வந்தவுடன்
நட்சத்திரங்கள் மறைந்து விடுகின்றன
அதிகாலைச் செம்மை கால்களின்
செம்பஞ்சுக் குழம்பை நினைவுபடுத்துகிறது

மாலைச் சூரியன் நிலவின் கண்களில்
பிரதிபலிக்கிறான்
மீளவும் நட்சத்திர மேனி பிரகாசம்
கொள்கிறது

இதனால் தான் பெண்கள் இரவில்
வெளிச்சத்துடன் பூமியில்
உலா வருகின்றனரோ ?

ஆமென்

# தொழிற்சாலை மேகங்கள்( புன்னகை பூ ஜெயக்குமார்) கவிதைத் தொகுப்பு

**இளையவன் சிவா**

புன்னகை பூ ஜெயக்குமார் தொடர்ந்து கவிதை வெளியில் இயங்கிக் கொண்டிருக்கும் முக்கியமான ஆளுமைகளில் ஒருவர். நிறைய கவிதைத் தொகுப்புகள் ஹைக்கூ நூல் சிறார் இலக்கியம் என பல தளங்களில் இயங்கும் இவரது நவீன கவிதைகளின் தொகுப்பு தொழிற்சாலை மேகங்கள்.

பல்வேறு அமைப்புகளில் விருதுகளும் பல்வேறு கருத்தரங்குகளில் கலந்துகொண்டு வாசிப்பு அனுபவம் பற்றிய கலந்துரையாடலும் நிகழ்த்தி இருக்கும் நண்பர் புன்னகை பூ ஜெயக்குமார் பொள்ளாச்சியை சேர்ந்தவர். இயற்கையும் ரசனையும் ஒருங்கிணைந்து காணும் காட்சிகள் எங்கும் பசுமையாய் விரியும் நிலப்பரப்பிற்கு சொந்தக்காரரான ஜெயக்குமார் அவர்களின் மனதிலும் அன்பும் பெருங்கருணையும் எப்போதும் விரிந்து கொண்டே இருக்கின்றன. மென்மையான உள்ளம் படைத்த இவரின் செயல்பாடுகளோ எளிய மக்களை கல்வியின் வாயிலாக மேடேற்றும் பணியை திறம்பட செய்து முடிப்பதே. தனது படிகள் அறக்கட்டளை சார்பாக பல்வேறு விதமான செயல்பாடுகளை கல்வித் தளத்தில் செய்து வரும் இவரது சிந்தனைகள் தொடர்ந்து சமூகத்தின் ஒழுங்கீனத்தைச் சுட்டிக்காட்டி தீர்வை நோக்கி நகர்த்தலும் சுற்றுச்சூழலின் மீதான கரிசனத்தையும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. தனது தொடர் பயணத்தில் இவர் காணும் சித்திரங்களை நவீன கவிதைகளுக்குள் நுழைத்து இயல்பான நிகழ்வுகளோடு ஆணித்தரமான கருத்துகளையும் இடைநுழைத்து வாசிப்பவரிடம் புதியதொரு மாற்றத்திற்கான விதையைத் தூவி விடுவதில் முன் நிற்கிறார்.

பருவ காலங்கள் உயிர்களின் வளர்ச்சிக்கும் உலகத்தின் சுழற்சிக்கும் அவசியமானது. ஆனால் இன்றைய மனிதனின் பேராசை பருவகாலச் சூழலை சீர்குலைத்து பருவ கால பிறழ்ச்சியை ஏற்படுத்தி விடுகின்றன. அதன் தொடர்ச்சியாக கடும் வறட்சி கடுமையான வெள்ளம் மேக வெடிப்பின் மூலம் ஒரே இடத்தில் திடீரென்று பெய்கின்ற பேய்மழை பனியாறுகள் உருகுதல் புவியின் வெப்பநிலை கடுமையாக உயர்வடைதல் போன்ற பல்வேறு எதிர் விளைவுகள் ஏற்படத்துவங்கியுள்ளன. மனிதன் வனத்தின் பசுமையை முற்றிலுமாக அழித்து நெகிழிகளால் பூமியை மூடப் பார்க்கிறான். அதன் தொடர்ச்சியே இயல்பான நீரோட்டத்தை நாசமாக்கி அதில் வாழும் உயிர்களைத் துடிக்க வைக்கிறது.

“--------------------------

கோடையில் வற்றிய குளம் நிரம்ப நிரம்ப




கழிவுகளும் நெகிழிகளும் மிதக்கின்றன.

பாசிகளின் நடுவே

ஒரு சிறிய மீன் துள்ளுகிறது.”

இந்த பூமியில் நமது வருகை என்பதே இயற்கையின் யாசகம் எனலாம். ஆனால் நமது வருகை நிகழ்ந்த பின் இந்த உலகத்தின் சொர்க்கம் கொஞ்சம் கொஞ்சமாக நரகமாக மாறிவிட்டது. உயிரினங்களில் கடைசியாகப் பிறந்த மனிதன் எல்லா உயிரினங்களையும் அடக்கியாளத் தொடங்கும் போதும் பேராசை கொள்ளும்போதும் அவனது யாசகத்தன்மை குறைந்து ஆதிக்கத் தன்மை நிலைபெறத் தொடங்குகிறது. இப்போது ஓய்ந்து விட்ட மழைக்கு அவனே காரணமாகிப் போகிறான்.

“பெய்யும் மழை

ஒவ்வொரு பொருளின் மீதும் பட்டு
தனித்தனி இசையை எழுப்புகிறது
அம்மா தாயே என்ற வேண்டுதலோடு
சில்லறைக் காசுகளின் சத்தமும் இணைகின்றன.
இந்த உலகத்தை
யார் யாசகமாகக் கேட்கிறார்கள் மழை ஓய்ந்து விட்டது.""

அறிவியல் வளர்ச்சியும் பொருளாதாரத் தேவையை நோக்கிய மனிதனின் ஓயாத ஓட்டமும் அவனை தன்னிறைவிற்கு உட்படுத்தியிருந்த போதும்- பழங்கால பழக்க வழக்கங்கள் முற்றிலுமாக குறைந்து வருகின்ற சூழலில் மஞ்சப்பை தாக்கம் மீண்டும் அதிகரிப்பதன் தேவையை இந்த கவிதை சிறப்பாக எடுத்துரைக்கிறது. நெகிழிகளின் வருகையினால் பூமியின் இயல்பு பாதிக்கப்படும் காலகட்டத்தில் மஞ்சள் பை என்பது அவமானம் அல்ல என்பதை தொடர்ந்து வலியுறுத்தும் எண்ணங்களை கவிஞர்கள் விதைத்துக் கொண்டே இருக்கிறார்கள்-

"------
யார் நம்பப் போகிறார்கள் அந்தக் காலத்தில்
அதன் வலிகளையும்
அந்த மஞ்சப்பையின் பயணத்தையும். "

நீங்கள் பார்க்கும் நானும் நான் பார்க்கும் உலகமும் ஒன்றல்ல. பார்வைகள் வேறுபடலாம் ஆனால் ஒவ்வொருவரின் பார்வையும் கவனத்தில் கொள்ளப்படல் அவசியம். கடல் தெரியாவிட்டால் என்ன தவளைகளின் முயற்சி தொடர்ந்து கொண்டு தானே இருக்கிறது. உங்களின் பார்வைக்காக எனது தேடலை நான் குறைத்து விடவா முடியும்? ஒவ்வொருவருக்கும் உலகத்தின் மீதான பார்வையை இந்த வரிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

"சில நேரங்களில்
என் சாளரத்தின் வழியே
நான் பார்க்கும் பொழுது
ஒரு பெரிய உலகம் நகர்ந்து கொண்டுள்ளது.
நகரும் உலகத்திலிருந்து

என் சாளரத்தின் வழியே என்னை என் சிறிய உலகத்தைப் பார்க்கிறார்கள்.

கடல் தெரியாவிட்டாலும் தவளைகளின்
கிணற்றுச் சத்தம் முக்கியமானது."

உலகில் கவலைகளற்று உறங்கும் குழந்தைகளும் பைத்தியக்காரர்களும் நமக்கே சில சமயங்களில் அன்னியமாகத் தெரிகிறார்கள் கவலைகளைத் துறந்த பைத்தியக்காரனுக்கு காணும் இடமெங்கும் சொர்க்கமே. யாசகம் கேட்டு உயிர்ப் பிச்சை கேட்டாலும் அவன் தன்னளவில் மன்னனாகவே வாழ்ந்து மடிகிறான். ஆசைகளின் உந்துதல்களாலும் நகர்தலின் தொடர் நெருக்குதல்களாலும் சிக்குண்டு தவிக்கும் மனிதர்கள் நிம்மதியைத் தேடி அலைந்து கொண்டே இருக்கிறார்கள்.

"பெரும் கடைவீதியில் பைத்தியக்காரன்
கரங்களை நீட்டி
இந்த உலகத்தை யாசிக்கிறான். அவன் உறங்கும் இடத்தில்
வான் உயர்ந்த அரசமரம் வெண்சாமரம் வீச
ஒரு அரசனைப் போல உறங்குகிறான்."

உழைப்பவன் கரத்தில் எப்போதும் உட்கார்ந்து இருக்கிறான் கடவுள். உழைப்பையும் நம்பிக்கையையும் முயற்சியையும் எப்போதும் கைவிடாத மனிதனுக்குள் குடிகொண்டு விடுகிறது தெய்வம் என்பதை இன்றைய காலச் சூழலோடு பொருத்திப் பார்த்து எழுதியிருக்கும் கவிஞரின் அழகியல் வரவேற்கத்தக்கது.

"தென் மாநில வீடுகளை
நம் மொழி தெரியாத
வடக்கின் தொழிலாளி நேர்த்தியாகக் கட்டுகிறான். குறைந்த கூலி என்றாலும்
வீடு மிக அழகாக இருக்கிறது எனது மொழி தெரியாதவன் வடக்கால் இருந்தால் என்ன தெற்கால் இருந்தால் என்ன கடவுள்
இன்னொரு கட்டட வேலைக்கு அவனுடன் போய்க்கொண்டிருக்கிறார்."

மனித மனங்களுக்குள் பூக்கும் உன்னத மலர் காதல். இரும்பையும் எறும்பாக்கிவிடும் துரும்பையும் தூணாக்கி விடும் ஆற்றல் காதலுக்கு உண்டு என்பார்கள். வலிமையற்றவனை வல்லரசனாக மாற்றி வனத்தின் பசுமையை அவனுக்குள் புகுத்தி விடும் பேராற்றல் காதலெனும் சக்திக்கு நிரம்ப இருக்கையில் மண்ணில் மாமலையும் ஒரு கடுகாம் என்ற பாரதிதாசனின் பிள்ளைகள் காதலை கொண்டாடத் தானே செய்வார்கள்.

"கோடை காலத்தில்
வனத்தில் மூங்கில்கள் உரசி தீப்பிடித்து எரிகிறது
வனம் அதைக் குளிராக்கும் சக்தி மழைக்கு உள்ளது போல
உனது காதல்
வனங்களுக்கு பசுமை அழகு"

ஆளுமை என்பதன் அளவுகோல் எது? ஒவ்வொரு மனிதனையும் மதிக்கும் பாங்கும் அவனது குரலை கவனத்தில் கொள்ளும் உணர்வும் எல்லோரையும் சமமென பார்க்கும் கருணையும் கைவிரப் பெற்ற ஒவ்வொரு மனிதனும்

ஆளுமையே. முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகளை இனம் கண்டு அவை சிறிதாக இருந்தாலும் அதை சரி செய்வதில் காட்டும் கவனமும் ஈடுபாடும் ஒவ்வொரு மனிதனையும் தனது வேலையின் மீது அக்கறை கொள்ள வைக்கிறது. அதுவே பிறரது மனதையும் ஆட்கொள்ளத் துவங்குகிறது.

“ஆளுமையாக விரும்புகிறேன் எதிரே சிலர் நடந்து கொண்டிருக்கிறார்கள்

அவர்கள் பிரபஞ்சத்தின்

சிறு துகள்கள் போல இருக்கிறார்கள்

அவர் பெரிய ஆளுமை தான் சிறிய கேள்விகளுக்குப்

பதில் சொல்கிறார்

சிறு சிறு

மழைத்துளிகள் தான்

பெரிய வெள்ளத்தை ஏற்படுத்துகின்றன.”

பேரமைதியும் சில சமயங்களில் அச்சத்தையும் பயத்தையும் ஏற்படுத்தக் கூடும். தொடர்ச்சியான சத்தங்களோடு வாழப் பழகிவிட்ட மனிதனுக்கு பேரமைதி நேர் எதிராக நின்று அவனுக்கு கவலைகளையே உருவாக்கிவிடும்.

“இலைகளின் சத்தமோ தென்னை மரங்களுக்கு இடையே மயிலின் கூவலோ குறைந்தபட்சம் நீர்க் கரையில் வாழும் ஒரு தவளையின் சத்தமோ போதும்

என்னைக் காப்பாற்ற

மயான அமைதி கொண்டு இயற்கையின் பிடியில்

எவ்வாறு வாழ்கிறோம்

என்பதை அவை

பரிந்துரைக்கும்”’’

வெறும் செங்கல்களும் மண்ணும் சிமெண்டும் கலந்து வீடாகி விட்டாலும் அதை உயிர்ப்பித்து இல்லமாக மாற்றிக் காட்டும் திறமை பெண்களிடமே உண்டு. ஆண் சம்பாதித்து தனது உழைப்பை முழுமையாக ஈடுபடுத்தி வீட்டைக் கட்டினாலும் எல்லோருக்கும் அம்மா வீடு தானே நினைவில் நிற்கும். வீட்டை இல்லமாக மாற்றி எல்லோரது உள்ளங்களிலும் ஒளிவிளக்கை ஏற்றும் பெண்ணின் மனதில் வீட்டைக் கட்டுகையில் ஏற்படும் சோதனைகளும் துன்பங்களும் அவளது உள்ளத்தையே பிரதிபலித்து வீடெங்கும் நினைவுகளாக அவளது வாசனையைப் பரப்பும் காற்றாக நிறைந்து விடுகிறது.

‘‘’உறவினர்களிடமும் நண்பர்களிடமும்

ஒவ்வொரு

அறையாக காட்டிச் சிரிக்கிறாள் வீட்டின் எஜமானி

புதிதாய் உருவான

அவள் வீட்டின் கட்டுமானப் பணி அவள் வாழ்நாள்

சிரமங்கள் அவளது வாசனையாக

முழு வீடும்

விரிந்து கொண்டுள்ளது.”’’

ராட்டினத் தொழிலாளிக்கு மழைக்கூலி கொடுக்கும் மேகத்தை வர்ணிக்கும் கவிஞரின் உள்ளத்திற்குள் அன்பும் பெருங்கருணையும் பிரசவித்து விடுகிறது. வறுமை ஆட்கொண்ட போதும் அன்பை வெளிப்படுத்தும் தொழிலாளிக்கு வானமும் பிரதிபலன் பாராது மழையை கூலியாக்கி விடுகிறது.மழைக்கூலி என்ற சொற் சித்திரம் அவ்வளவு எளிதில் மனதைவிட்டு அகலப் போவதில்லை.

‘‘’கடற்கரையில் யாரும் இல்லை குழந்தைகளுக்கான

ராட்டினத்தை

வெறுமனே சுற்றி விடுகிறார் அத்தொழிலாளி

எல்லா மேகங்களும் ஓடி வந்து அதில் அமர்ந்து விட்டன மழைக்கூலி.”’’

மழலைகளின் உள்ளத்தில் எழும் மாசு மருவற்ற எண்ணங்களே அவர்களை அழகாக்கி ரசிக்க வைக்கின்றன. இன்றை மட்டுமே நம்பி நாளைப் பற்றிய கவலைகளற்று நம்மை உயிர்ப்பிக்கும் பேராற்றல் அவர்களுக்கு உண்டு. மகிழ்வையும் பேரானந்தத்தையும் நமக்குப் பரிசளிக்கும் அவர்களை நல்லமுறையில் பண்புகளைக் காட்டி வளர்த்தலே பெற்றோரின் கடமையாகிறது. அப்படியான கடமை தவறாதவர்களையே கடவுள் அருகிருந்து ரசிப்பார். தன் இருப்பிடம் விட்டு வந்து அவர்களுடன் விளையாடவும் தயங்குவதில்லை கடவுள்.

‘‘’குட்டித் தங்கம்

எந்த சாமிக்கு

இந்த மழை என்று கேட்கையில் உனக்குத்தான் என்று

கழுத்தில் போட்டுக் கொண்டு குழந்தையை

தூக்கிக் காட்டுகிறாள்

கர்ப்ப கிரகத்தை நோக்கிச் சிரிக்கிறது கடவுள். ‘‘’

உலகம் உருண்டைதான் என்பதை ஒவ்வொரு செயலும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. பழமையின் செயல்கள் மறைந்து மறைந்தே புதிய புதிய பெயர்களில் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. இயற்கை நிகழ்வுகளுக்கு மாற்றமில்லாததுபோலவே மனிதச் செயல்களும் ஒன்றிலிருந்து இன்னொன்றாக உருமாறிக்கொண்டேயிருக்கும்.

‘‘’கிராமத்தில் கிணற்றில் தண்ணீர் சேந்தியவள்

அடுக்குமாடிக் குடியிருப்பில் தூக்குப் போசியில்

பாலைச் சேந்துகிறாள்.

சூரியன் கிழக்கே

உதயம் ஆகிறது

மேற்கே மறைகிறது.''''

சூரியனின் வெளிச்சமும் இரவைப் பகலாக்கும் நவீன தொழில்நுட்பங்களின் ஒளியும் மனித மனங்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகின்றன. மேகத்தின் மீது கரியைப் பூசம் தொழிற்சாலைப் புகை மனிதர்களுக்கு எல்லாவதத்திலும் சீர்கேட்டை வரவழைத்து விடுகிறது. எது பகல் எது இரவு அறியத் துடிக்கிறது மனம். எது துறவு எது நாட்டம் குழம்பித் தவிக்கிறது தினம் தினம். எல்லா செயல்களுக்குள்ளும் அவசரமும் ஓட்டமும் மனிதனை நின்று நிதானித்து விடாமல் துரத்திக் கொண்டே இருக்கிறது. இத்தகு சூழலில் ஜென் வசம் ஒப்படைக்கும் மனதில் அமைதியும் ஆனந்தமும் புதிய பார்வையை உருவாக்கி விடுகிறது. கணக்கற்று நீளும் தொழிற்சாலை உற்பத்திகள் மனித நுகர்வுக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கும் அதே வேளையில் அவரவர் உணவில் கலப்படங்களும் விஷங்களும் கலந்து வருவதை அறிந்தும் அறியாமலேயே நகர்ந்து விடுகிறான் மனிதன்.

''''மேகமாக ஆவதில்லை தொழிற்சாலைப் புகை
உணவில் கரி''''

நவீன கவிதைகளின் போக்கு இன்று எல்லா தளங்களிலும் விரிவடைந்து கொண்டே வருகின்றன. அகமும் புறமும் விரிந்து எல்லாவிதமான தடைகளையும் தாண்டி அனைத்துவித செயல்களுக்குள்ளும் பற்றிப் படர்ந்து கிளை விரிக்கும் நவீன கவிதைகளில் நிகழ்வுகள் மட்டுமே காட்சிப்படுத்தப்படுகின்றன அதன் வழியே வாசிக்கும் ஒவ்வொருவரும் விழித்துக் கொள்ளும் எண்ணங்கள் ஏராளமாக பொதிந்து கிடக்கின்றன அந்த வகையில் சமூக ஈடுபாடு கொண்ட மனதில் சமூகத்தின் போக்கும் அதற்கான தீர்வும் மட்டுமே முன் நிற்கின்றது. சுற்றுச்சூழல் சீர்கேடு பருவமழை பொய்த்தல் இயற்கையின் வரம்பற்ற பசுமையை கபளீகரம் செய்யும் பேராசைத்தனங்களை வெறுத்தல் என எல்லா நிலைகளுக்குள்ளும் தன் எண்ணங்களைப் புகுத்தி கவிதைகளின் வழியே ஏதேனும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற துடிப்பும் ஈடுபாடும் கவிதைகளில் மலர்கின்றன. நவீன கவிதைகளில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதில் நல்லதொரு அடியை எடுத்து வைத்திருக்கிறார் புன்னகை பூ ஜெயக்குமார்.

தொழிற்சாலை மேகங்கள்
கவிதைத் தொகுப்பு
புன்னகை பூ ஜெயக்குமார்
பதிப்பு ஜூலை 2025
பக்கங்கள் 76
விலை ரூ.120
வெளியீடு: வேரல் புக்ஸ் சென்னை.

A.S.சுந்தரராஜன், மானாமதுரை

## முன்னரும் பின்னரும்

உடல் வேதனையிலும்
மன வேதனையிலும்

முன்னர் சொல்லப்பட
வேண்டியது
கொஞ்ச நேரத்தில்
சரியாகி விடும்
என உடல் வேதனைக்கும்
கொஞ்ச காலத்தில்
என மன வேதனைக்கும்
உணர்வு ரீதியான
ஆறுதல்

பின்னர் தான்
மருத்துவர் உதவி நாடு என்பதும்
ஓய்வு எடுத்துக்கொள் என்பதும்
உணவில் கவனம் என்பதும்
உடலுக்கும்

காரணம் அறிந்து
செயல்படு என்பதும்
தன்னுடையதோ இரவல்
பெற்றதோ ஆலோசனைகளும்
புத்தி ரீதியான
நம்பிக்கை



# நடக்கும், ஆனால் நடக்காது

சோ.ராமேஸ்வரன்

மூன்று சந்தர்ப்பங்களில் சந்தித்த ஒரே பெண்ணை நான்காவது சந்தர்ப்பத்தில் சந்தித்த போது ஒரு முகஸ்துதிக்காக அவர் ''ஹலோ'' என்று சொல்ல, அவள் கனிவுடன் ''ஹலோ'' என்ற கூறிவிட்டுச் சென்றாள். ஒரு வார்த்தையில் முடிவடைந்த அந்த அறிமுகம் ஐந்தாவது சந்தர்ப்பத்தில் அவர்களுக்கிடையிலான ஒரு நட்புறவின் முதலாவது அத்தியாயத்தை எழுதிவைத்துவிட்டது.

**முதலாவது சந்தர்ப்பம்...**

வெள்ளவத்தை கடற்கரையை அண்டிச் செல்கின்ற மரைன் டிரைவில் காலை ஆறு மணிக்கு தேகாரோக்கியத்திற்காக 'ஜொக்கிங்' செல்கின்ற நூற்றுக்கணக்கானவர்கள் மத்தியில் சகாதேவனும் ஒருவர். அறுபத்தைந்து வயதைத் தாண்டிய அவர் தோற்றத்தைப் பொறுத்தளவில் திடகாத்திரமாகத் திகழ்ந்தாலும், நீரிழிவு நோய்க்குள்ளாகியிருந்தார். அவருக்கு நீரிழிவு இருப்பது அண்மையில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் விளைவு உடல் பருமனைக் குறைக்க வேண்டும், அதற்கு நாளாந்தம் நாற்பத்தைந்து நிமிடங்களாவது 'ஜொக்கிங்' செய்ய வேண்டும் என்று வைத்தியர் கூறிவிட்டார்.

வைத்தியரின் ஆலோசனையை சகாதேவன் தட்டிக்கழிக்கவில்லை. அதற்குக் கட்டுப்பட்டார். விடியற்காலை ஐந்து மணிக்கே அலாரம் அவரை எழுப்பிவிடும். அவரே தேனீர் தயாரிக்க வேண்டிய கட்டாயம்.

மனைவி ஆறு வருடங்களுக்கு முன் இறந்துவிட்டாள். முப்பத்தியெட்டு வருட திருமண வாழ்க்கை. இரு பிள்ளைகள். மகன் திருமணமாகி பத்து வருடங்களுக்கு முன்னரே நியூசிலாந்துக்கு மனைவியுடன் பறந்துவிட்டான். மகள் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் லண்டனுக்கு கணவருடன் சென்றுவிட்டாள். இரு பிள்ளைகளும் தங்களுடன் வந்து வாழும்படி வற்புறுத்திக் கேட்டும் அவர் மறுத்துவிட்டார். அவர்களுக்குத் தொந்தரவாக இருக்க அவர் விரும்பவில்லை.

மனைவியின் பிரிவும், தனிமையான வாழ்க்கையும் ஆரம்பத்தில் அவருக்கு நாட்களைக் கடத்துவதில் கஷ்டத்தை ஏற்படுத்தின. ஆனால், நாளடைவில் தனித்து நிறைவேற்றக்கூடிய காரியங்களில் மூழ்கவே, தனிமை அகன்றது. ஆனால், நிர்மலாவின் நினைவு தான் இடையிடையே அவர் தனிமைக்கு சவாலாக இருந்தது.

வெள்ளவத்தையில் ஆறு மாடி தொடர்மாடிக் குடியிருப்பில் ஆறாவது மாடியில் இவரது 'பிளட்' அமைந்திருந்தது. சமைத்தல், கடைக்குப் போய் சாமான்களை வாங்குதல், உடுப்புகளைச் சலவை செய்தல் என எல்லா வேலைகளையும் அவர் தனித்தே நிறைவேற்றினார். வேலை இல்லாவிட்டால், பத்திரிகைகளை வாசித்தல், தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்த்தல், கணனியில் இணையதளங்களை, முகநூலைப் பார்வையிடுதல் என நேரத்தைக் கழித்தார். அரட்டை அடித்தலை, பொது நிகழ்ச்சிகளுக்கு செல்வதை அவர் தவிர்த்தார்.

சகாதேவன் தேனீர் பருகிவிட்டு நேரே 'மரைன் டிரைவுக்கு' நடந்தே சென்றுவிடுவார். அவரது குடியிருப்பில் இருந்து 'மரைன் டிரைவ்' அரை கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. 'ஜொக்கிங்' செய்யும் போது அக்கம் பக்கத்தில், எதிரே யார் வருகிறார்கள் என்று பார்க்க மாட்டார். தன்பாட்டில், கனவுலகில் நடப்பது போல நடப்பார். நாற்பத்தைந்து நிமிடங்கள் நடந்த பின் கடற்கரையில் இருக்கும் ஒரு சிறிய கற்பாறையின் மீது அமர்ந்துவிடுவார். பதினைந்து நிமிடங்கள் கடந்த பின்னர் அவர் வீட்டுக்குச் செல்வார். அப்படி செல்ல முற்படுகையில் தான் அவள் முதன்முதலாகத் தென்பட்டாள். ஒரு முறை பார்த்தவர் இரண்டாம் முறையும் பார்த்தார். அவளும் அவரைப் பார்த்தாள். இருவரது பார்வைகளும் சில வினாடிகள் குத்திட்டிருந்தன. 'சடாரென' அவள் பார்வையைத் தாழ்த்திவிட்டுச் சென்றுவிட்டாள்.

அவரைப் போலவே அவளும் 'ஜொக்கிங்' செய்ய வந்திருந்தாள். நீண்ட 'ட்ரக் சூட்', 'ரீ சேர்ட்', 'கன்வஸ்' சப்பாத்து என்பவற்றை அணிந்திருந்தாள்.

அவர் நாளாந்தம் காணும் பெண்களில் அவளும் பத்தோடு பதினொன்றாக இருந்திருக்கலாம். ஆனால், அவளை 'எங்கேயோ' பார்த்த ஞாபகம் அவர் நெஞ்சில் நிலவியது. அதை விட 'யாரையோ' நினைப்பூட்டுபவளாகவும் விளங்கினாள். யாராக இருக்கும்? நினைவில் எவருமே தட்டுப்படவில்லை.

வீட்டுக்குச் சென்று தொலைக்காட்சியில் செய்தியைப் பார்க்கும் போது அவள் ஞாபகம் வந்தது. மீண்டும் அவள் யார் என்ற கேள்வி மனதில் முளைத்தது. பதில் வரவில்லை. சிறிது சிறிதாக அவள் நினைவு தேய்ந்தது. அவளை அவர் மறந்துவிட்டார்.

**இரண்டாவது சந்தர்ப்பம்...**

ஒரு சனிக்கிழமை. சகாதேவன் அருகில் உள்ள கடைக்குச் செல்கிறார். சாமான்களை வாங்கிக் கொண்டிருக்கையில் அவள் அங்கு வருகிறாள். அவளை அவர் கண்டுவிடுகிறார். ஒரு கணம் தடுமாறிவிடுகிறார். அவள் மீது வைத்த விழிகளை அகற்ற முடியாமல் அவளையே பார்த்தபடி நிற்கிறார். அவளும் அவரைப் பார்க்கிறாள். அவள் பார்வையில் ஓர் அறிமுகத்தன்மை சாடையாக ஒட்டியிருந்தது. எல்லாமே சில வினாடிகள் தான். இருவருமே தத்தம் பார்வைகளை விலக்க வேண்டிய நிலை அங்கு உருவாகிவிடுகிறது. அவர் அங்கிருந்து வெளியேறுகிறார்.

வீட்டில் சகாதேவன் மீண்டும் அவளையிட்டு ஓர் அலசலில் ஈடுபடுகின்றார். யார் அவள்? எங்கே கண்டிருக்கிறேன்? என்ற கேள்விகள் தான் அவரை வலம் வந்தபடி இருந்தன. மீண்டும் அவருக்குத் தோல்வி. அவள் யார் என்பதை அறியும் தன் முயற்சியைக் கைவிட்டார். ஆனாலும், அவள் நினைவு இடையிடையே அவர் மனதை மேய்ந்தது.

**மூன்றாவது சந்தர்ப்பம்...**

தனது ஓய்வூதியம் சம்பந்தமாக ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாயம் சகாதேவனுக்கு ஏற்படுகின்றது. அங்கு சென்று தனது அலுவலை முடித்துவிட்டு 'பஸ்' தரிப்பிடத்திற்குச் செல்கிறார். அங்கு நிற்கும் போது அவரை நோக்கியபடி அவள் வருகிறாள். இருவரது விழிகளும் சந்திக்க, அவள் இதழில் ஒரு சிறிய புன்னகை. அவர் புன்னகைக்க முயல்கையில் அவரைக் கடந்தபடி அவள் செல்கிறாள்.

இரண்டு 'பஸ்'கள் வந்த போதும், சகாதேவன் அவற்றில் ஏறவில்லை. அவளின் எண்ணம் அவர் சிந்தனையைக் குழப்பிவிட்டது. இயக்கமும் நின்றுவிட்டது. ஓர் அதிசயமான உணர்வு தன்னுள் உருவாகிவிட்டதோ என்று அவர் தன்னையே கேட்பது போல், அவளின் வருகை விளங்கிவிட்டது.

வீட்டிலும் அவருக்;கு நிம்மதி கிட்டவில்லை. அவள் யார் என்ற கேள்வியே அவரைத் துரத்தியபடி இருந்தது. ஒரு சூன்ய நிலையில் திகழ்கிறார். மதியம் இரண்டு

மணியாகிய போதும் அவருக்குப் பசிக்கவில்லை. திடீரென அவர் நினைவுக்குள் அந்த உண்மை பளிச்சிடுகிறது. அவள் தென்னகத்து திரைப்பட நடிகையின் சாயலில் இருக்கிறாள். அம்மா வேடத்தில் நடிக்கும் அந்த நடிகை தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் நிகழ்ச்சியொன்றையும் நடத்துகிறாள். அவள் பெயர் ஞாபகத்திற்கு வரவில்லை. அவளைப் போன்ற முகவெட்டும், தோற்றமும், உயரமும் இவளுக்கு இருந்தது.

இப்போது சகாதேவன் சற்று நிம்மதி அடைகிறார். ஆனால், அவள் நினைவை அவரால் களைய முடியவில்லை. அது அவர் மனதை நிரப்பிவிட்டது. மீண்டும் எப்போது பார்ப்போம் என்ற உணர்வே மனதினுள் அடிக்கடி கிளம்பியது. ஏன் அந்த உணர்வு வருகின்றது?

நிர்மலா இறந்த பின் ஒரு பெண்ணைக் கூட அவர் வித்தியாசமாக நோக்கவில்லை. இப்பொழுது இப்படி ஏன் நினைக்கிறேன் என்று அவர் தன்னைத்தானே கேட்டார். அவள் யார்? அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நான் ஏன் அவளைப் பற்றி நினைக்க வேண்டும்? அன்றாடம் சந்திக்கும் பலரில் ஒருத்தியாக இருக்கும் பெண்ணைப் பற்றி ஏன் அலசி ஆராய வேண்டும்? அப்படி அவளில் என்ன இருக்கிறது? ஒரு தெரிந்த நடிகையைப் போல இருப்பதனால் அவளை நினைத்துப் பார்க்க வேண்டுமா? அவளைக் காணும் போது நான் ஏன் பரவசமடைகிறேன்? என் மனம் ஏன் தடுமாறுகிறது? அவள் யார்? எண்ணற்ற கேள்விகள், அதை விட பல மடங்கு கூடுதலான பதில்கள். அவற்றில் தெளிவில்லாத பதில்களே அதிகம்.

**ஐந்தாவது சந்தர்ப்பம்...**

அவளை மிக நெருக்கமாக சகாதேவன் சந்தித்துவிடுகிறார். அது அவர் அதிர்ஷ்டமாக இருக்கலாம்.

விடியற்காலை 'ஜொக்கிங்'; போவதற்காக 'லிப்டில்' கீழே வந்து கொண்டிருக்கையில் 'லிப்ட்' மூன்றாவது தளத்தில் நிற்கிறது. வழமை போல், யார் வருகிறார் என சகாதேவன் நோட்டம் விடுகையில், ஒரு பெண் உள்ளே வருகிறாள். அவர் விடை தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கும் கேள்விகளைத் தொடுப்பதற்கு காரணமாக இருப்பவள் அவள். முதல் நான்கு சந்தர்ப்பங்களின் பின் சகாதேவனைப் பலவிதமான உணர்ச்சிகளுக்கு உட்படுத்தியவள். அவளைக் கண்டு அவரின் சகல உணர்ச்சி நாளங்களும் ஒரு முறை சிலிர்த்தெழுந்தன. உடல் முழுவதும் 'ஏதேதோ' ஓடுவது போன்ற உணர்ச்சி... ஏன்? எதற்காக?

அவள் புன்னகைத்தாள். பின் "ஜொக்கிங் போறீங்கள் போல..." என இழுத்தாள்.

அப்போதே அவரும் அவளை முழுமையாகப் பார்த்தார். அவள் 'ஜொக்கிங் சூட்டில்' இருந்தாள்.

"ஓமோம்" என்கிறார் அவர்.

"வாங்க இரண்டு பேரும் ஒண்டாக போவம்."

அந்த அழைப்பு அவரைப் பரவசப்படுத்திவிட்டது. அதற்குத் தான் காத்திருக்கிறேன் என்ற வகையில் அது அமைந்துவிட்டது. சில வினாடிகள் வரை விபரிக்க முடியாத பரவச உணர்ச்சியில் மூழ்கி, திக்குமுக்காடுகிறார். அவருக்குள் சிக்கல் நிலைமை உருவாகிவிடுகிறது. நிதான நிலைக்குத் திரும்புவதற்கு சிறிது கஷ்டப்பட்டார்.

அதன் பின் சகாதேவன் சாவி கொடுத்த பொம்மையாட்டம் அவளுடன் நடக்கிறார்.

"நீங்களும் அந்த 'புளு மவுன்ரன் ஃபிளட்'டிலா இருக்கிறீங்கள்?" என அவள் வழியில் கேட்டாள்.

"ஓமோம். நீங்கள்?"

"நானும் அங்க தான் இருக்கிறன்."

அவர் ஆச்சரியமடைந்துவிடுகிறார். "நான் உங்களை ஒரு நாளும் காண இல்லையே! எந்த வீட்டில இருக்கிறீங்கள்?"

"'தேர்ட் ஃபுளோரில'... மூண்டாம் 'நம்பர்' வீடு என்ர மகளின்ர வீடு."

"'மிஸிஸ்' விஸ்வநாதன் உங்கட மேளோ?"

"'ஓ யெஸ்'. அவையள் வீட்டைப் பூட்டிப்போட்டு கலிபோர்னியாவுக்கு போயிட்டினம். நான் ஊரில 'ஹஸ்பன்டோட' இருந்தனான். மூண்டு வருசத்திற்கு முந்தி அவர் தவறிப் போனார். ஊரில ஒரு துணையும் இல்லாமல் இருந்தனான். அதால இஞ்ச வீடு சும்மா தானே இருக்குது, போய் இருங்கோ எண்டு மகள் சொன்னா. நாலு மாசத்திற்கு முந்தித் தான் இங்க வந்தன்" என அவள் கூறுகிறாள்.

அவள் கூறியவற்றுக்கு வெறுமனே தலையாட்டியபடி வந்த சகாதேவன், அவள் கணவனை இழந்தவள் என்பதை அறிந்ததும் சற்று மனமகிழ்ந்தார். அவருள் ஒரு சுறுசுறுப்புத்தன்மை ஊற்றெடுத்தது. தனக்கு அது ஒரு சாதகமான விடயமாக இருப்பதாகவே அவருள் அது பொருள் விளக்கமளித்தது.

"உங்களுக்குப் பெயரென்ன?" எனக் கேட்டார்.

"'மிஸிஸ்' கேசவமூர்த்தி."

"உங்கட பெயர்?"

அவள் சிரித்தாள். "அது புராணக் கதையில வாற ஒரு பெயர். சொல்ல வெட்கமாக இருக்குது."

"பரவாயில்லை சொல்லுங்க. நான் தானே?" என்கிறார்

சத்தியமூர்த்தி. 'நான் தானே' என்ற சொல்லை சற்று அழுத்தமாகக் கூறியிருந்தார்.

"திரௌபதை" என்று கூறிவிட்டு, நாணத்துடன் சற்று நெளிந்து வளைந்தாள்.

"நல்ல பெயர் தானே? சுருக்கமாக திரா எண்டு கூப்பிடலாம்."

அவள் ஒன்றும் சொல்லவில்லை. இருவரும் நடக்கின்றனர். சகாதேவனைப் பற்றி அவள் விசாரிக்கிறாள்.

"என்ர பெயர் சகாதேவன்" என்று அவர் கூறவும், அவள் நின்றுவிடுகிறாள். அவள் முகத்தில் வியப்பு.

"ரண்டு பேருக்குமே பஞ்சபாண்டவரில வாற பெயர்..." என அவள் வார்த்தைகளை இழுத்தாள்.

அவர் தலையை ஆமாம் என்று அசைக்க, அவள் யோசனையில் மூழ்கியவண்ணம் நடையைத் தொடர்கிறாள்.

சகாதேவன் தன்னைப் பற்றி எல்லா விபரங்களையும் கூறுகிறார்.

"ஓ நீங்களும், நானும் ஒரே கப்பல்ல தான் போகிறம் போல" என்று சொல்லி அவள் சிரித்தாள்.

இப்போது தனக்கும், அவளுக்கும் இடையில் ஓர் அந்நியோன்யம் முளைத்திருப்பதாக அவருக்குத் தோன்றுகிறது. அவள் மீது அளவுகடந்த ஓர் அன்பு பிறக்கிறது.

அன்றைய காலைப் பொழுது சகாதேவனுக்கு இனிமையாகக் கழிந்தது. அவளை மனதுக்கு வரவழைப்பதும், அதில் இன்பம் காண்பதும், அந்த எண்ணத்தைக் களைந்துவிட்டு, மீண்டும் அவளை வரவழைப்பதுமாக...

நேரம் செல்லச் செல்ல அவர் மனம் பல கணக்குகளை, பல கோணங்களில் போடுவதும், அழிப்பதுமாக இருந்தது. அது சரியா, பிழையா என்றும் அலசி ஆராய்ந்தது. அவரது இச் செயல்கள் யாவற்றுக்கும் அவளே நடுநாயகமாகத் திகழ்ந்தாள்.

அவளுக்கு எத்தனை வயது வரும்? ஐம்பத்தைந்து? அறுபது? தலைமயிர் நரைத்திருக்கின்றதா? அதை மூடிமறைத்திருக்கிறாளா?

அவள் மனதில் என்னைப் பற்றி என்ன எண்ணம் பதிந்திருக்கும்? என்னுள் ஏற்பட்டிருக்கும் ஏதாவது உணர்வுகள் அவளுக்குள்ளும் ஊடுருவியிருக்குமா?

திடீரென சே! இந்த வயதில் இப்படியொரு கேவலமான எண்ணமா என்று எதுவோ சாட்டையால் அடிப்பது போன்ற உணர்வு மேலோங்குகிறது. இரு பிள்ளைகளும் திருமணமாகி, மூன்று பேரப்பிள்ளைகளைக் கண்ட பின் இப்படியொரு இழிவான எண்ணம் ஏன் வந்திருக்கிறது? உன்னை எல்லோரும் காறித்துப்பும் இழிநிலைக்கு நீ உன்னைத் தாழ்த்திக்கொள்கிறாயா என்று 'யாரோ' கேட்பது போல ஓர் அசரீரி.

நிர்மலாவின் நினைவு மனதினுள் முகிழ்கின்றது. முப்பத்தியெட்டு வருட திருமண வாழ்க்கை. எல்லோருமே போற்றிப் புகழ்ந்த திருமண வாழ்க்கையை வாழ்ந்துவிட்டு, வாழ்வின் கடைசிக் காலத்தில் இப்படியொரு கேவலமான சிந்தனை ஏன் மனதினுள் தோன்றுகின்றது?

கடந்த சில வருடங்களாக நிலவிய வெறுமையான வாழ்க்கை இப்படியொரு அபத்தமான எண்ணத்திற்கு வழிகோலிவிட்டதா? நிர்மலாவின் நினைவில் எதுவித ஆசாபாசங்களுமின்றி, உணர்வுத் துடிப்பின்றி வாழ்ந்த எனக்கு ஏன் இந்த அசிங்கமான எண்ணம் ஏற்பட்டது?

நீ செய்வது தவறு, பச்சைத் துரோகம் என்று எதுவோ அவரை உறுத்தியது. வெட்கம் கெட்ட விதமாக நடக்கக்கூடாது, எல்லா தவறான எண்ணத்தையும் களைந்துவிட வேண்டும் என்றெல்லாம் அடிமனது கட்டளையிடுகின்றது. நேரம் செல்லச்செல்ல அவர் தனது மனதுக்கு கடிவாளம் போட்டுவிடுகிறார்.

திரௌபதையின் எண்ணம் வந்தாலும் அதைத் தூக்கியெறிந்தார்.

இரு நாட்களாக அவளைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டவில்லை. ஆனாலும், அவள் எண்ணம் அவரில் மீண்டும் முளைக்கத்தான் முற்பட்டது.

மூன்றாம் நாள் 'ஜொக்கிங்' செல்வதற்கு கீழே செல்ல அங்கு திரௌபதை நிற்கிறாள்.

"'குட் மோர்னிங்', உங்களுக்காகத் தான் நிற்கிறன்" என்று சொல்கிறாள்.

அது வரை மனதைப் பக்குவப்படுத்தப்பட்ட நிலையில் வைத்திருந்த சகாதேவனின் எண்ணங்கள் 'சடாரென' பின்னோக்கி ஓடின. பழைய உணர்வின் அலைகளில் மீளவும் மூழ்கினார்.

"'குட் மோர்னிங்'" என்ற சகாதேவன், "என்ன ரண்டு நாளா உங்களைக் காண இல்லை" என சற்று உரிமையுடன் கேட்கிறார்.

"சுகமில்லை. காய்ச்சல் மாதிரி இருந்துது. ஆனால், காய்ச்சல் இல்லை. வயசு போயிட்டு தானே? ஏதாவது வருத்தம் வந்து கொண்டே தான் இருக்கும்."

"வயசு போயிட்டுதா? உங்களுக்கு எத்தனை வயசு?"

“எத்தனை எண்டு நினைக்கிறீங்க?”

அவள் கேட்ட விதம், கேட்டு விட்டு அவரைப் பார்த்த விதம்... அதில் விபரிக்க முடியாத ஓர் அன்பு, அன்பை விரட்டியபடி ஒரு காதல் ஒட்டியிருப்பது போலவே சகாதேவனுக்குத் தோன்றியது.

“நாற்பத்தைந்து?”

அவள் நகைச்சுவை உணர்வு வெளிப்பட வாய்விட்டுச் சிரிக்கிறாள். “அறுபத்தியொண்டு” எனச் சிரிப்பினிடையே கூறுகிறாள்.

“என்னை விட நாலு வயது குறைவு.”

“இந்த சின்ன வயதிலை நாங்கள் ரண்டு பேரும் எங்கட துணையளை இழந்திட்டு இருக்கிறம்.”

அவ்வார்த்தைகள் சகாதேவனின் இதயத்தில் குளிர்மையை ஏற்படுத்திய நிலையில், “சின்ன வயசா?” என கேட்கிறார்.

“ஓமோம். முதுமையில் இளமை. அப்படியென்றால் சின்ன வயசு தானே” எனக் கேட்டு அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

சகாதேவனும் கூடவே சிரிக்கிறார். “உண்மை தான். கலியாண வாழ்க்கையை ஐம்பது வருசமாவது அனுபவிக்கணும். ஆனால், நான் முப்பத்தியெட்டு வருசம் தான் வாழ்ந்தன். மீதி பன்னிரண்டு வருசத்தை வாழ்ந்தால் தான் கலியாண வாழ்க்கை பூரணமாகிவிட்டுது எண்டு அர்த்தம்” என அர்த்தபுஷ்டியுடன் சகாதேவன் பேசுகிறார்.

பதிலுக்கு அவள் ஒன்றும் கூறவில்லை.

இருவரும் பேசியபடியே நடக்கின்றனர்.

இப்போது அவர் தன்நிலை புரியாத விதத்தில், அவள் பேச்சின் அடிமையான நிலையில் நடக்கின்றார். அவள் வார்த்தைகள் யாவும் அவள் தன் மீது அன்பைச் சொரிகிறாள் என்று அர்த்தம் கொள்ளும் விதத்தில் இருப்பதாகவே கற்பனை செய்கிறார்.

‘மரைன் டிரைவை’ அடைகின்றனர்.

“நீங்கள் நடந்திட்டு வாங்கோ. எனக்கு கொஞ்சம் களைப்பா இருக்கு. நீங்கள் வரும் வரைக்கும் இதிலை இருக்கிறன்” என்று கூறிய திரௌபதை, கடற்கரையில் கிடந்த பலகை வாங்கில் அமர்ந்தாள்.

சகாதேவன் அங்கிருந்து அகல்கிறார். நாற்பத்தைந்து நிமிட நடையை முப்பது நிமிடங்களுக்குச் சுருக்கியிருந்தார். அவளிடம் வந்தார். அவள் முன்பாக நின்றார்.

“இருங்க. ‘சிட் டவுன்’” என்றவள், வாங்கிலைக் காட்டினாள்.

அவர் அமரவில்லை. அவளையே ஆசை தீரப் பார்த்தபடி நின்றார். “வாங்க, இருங்க” என்கிறாள்.

அவள் அருகில், அவளை ஒட்டினாற் போல அவர் அமர்ந்தார்.

“உங்கட ‘வைஃப்’ செத்த போது உங்கட மனநிலை எப்படி இருந்துது?” இந்த மாதிரியான ஒரு கேள்வியை அவளிடமிருந்து இவ்வளவு சீக்கிரத்தில் அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் ‘வெலவெல’த்துப் போனார்.

என்ன கூறுவது?

நிர்மலா இறந்த போது சகாதேவனின் கண்களில் இருந்து நீர் வழிந்தது. சிறிது நேரம் குலுங்கிக் குலுங்கி அழுதார். ஒரு கட்டத்தில், “என்னை விட்டுட்டு போயிட்டீரே” என்று சொல்லிக் கதறினார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், உறவினர்கள் தன்னைப் பார்க்கிறார்களே என்ற உணர்வின்றி, அவர் தன் உணர்ச்சிகளை அழுகையாக, வார்த்தைகளாக வெளிவிடுகிறார். அதை அப்படியே கூறினால் திரௌபதை தன் மீது அன்பைச் சொரியாமல் விட்டுவிடுவாளோ என நினைத்தவர், “பெரிசா சொல்லிக் கொள்ளுற மாதிரி இல்லை” என வார்த்தைகளால் சமாளித்தார்.

“என்ர மனநிலையில தான் நீங்களும் இருந்திருக்கிறீங்கள்” என அவள் கூறவும், சகாதேவனின் மெய்சிலிர்த்தது.

“அப்படியெண்டால் உங்களுக்கும், அவருக்கும் இடையில அந்நியோன்னியம் இருக்க இல்லை போல...” சகாதேவன் அவள் மனதை வார்த்தைகளால் அளக்க முற்படுகிறார்.

“கடைசிக் காலத்தில அப்படித் தான் இருந்துது. அது ஏன் எண்டு என்னால சரியாக சொல்லத் தெரியாது.” இப்போது பழம் நழுவி பாலில் விழுகின்ற மாதிரி அவள் பேச்சு அமைய, அவர் மெல்ல புன்னகைத்தபடியே, “கன விசயங்களிலை நாங்கள் ரண்டு பேரும் ஒரே கப்பல்லதான் போகிறம் போல...” என்கிறார்.

அவள் சிரித்தபடியே ஓமோம் என தலையாட்டுகிறாள்.

இருவரும் அங்கிருந்து புறப்படுகின்றனர்.

அடுத்த ஒரு வாரமாக இருவரும் ஒன்றாகவே ‘ஜொக்கிங்’ சென்று வந்தனர். நிறைய விடயங்களை மனம் விட்டுப் பேசினர்.

இப்போது திரௌபதையின் மனதில் நிறைய இடத்தைப் பிடித்துவிட்டோம் என எண்ண சகாதேவன் ஆரம்பித்துவிட்டார். இத் தருணத்தில் அவள் மனோநிலையை அறிய வேண்டும் என்ற துடிப்பு அவருக்கு ஏற்பட்டது. அதை அறிந்தால் தான் அடுத்த காயை நகர்த்தலாம். ஏதாவது தவறான முறையில் பழகினால் அந்த தொடர்மாடியில் தொடர்ந்தும் இருக்க முடியாத சூழ்நிலையும் உருவாகிவிடும்.

சகாதேவன் வேண்டுமென்றே அடுத்த இரு நாட்களும் 'ஜொக்கிங்' போகவில்லை. வீட்டிலேயே முடங்கிக் கிடந்துவிட்டார்.

மூன்றாம் நாள் அதிகாலை வீட்டு மணியடிக்கின்றது. அது நிச்சயம் திரௌபதை என்று அவருக்குத் தெரிகிறது. கதவைத் திறக்க, வெளியே திரௌபதை நிற்கிறாள். அவள் முகத்தில் கலவரம், ஆர்வம் என இரு வெவ்வேறு விதமான உணர்ச்சிகள் பிரதிபலித்தன. எடுத்த எடுப்பில் "ஏன் 'ஜொக்கிங்' வரவில்லை" எனக் கேட்கிறாள்.

"காய்ச்சல்" என சகாதேவன் கூறுகிறார்.

அவள் உடனே அவர் நெற்றியில் தன் கையை வைத்துப் பார்க்கிறாள். "சாடையாக சுடுது" என்கிறாள்.

இதைச் சகாதேவன் சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. அவர் நாளங்கள் யாவும் புடைத்தெழுந்தன. குருதி சூடேற ஆரம்பித்தது. அப்படியே அவளைக் கட்டி அணைத்து... ஆனால், அவசரப்படக்கூடாது என உள்மனம் கட்டளையிட, இயல்பு நிலைக்குத் திரும்புகிறார்.

திரௌபதை தன் பார்வையை உள்ளே செலுத்துகிறாள். பத்திரிகைகள் நிலத்தில் தாறுமாறான நிலையில் வாரியிறைக்கப்பட்டிருந்தன. அவரது சில உடுப்புகள் சோபாவில் கிடந்தன. சாப்பாட்டு மேசையில் முதல் உபயோகிக்கப்பட்ட கோப்பைகள் கழுவாத நிலையில் தாறுமாறாக இருக்கின்றன.

அவள் பத்திரிகைகளை எடுத்தாள். அவற்றை மடித்து உரிய இடத்தில் வைக்கிறாள். அதன்; பின் அவருடன் அளவளாவியபடி அந்த வீட்டையே ஒழுங்குபடுத்துகிறாள். அவள் செயலை அவர் தடுக்கவில்லை. சுவாரஷ்யத்துடன், புன்னகை பூத்தவண்ணம் பார்த்துக்கொண்டே இருந்தார்.

நிர்மலாவும் இப்படித்தான் அளவளாவியபடி வீட்டை ஒழுங்குபடுத்துவாள். அந்த நினைவில் ஊறியவருக்கு திரௌபதை செய்வது ஒரு கடமையாகத் தெரிந்தது. செய்யட்டும், செய்யத்தானே வேண்டும் என்ற மனப்போக்கில் அவர் திகழ்ந்தார்.

எல்லாவற்றையும் முடித்துவிட்டு திரௌபதை நேரே சமையலறைக்குச் சென்றாள். கேத்தலை எடுத்து நீர் நிரப்பிவிட்டு, அதைக் கொதிக்க வைத்தாள். பின் அவரிடம் வந்தாள். "உங்களுக்கு ஒரு 'கப்' கோப்பி, எனக்கு 'ரீ" என்று கூறிவிட்டு, சமையல் அறைக்குச் சென்றுவிட்டாள்.

அவர் ஒன்றும் கூறவில்லை.

திரௌபதை திரும்பி வந்தாள். கோப்பியை அவரிடம் நீட்டிவிட்டு, அவர் முன்னால் அமர்ந்தாள்.

சகாதேவன் கோப்பியைச் சுவைத்தார். "நல்லா இருக்கு. 'தாங்ஸ்'" என்கிறார்.

அவள் அழகாகப் புன்னகைத்தாள். அவளை அவர் ஆழமாக நோக்கினார். அதே நேரமும் அவளும் அவரை நோக்கினாள். இருவரும் சில வினாடிகள் வரை ஒருவரையொருவர் பார்த்தபடி இருந்தனர்.

"முதல் முதல்ல உங்களைப் பார்க்கக்கிளை நீங்கள் ஏதோ ஒரு நடிகை மாதிரி தெரிஞ்சீங்க. ஆனால், இண்டைக்கு வரைக்கும் என்னால அதை கண்டுபிடிக்க முடியல்லை. எந்த நடிகை எண்டு உங்களால சொல்ல முடியுமா?" என விழிகளை அகற்றாமல் சகாதேவன் கேட்டார்.

"வயதான தோற்றத்தில நடித்த லட்சுமி மாதிரி இருக்கிறன் எண்டு நிறையப் பேர் சொல்லி இருக்கினம்" அவள் கூறிக் கொண்டே தனது விழிகளைத் திருப்புகிறாள்.

"'யெஸ் யூ ஆர் கரெக்ட்'. நானும் அந்த நடிகை ஆர் எண்டு இவ்வளவு நாளா தலைலைப் போட்டு உடைச்சுக் கொண்டு இருந்தன்."

"நீங்கள் ஒரு 'ஆக்ரர்' மாதிரி இருக்கிறீங்கள்" என அவள் புன்னகை மலரக் கூறுகிறாள்.

"எந்த 'ஆக்ரர்'?"

"நிழல்கள் ரவி."

அதைக் கேட்டு சகாதேவன் சற்று பலத்துச் சிரித்தார். "'ஸோ', இஞ்ச ஒரு 'ஆக்ரரும்', 'அக்ரஸ_ம்' இருக்கினம் போல."

அவளும் கூடவே சிரித்தாள்.

சிறிது நேர மௌனம் அங்கு தலைதூக்குகிறது.

"இப்ப கொஞ்ச நாளா நான் ஏதோ ஒரு சந்தோசத்தில இருக்கிற மாதிரி எனக்கு ஒரு 'ஃபீலிங்' இருக்குது." அவள் ஓர் ஏகாந்தமான நிலையில் கூறுகிறாள்.

சகாதேவன் பதிலுக்கு ஒன்றும் கூறவில்லை. அவளே தொடர்ந்தும் பேசட்டும் என்று காத்திருந்தார்.

"என்ர வாழ்க்கையில சில நேரத்தில ஒரே சந்தோசமாக இருக்கும். பேந்து அது தன்ரபாட்டில மறைஞ்சு போயிடும். இந்த சந்தோசமும் மறைஞ்சிடும். அது எப்போது எண்டு தான் தெரிய இல்லை."

"வாழ்க்கை எண்டால் அப்படித்தான்."

"அது உண்மை தான். ஆனால், இந்த மாதிரியான சந்தோசம் சற்று வித்தியாசமானது. அதை என்னெண்டு என்னால உங்களுக்கு விளக்கமாக சொல்ல முடியாமல் இருக்குது."

இருவரும் நெடுநேரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் அங்கிருந்து செல்கையில், "மத்தியானச் சாப்பாட்டை நான் கொண்டு வாறன். ரண்டு பேரும் சேர்ந்து சாப்பிடலாம்" என்கிறாள்.

சகாதேவன் மகிழ்ச்சியை நிறைய வாரி இழுத்த நிலையில் திகழ்கிறார். இப்போது அவருக்கு ஒன்று உறுதியாகியிருந்தது. அவள் அவரை விரும்புகிறாள். அதன் கடைசிக் கட்டம் எந்த விதத்தில் முடிவடையும் என்பதை அவரால் அனுமானிக்க முடியவில்லை. அவர்கள் இருவரும் இளம் வயதினர் அல்லர். வயது முதிர்ந்தவர்கள். பேரப்பிள்ளைகளைக் கண்டவர்கள். நாளை இருவரும் ஒன்று சேருவதை அவர்களது பிள்ளைகள் விரும்பினாலும், சமூகம் அவர்களைக் காறித்துப்பக்கூடும், தூற்றக்கூடும். அதை எதிர்நோக்கும் சக்தி அவர்களிடம் இருக்கிறதா என்பது ஒரு கேள்விக்குறியே.

மறுபுறத்தில் இருவருமே தமது துணையை இழந்திருப்பதனால் சட்டரீதியாக அது தவறல்ல@ ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பதனால் சமூகத்தின் பார்வை சார்புரீதியாக விளங்கக்கூடிய ஒரு நிலை உருவாகும். மறுமணத்திற்கு வயதெல்லை ஒன்று உண்டா என்பதற்கு ஒரு வரைமுறை உள்ளதா? இல்லவே இல்லை.

வெளிநாடுகளில் எல்லாம் இந்த மாதிரியான மறுமணங்கள் விமர்சிக்கப்படுவதில்லை. அவை வரவேற்கப்படுகின்றன. தமது பெற்றோருக்கு பிள்ளைகளே மறுமணம் செய்து வைக்கும் நிகழ்வுகளும் சாதாரணமாகவே இடம்பெறுகின்றன.

நாம் பாரம்பரியங்களில், கலாசாரங்களில் மூழ்கியவர்கள். அதன்படி எமது வாழ்க்கையை நாம் ஒரு கட்டுக்கோப்பான நிலையில் கட்டிவிட்டோம். அதன்படி நாம் வாழ்ந்துவிட்டோம். அந்தக் கட்டுக்கோப்பை நாம் எமது தேவைக்கேற்ப உருக்குலைக்கலாமா?

நிறையக் கேள்விகள், நிறைய சாதகமான, பாதகமான, மறுதலையிலான பதில்கள் வெளிப்படுகின்றன. ஒரு தீர்க்கமான முடிவும் வெளிப்படவில்லை.

சகாதேவனுக்கு தலை வெடிக்கும் போல இருந்தது.

மதியம் சாப்பாட்டுடன் திரௌபதை வந்தாள். இருவரும் சேர்ந்தே சாப்பிட்டார்கள், அளவளாவினார்கள்.

அடுத்த ஒரு வாரமும் மூன்றாம் மாடியிலிருந்து ஆறாம் மாடிக்கு பகல் வேளைச் சாப்பாடு சென்றது.

சகாதேவனும், திரௌபதையும் தமது உள்ளங்களை நன்கு திறந்துகாட்டிவிட்டார்கள். இளவயதினர் போன்று 'ஐ லவ் யூ' என்ற வழமையான பல்லவியை ஒப்புவிக்காமல், மனதினுள் ஓர் இறுக்கமான காதலை வளர்த்திருந்தார்கள். அவர்களின் காதலில் காமம் ஒட்டியிருக்கவில்லை. காதல் வார்த்தைகள் வெளியிடப்படவில்லை. ஆனால், ஓர் ஆத்மார்த்தமான காதல் அங்கு பிரசவித்திருந்தது. அது குழந்தைப் பருவத்தைத் தாண்டி, ஒரு பக்குவமான நிலையை அடைந்துவிட்டது.

அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்று அவருக்கு உறுதியாகியிருந்தது. அதே போல அவர் தன்னைக் காதலிக்கிறார் என்பது அவளுக்குப் புரிந்திருந்தது. அதை அவள் எவ்வித ஒளிவுமறைவின்றி கூறிவிட்டாள். "நீங்கள் என்னை விரும்புறீங்க எண்டு நான் எப்பவோ அறிஞ்சிட்டன். அதே மாதிரி நானும் என்னை அறியாமலே உங்களை விரும்பிட்டன். எங்களுக்கு முன்னால ஒரு பெரிய முள்ளு வேலி இருக்குது. அதை நாங்கள் எப்படி கடக்கப்போறமோ எண்டு தான் எனக்குத் தெரிய இல்லை."

"நாங்க தான் அதை எப்படியும் கடக்க வேணும்."

"என்னெண்டு?"

அவர் யோசனையில் மூழ்க, அவள் போய்விட்டாள்.

திரௌபதை கூறிய பெரிய முள் வேலி எது? அவரைப் பொறுத்தளவில் அவரது இரு மகள்மார் தான் அந்தப் பெரிய முள் வேலி. அவர் சமூகத்தையிட்டுக் கவலைப்படாததினால் சமூகம் முள் வேலியல்ல.

திரௌபதையைக் கைப்பிடிப்பதென்றால் மகள்கள் ஒரு முள் வேலியாக விளங்குவார்களா?

சில வேளைகளில் முள் வேலியாக முட்டுக்கட்டை போடுவார்கள். அப்படி போட்டால் அந்த முள் வேலியைத் தாண்ட முடியாது. அதை உடைக்கத்தான் வேண்டும். அவரால் முடியுமா?

சில வேளைகளில் முள் வேலி என்ற கேள்விக்கே இடமில்லாமலும் இருக்கலாம். அப்படியெனில் அது பூமாலையாக அவர் கழுத்தில் விழலாம்.

சகாதேவன் இரண்டு நாட்களாக ஒரு முடிவும் எடுக்க முடியாமல் தடுமாறினார். இவ்விடயத்தை எவ்வாறு மகள்களுக்கு விளக்குவது?

திரௌபதையும் அவரைத் தேடி வரவில்லை.

மூன்றாம் நாள் சகாதேவனின் மனம் தெளிவடைகின்றது. மகனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மெல்ல மெல்ல திரௌபதை பற்றி கூறியவர், அவளை மறுமணம் செய்யப் போவதாகக் கூறுகின்றார். அவன் தன்னைக் கண்டபடி ஏசுவான் என்று தான் அவர் எண்ணியிருந்தார். ஆனால், அதற்கு மாறாக, அவன் தனக்கு இதில் பூரண சம்மதம் எனக் கூறுகிறான். "அப்பா, ஏலுமெண்டால் அந்த 'அன்ரி'யின்ர படத்தை 'மெயில்' பண்ணிவிடுங்க" என்கிறான்.

ஒரு முள் வேலியை அவர் தாண்டிவிட்டார்.

இனி மகள்... அவர் தொடர்பு கொள்ள முன் அவளே இவரைத் தொடர்பு கொண்டாள். "அண்ணா எல்லாத்தையும் சொன்னவர். அப்பா, 'கொங்கிரஜூலேஷன்ஸ்'" என்கிறாள்.

சகாதேவன் நிறையவே மகிழ்ச்சியை அடைந்துவிடுகிறார். முள் வேலியை இலகுவாகத் தாண்டிவிட்டார். அதை நினைக்க, உடம்பெல்லாம் புல்லரித்தது. இருந்தாற் போல பத்து வயது குறைந்துவிட்டது போன்ற ஓர் உணர்வு அவரைப் போர்த்தியது. அந்த மகிழ்ச்சியான செய்தியை உடனடியாகவே திரௌபதைக்குச் சொல்ல வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட, மூன்றாம் மாடிக்கு படிக்கட்டு வழியாக விரைகிறார்.

திரௌபதையின் வீடு பூட்டிக்கிடக்கிறது. மணியை அடிக்கிறார். கதவு திறக்கப்படுகிறது.

"வாங்க" என அவள் வரவேற்கிறாள்.

அவர் உள்ளே செல்கிறார். நாற்காலியில் அமர்கிறார். அவளை ஆர்வத்துடன் பார்க்க, அவள் முகத்தில் ஒரு தவிப்பு தெரிகிறது.

"என்ர முகத்தைப் பார்க்கக்கிளை உங்களுக்கு என்ன விளங்குது" என அவள் கேட்கிறாள்.

"எங்கட விசயத்தை நீங்கள் உங்கட மகளோட கதைச்சிருப்பீங்க. அவ உங்களுக்;கு வெட்கமில்லையோ எனக் கேட்டு ஏசியிருப்பா. 'ஸோ', என்னை மன்னிச்சுவிடுங்கோ எண்டு சொல்லப்போறீங்க. அப்படித்தானே?"

அவள் கண்கள் கலங்குகின்றன. பேசுவதற்கு முயற்சிக்கிறாள். ஆனால், வார்த்தைகள் வெளிவரத் தயங்கின.

சகாதேவன் அங்கிருந்து வெளியேறுகிறார்.

மறு நாள் வெள்ளவத்தை சந்தியில் உள்ள பிரபல பத்திரிகையின் விளம்பர அலுவலகத்திற்குச் செல்கிறார். அவ்வாரத்தின் ஞாயிற்றுக்கிழமை வாரப்பத்திரிகையில் வெளிவரும் வகையில் விளம்பரமொன்றை எழுதிக் கொடுக்கிறார்.

அதை வாங்கிய விளம்பர உதவியாளர், மனதினுள் வாசிக்கிறான். 'அறுபத்தைந்து வயதான, தாரத்தை இழந்த, எவ்வித பொறுப்புமற்ற, இளமைத் தோற்றத்தைக் கொண்ட ஒருவர் பொருத்தமான பெண்ணை மறுமணம் செய்ய விரும்புகிறார்...'

சகாதேவன் வீட்டை நோக்கி நடக்கிறார். திரௌபதையின் நினைவு இடைக்கிடை தோன்றியபடி இருக்கின்றது.

(யாவும் கற்பனை)

# ஜமீல் கவிதை

நாளை பற்றியதான கனவுகள்
தங்களது பிள்ளைகளுக்கு
இருக்கிறதோ இல்லையோ

ஆனால் அப்பாக்களுக்கு
பிள்ளைகளின் பிரகாசமிகு
ஒளியை தவிர
வேறெந்த கனவுகளும் இல்லை

புத்தகப் பைகளுக்குள்ளிருந்து
அரும்பத் துவங்க வேண்டும்
பிள்ளைகளின் கனவுகள்

பிள்ளைகளின் பைகள்
புத்தகங்களால் பாரிப்பதுபோல்
அப்பாக்களின் சட்டைப் பைகள்
பிள்ளைகளின் வண்ணமிகு
கனவுகளால் கனக்கிறது

தெருத் தெருவாக அலைந்து
பழைய புத்தகங்களை
எடைக்கி வாங்கி
வாழ்வை கற்றுக் கொள்பவன்

சில வேளை வகுப்றையில்
அது புத்தம் புதிய
புத்தகமாக இருந்த போது

அதனை படித்து தேர்வடைய
தவறியவனாகக் கூட
இருக்க வாய்ப்பிருக்கிறது

புதியதோ பழையதோ
வாழ்க்கை பாடத்தை
அனேகமாக புத்தகங்கள்தான்
நமக்கு கற்றுத் தருகிறது



# மதுரை வீரன்

திவா இராஜேந்திரன் (அமீரகம்)

**வே**ண்டாத வெறுப்பாகப் மனம் பாரமாக பழனிக்கு பஸ் ஏறிய குமார் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்தவாறே நினைவுகளை அசைபோடத் துவங்கினான். பழனி அவனுடைய பூர்வீக ஊர். அவனுடைய அப்பா சிறுவயதில் இருக்கும்போதே திருப்பூருக்கு குடிபெயர்ந்து பல வருடங்கள் கடந்துவிட்டது. இப்பொழுது பழனிக்கும் அவர்களுக்கும் உள்ள ஒரேத் தொடர்பு அவர்களுடையக் குலதெய்வக் கோவில் மட்டுமே. சில பங்காளிகளின் பிரச்சனையில் பிரிந்த உறவுகள் தனித்தனியே கோவில் வைத்துக் கும்பிட ஆரம்பித்துவிட்டனர். குமாருடைய அப்பாவும் எந்தப் பக்கம் செல்வதென்று தெரியாமல் கோவிலுக்குச் செல்வதையே விட்டுவிட்டார்.

குமாருக்கு விவரம் தெரிந்து பழனி மலைக் கோவிலிற்கு பலமுறை வந்திருந்தாலும் குலதெய்வக் கோவில் எங்கு இருக்கிறதென்றேத் தெரியாது. இப்பொழுது பூர்விக இடத்தில் கும்பிடும் சுகப் பங்காளிகளில் ஒருவரின் வற்புறுத்தலில் குமாரடைய

அப்பா, குமாரை மட்டும் அனுப்பிவைத்திருந்தார். குமாருக்கு யாருடனும் அதிகம் பழக்கமில்லை என்ற எண்ணங்களைத் தாண்டித் தெய்வ வழிபாட்டில் ஆர்வமில்லாத இளைஞனாக இருந்தான்.

ஆனால் அப்பாவின் வற்புறுத்தலால் இந்த ஆடிமாதம் ஒன்றாம் தேதியிலிருந்துக் கவிச்சி ஏதும் சாப்பிடாமல் குடும்பத்தோடு விரதமிருந்திருந்தார்கள். குடும்பத்தில் மகளுக்கு வரன் கூடி வரவில்லை, தொழில் சரியாக போகவில்லை போன்ற தன் சொந்தப் பிரச்சனைகள் இறுக்கும்போது கை கூப்பித் தொழுவது குலதெய்வத்திடம் தானே. ஒரு பக்கம் சென்றால் இன்னொரு பக்கம் வெறுப்பைச் சம்பாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அப்பாவும், அம்மாவும் வராமல் குமாரை மட்டும் அனுப்பியிருந்தனர்.

குமாருக்குத் துளியும் விருப்பமில்லாமல் எரிச்சலாக செருப்பணியாத வெறும் கால்களுடன் பழனிப் பேருந்து நிலையத்தில் வந்திறங்கினான். பதினெட்டுநாள் செருப்பணியாமல் நடந்துப் பழகியிருந்தாலும் பேருந்து நிலையத்தில் கால் வைக்க அருவறுப்பாகத்தான் இருந்தது. “இந்தக் கன்றாவில வெறும் கால்ல நடக்குறதுக்குப் பேருதான் விரதமா? கொடுமை” என்று மனதிற்குள் சலித்துக்கொண்டு பெரியப்பாவிற்கு கைபேசியில் அழைத்தான். அவர் எடுத்ததும் “உன்னப் பாத்துட்டன் டா. உனக்குப் பின்னாடி தான் இருக்கேன்” என்று சொல்லி அழைப்பைத் துண்டித்துவிட்டுத் திருப்பிப் பார்த்ததும் தூரத்தில் நின்று கையசைத்தார்.

“வாயா, வாயா குமாரு. நல்லா இருக்கியா? உங்கொப்பன் நல்லா இருக்கானா?” என்றார் பெரியப்பா வேல்முருகன்.

“நல்லா இருக்கேன் பெரியப்பா. நீங்க நல்லா இருக்கீங்களா? பெரியம்மா, அக்கா எல்லாம்?”

“ம்ம், ஆத்தா அங்காளஈஸ்வரி புண்ணியத்துல எல்லாரும் நல்லா இருகோம்மப்பா. வா.” என்று சொல்லிக் கோவில் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வண்டி நேராகச் சந்து சந்தாக வளைந்து நெளிந்து சென்றது. பாதை மிகக் குறுகியதாக இருந்தது. இருசக்கர வாகனம் செல்லவே மிகச் சிரமமாக இருந்தது. அங்கு சென்று இறங்கியதும் “உனக்குப் பொறந்த முடி இங்கதான் எடுத்தோம். எனக்குத் தெரிஞ்சு அதுக்கப்புறம் இப்போதா நீ வர்றன்னு நினைக்கிறன்” என்று சொல்லி உள்ளே அழைத்துச் சென்றார்.

கோவில் என்றால் கோபுரம் வைத்துக் கட்டிய கோவிலில்லை. அது ஒரு குடியிருக்கும் வீடு. அந்த வீட்டிற்குப் போகும் வழியே ஒருவர் செல்லும் அளவில்தான் இருந்தது. வேல்முருகன் முன்னே செல்ல பின்னே குமார் சென்றான். வாசல் தன் தோள்பட்டை அளவை விட சிறியதாக இருந்ததால் நன்றாகத் தலைக் குனிந்து உள்ளே சென்றார்கள். அவர்கள் சென்றது வீட்டிற்குப் பின்புறம். அதுதான் கோவிலின் முன்வாசல். உள்ளேக் கிழக்குப் பார்த்தச் சுவற்றின் அருகில் இரண்டடி நீளமும், ஒன்னறையடி அகலமும் கொண்டப் பலகையைச் சங்கிலியால் கட்டித் தொங்கவிட்டு, அந்தப் பலகையின்மேல் பிரம்பால் செய்யப்பட்ட பேழைப் பெட்டியிருந்தது. அது தான் தெய்வம். அதற்குக் கீழே மூன்று அருவாள், கொண்டைப் பிரம்பு, குண்டாந்தடி என்ற ஒரு உருளைக் கட்டை போன்றவைச் சுவற்றில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது.

உள்ளே சென்றதும் பெட்டியின் முன் நின்று "ஆத்தா, உன் மதுரவீர காளையோட வாரிசு வந்துருக்கு." என்று சொல்லிவிட்டுக் குமாரைப் பார்த்து "கும்புட்டுக்கோயா" என்றார். குமாரும் நின்று வணங்கிவிட்டு திருநீரைப் பூசிவிட்டு வெளிவர அருகேயிருந்த சொந்த பந்தங்கள் குமாரை ஆரத்தழுவி அவனுடைய அப்பா, அம்மா, தங்கை அனைவரையும் நலம் விசாரித்தது. அனைவரையும் மற்ற விசேஷங்களில் சந்தித்திருந்தாலும் இங்கே வைத்துச் சந்திக்க மனதிற்கு இதமாக இருந்தது. பார்த்தவர்கள் அனைவரும் "உங்கப்பா அந்த மதுரவீர அருவாளைத் தூக்கி ஆடுற அழகப் பாக்க ரெண்டு கண்ணு பாத்ததுப்பா" என்று சொல்லிக் உடலை சிலிர்த்துக்கொண்டது.

அங்குள்ளப் பெட்டி, அருவாள் போன்றப் ஒவ்வொருப் பொருள்களுக்கு ஒவ்வொரு ஆள் இருப்பார்கள். அவர்களைத் தான் காளை என்று அழைப்பார்கள். மதுரைவீரனின் காளை குமாரின் அப்பா. அவர்தான் அந்த அருவாளை எடுத்துவர வேண்டும். அதுபோல அங்காளேஸ்வரிப் பெட்டியையும், கருப்பசாமி அருவாளையும், வீரபத்திரனின் குண்டாந்தடியையும் ஒவ்வொருவர் எடுத்து வருவர். பலவருடங்கள் குமாரின் அப்பா வராததால் மதுரைவீரனின் அருவாள் வெளி வராமலே இருந்தது.

சாயங்காலம் ஆத்துமேட்டுக்குக் கிளம்ப ஆயத்தமாயினர். முதலில் வேல்முருகன் கருப்பசாமியின் அருவாளை எடுத்துவிட்டு, குமாரிடம் மதுரைவீரனின் அருவாளை எடு என்று கண்ணைக் காட்டினார். குமாருக்கு அதிர்ச்சி. சற்றும் அவன் எதிர்பார்க்கவில்லை. இல்லை என்பதுபோல தலையாட்டிவிட்டு அப்படியே நின்றான். வேல்முருகனிற்கு முகம் சற்று மாறியது, சாதாரணமாக இருந்த கண்கள் கருவிழி மட்டும் தனியே நிற்க அகண்டு விழிப்பதுபோல் பார்த்து, உடல் அதிர "எட்றா அருவாளை" என்று ஒரு சத்தம் போட்டார். சுற்றியிருந்த அனைவரும் குலவையிட, குமாரின் அருகேயிருந்த சித்தி "சாமி வந்துருச்சு டா. போய் எடு, போ போ" என்று விரட்ட வேகமாகச் சென்று அருவாளை எடுத்துக்கொண்டான் குமார்.

சிறிது நேரத்தில் சாதாரணமாக மாறியப் பெரியப்பா குமாரை அருவாளோடு பார்த்ததும் முதலில் அதிர்ச்சியாகவும், பின் ஏதும் பேசாமல் சிரித்து நகர்ந்தார். குமார் அவரின் அருகில் செல்லாமல் தள்ளியே வெறுப்புடன் சென்றான் குமார். கோவில் வீட்டிலிருந்து நடந்து மாரியம்மன் கோவில், காரமடைத் தாண்டி சண்முகநதிக்குச் செல்லும் மெயின் ரோடு வந்ததும் பெரியப்பா குமாரை அருகே அழைத்தார். "என்னடா, உங்கப்பனோடப் பாரத்தை நீ சுமக்கப் போறியா" என்றார்.

"கோவம் கோவமா வருது பெரியப்பா. எனக்கு இதெல்லாம் நம்பிக்கையே இல்ல. உலகம் எங்கையோப் போய்ட்டு இருக்கு. இன்னும் குலதெய்வம், சடங்கு, சம்பிரதாயம்ன்னு ஏன் பெரியப்பா உசுர வாங்கிறீங்க? எனக்கு இங்க வரவே இஷ்டம் இல்ல. இதுல என்னையவே அருவாளைத் தூக்க வச்சுட்டீங்க. என்னத்தச் சொல்ல. நீங்க படிச்சவர் தான, நீங்களே சொல்லுங்க. இதெல்லாம் சரியா? இதுல சயின்டிபிகா என்ன இருக்கு? அந்நியன் படத்துல சொல்ற மாதிரி இது ஒரு வகையான டிஸ்ஸார்டர்." என்று கோவத்தில் எரிந்துகொண்டிருந்தான் குமார்.

"குமாரு, நீ சொல்ற டிஸ்ஸார்டர் ஒருத்தர் நம்ம இயலாமையாள பிரஷர் அதிகமாகி வேறொரு மனுசனா மாறும் தன்மை. ஆனா இங்க சாமிவர்றது எல்லாம் அந்தத் தெய்வத்தை நினைச்சு நினைச்சு அந்த தெய்வமாவே மாறும் தன்மை. மொதல்ல நம்ம சாமி என்னனு தெரிஞ்சுக்கோ. நேத்து ஒருத்தன் சொல்லி இன்னைக்கு எடுத்து கும்புட்டது இல்ல. இந்தப்பெட்டியோட வரலாறு தெரியுமா? இந்த மாதிரி நூத்துக்கணக்கான பெட்டிக இந்த ஊர்ல இருக்கு. ஆயிரக்கணக்கான பெட்டிக தமிழ்நாட்டுல இருக்கு. ஒரு கோவில் கட்டி கடவுள கல்லுல செதுக்கி வச்சு கும்பாபிஷேகம் பண்ணி, தினமும் பூஜை பண்ற சமாச்சாரம் இல்ல இது.... சரி.... நம்ம குலதெய்வம் என்ன?"

"அங்காள ஈஸ்வரி"

"ம்ம். அது தலைமை தெய்வம். அதுக்குக் கீழ ஏழு காவல் தெய்வம் இருக்கு. அந்த ஏழு காவல் தெய்வத்துக்கும் இரண்டுத் துணை தெய்வங்களா மொத்தம் இருவத்தொரு காவல் தெய்வம். அந்த இருவத்தொரு காவல் தெய்வத்திற்கும் துணை தெய்வங்களா அறுபத்துமூணு தெய்வம். இருபத்தியோரு பள்ளையம் (படையல்) போட்டு, அருவபத்தியொரு துணை தெய்வங்கள வச்சு காலம் காலமா கும்புட்டுட்டு வர்றோம். இந்தப் பெட்டி ஆத்துல வந்தத எடுத்து வச்சுக் கிட்டத்தட்ட நூத்தியெட்டு வருசமா கும்புடாம அப்டியே இருந்துருக்கு. நான் சின்னப் புள்ளையா இருக்கும்போதுதான் கோடாங்கியைக் கூப்டுக் கேட்டு உங்க அப்பாயிக்கு அருள் வந்துச் சொல்லித்தான் எடுத்துக் கும்புட ஆரம்பிச்சோம். நல்லாத்தான் கும்புட்டுட்டு இருந்தோம். இங்க தான் கைல காசு பணம் வந்துட்டா எல்லாம் தான் தான்ன்னு ஆயிருதே. அது இதுனு சொல்லித் தனித்தனியாப் போய்ட்டானுக. நாங்க ஒரு ரெண்டுக் குடும்பம் மட்டும் பெட்டியையும், கறுப்பன் அருவாளை மட்டும் எடுத்துட்டுப் போய்ட்டு வந்து கும்புட்டுட்டு இருக்கோம். இதுதான் நம்ம வரலாறு. இந்த மாதிரி ஏகப்பட்ட கதைகள் இருக்கு. இதுல எதுக்குமே நீ சொல்ற சயின்டிபிக் தியரி கிடையாது. ஆனா நம்பிக்கை இருக்கு. இவ்ளோ ஏன்..... அந்தப் பெட்டியைத் தூக்கிட்டு வர்றவரப் பாரு. தலைக்கு மேல வச்சு ஒத்தக் கையில புடிச்சுக்கிட்டே எவ்ளோ கேஸுவலா தூக்கிட்டு வர்றார். திரும்பிப் போகேல காரமடையைத் தாண்டுனதும் யானைக்கோவில்ல பத்ரகாளியம்மன் முன்னாடி நின்னு அருள் வந்து ஆடும். அருள் வராம அந்தப் பெட்டியத்

தூக்குறது இல்ல. நகுத்தக்கூட முடியாது. நான் சொன்ன அறுபத்து மூணு தெய்வமும் அந்தப் பெட்டிலயேறி இருக்கும். இப்போ இந்த ஆளுயுர அருவாளைத் தோள்ல துண்டு மாதிரித் தூக்கிப் போட்டுட்டுப் போறோமே. ஆத்துல இருந்து தூக்கிடுப் போறப்பத் தெரியும். உனக்கு அருள் வருமான்னு தெரில. ஒருவேளை வராம இருந்திருந்தா பத்திரகாளியம்மன் கோவில இருந்து கோவில் வீட்டுக்குப் போகப்போகத் தெரியும். இந்தத் தெய்வங்க எல்லாம் வானத்துல இருந்து குதிச்சு வந்தது இல்ல. நம்மள மாதிரி மனுசனா பொறந்து வாழ்ந்து இறந்துபோன நம்ம முன்னோர்கள் தான் இந்த தெய்வங்கள். வருசத்துக்கு ஒரு தடவ இந்த மாதிரி கும்புடுறது நம்ம முன்னோர்களை நினைவு கூர்றது, அவங்கள ஏதாவது ஒரு வகைல தொடர்புளையே வச்சுக்குற ஒரு சடங்கு. இது மூலமா நல்லது நடக்குமா? இல்லையான்னு தெரியாது. இப்டிக் கும்புட்டா ஒரு மனநிம்மதி, ஒரு ஆறுதல், நமக்குன்னு ஒன்னு இருக்குங்குற நம்பிக்கை. அவ்ளோதா" என்றார் வேல்முருகன்.

"இல்லப் பெரியப்பா, இப்போ நாங்க வருசா வருசம் வந்து கும்புட்டா எங்களுக்குக் கஷ்டமே வரப்போறது இல்லையா? கூம்புடுறவங்க எல்லாரும் கஷ்டம் இல்லாமையே இருக்காங்களா? நீங்க இவ்ளோ வருசமா கூம்புட்டுட்டு தான இருக்கீங்க. உங்களுக்குக் கஷ்டமே இல்லையா? அப்போ கூம்புட்டு என்ன பிரயோஜனம்?"

"அப்டி இல்லப்பா, கஷ்ட நஷ்டம் யாருக்குத்தான் இல்ல? இவங்க கஷ்டமே வராம காப்பாத்துவாங்களான்னு கேட்டா அதுக்குப் பதில் இல்ல. ஆனா கஷ்டம் வந்ததும் போய் நிக்க ஒரு இடம் வேணும்ல? இப்போ உனக்கு ஒருப் பிரச்சனைனா நீ என்ன பண்ணுவ?"

சட்டென்று "அப்பாட்ட கேப்பேன்" என்றான் குமார்.

"அவ்ளோதா, உங்கப்பானால தீக்க முடியாதப் பிரச்சனையா இருந்தாலும் மொதப் போய் நிக்குறது அவர் முன்னாடி தான, அதுமாதிரிதான் நம்ம வாழ்க்கைக்காக போய் நிக்கக்கூடிய ஒரு ஆறுதலான இடம் தான் குலதெய்வம்."

புரிந்தும், புரியாமலும் ஆத்துக்கு போய் நின்றவுடன் சுத்தம் செய்யும் வேலைகள் நடந்தது.

வருசா வருசம் ஆடி மாதம் பதினெட்டாந்தேதி, அந்தப் பெட்டி, அருவாள் எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு இரண்டு கிலோமீட்டர் தாண்டி இருக்கும் சண்முகநதிக்குக் கொண்டு சென்று அந்தப் பெட்டியைப் திறந்து, உள்ளே இருக்கும் சீலைத் துணிகளை நீரில் அலசி காயவைத்து, அதேபோல அந்தப் பெட்டியையும் கழுவி, காய வைத்து, பெட்டி முழுக்கச் சந்தனம், ஜவ்வாது பூசி, அதற்குள்ளே அந்தத் துணிகளை வைத்து அதனுடன் காதோலக்கருகமணி, காணிக்கை ,போன்றவைகளை உள்ளே வைத்து மூடி மேலே தென்னம் பாலையை வைத்து பின்பு அந்தப் பெட்டியை மல்லிகைப் பூவால் சுற்றிச் சுற்றி அலங்காரம் செய்து, அதேபோல அருவாள்களை கழுவி சுத்தம் செய்து அரளிப் பூவை வைத்துச் சுற்றி, கூர் முனையில் எலுமிச்சம் பழத்தைச் சொருகி வைத்து கும்பிட்டுவிட்டு அங்கிருந்து அனைத்தையும் பவனி வருவது போல எடுத்துவந்து கோவில் வீட்டில் வைத்துவிட்டு முன் சொன்னதுபோல இருபத்தோறு பள்ளையும் போட்டு கும்பிட்டுவிட்டு, அடுத்தநாள் கருப்பசாமிக்கும், மதுரைவீரனுக்கும் கிடா வெட்டி படையலிட்டு கும்பிடுவார்கள்.

ஆத்துமேட்டில் அலங்காரம் எல்லாம் முடிந்ததும் உடுக்கை அடிக்கும் கோடாங்கி வந்தமர்ந்தார். ஒவ்வொரு தெய்வமாக அழைத்து அந்தந்த காளையின் மேல் அருள் இறக்கி அவர்களின் பொருளை எடுத்து அவர்களிடம் கொடுத்து ஆட வைத்துவிட்டு அருளை மலையேற்றி விடுவார். முதலில் வேல்முருகனை அமர வைத்து கருப்பண்ணசாமியை அழைத்தனர். அவருக்கு அதிகநேரம் எடுக்கவில்லை. "டேய்..." என்ற பயங்கர ஒலியில் நாக்கை மடித்து, கண்கள் அகலப் பார்வையுடன் அருவாளை எடுத்து தலைக்கு மேலே சுற்றி சில நிமிடம் ஆடி அப்படியே மூச்சு வாங்க வலது காலின் மேல் இடது காலைப் போட்டு மீசையைத் தடவி விட்டவாறே அமர்ந்தார். அனைவரும் சென்று திருநீறு வாங்கினர்.

அவர் இயல்பு நிலைக்கு வர சிறிது நேரம் ஆனது. சுதாரித்து திரும்பிப் பார்க்கையில் குமாரை அமரவைத்து உடுக்கை அடித்துக்கொண்டிருந்தார் கோடாங்கி. மதுரைவீரனின் பிறப்பு, அவருடைய பொம்மித் திருமணம், திருச்சி மன்னனுக்கு தளபதியாக இருந்து கள்ளர்களிடமிருந்து திருச்சியை காப்பாற்றியது, அதை கேள்விப்பட்டத் திருமலைநாயக்கர் மதுரையைக் காக்க வீரனை தளபதியாக்கியது, அங்கே வெள்ளையம்மாளின் மீதான காதல், அதனால் சூழ்ச்சில் மாட்டிக்கொண்ட வீரனை மன்னன் மாறு கை, மாறு கால் வாங்கியது எல்லாம் பாடி முடிக்க இருபது நிமிடங்கள் ஆனது. முதலில் விருப்பமில்லாமல் பலரின் வற்புறுத்தலில் அமர்ந்த குமார் அந்தக் கதையை ஒவ்வொரு வாரியாக உணர்ந்து உள்வாங்கினான்.

கதையின் கடைசி வர வர அவனறியாமல் அழுகை வரத் தொடங்கியது. தலை வெடிப்பது போல வலி எடுக்கத் தொடங்கியது. உடுக்கை அடிக்கும் கோடாங்கி "..... வெள்ளைக் குதிரைல ஏறி வந்து, உன் மக்களுக்கு ஒரு வழி சொல்ல வாடா..." என்று இழுத்து "வாடா சக்கிலியப் பயலே" என்று சொன்னதுதான் அவன் கடைசியாகக் கேட்டது. அடுத்து என்ன நடந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்துத் தலை வலிக்க, மிகுந்த உடல் வலியோடு கண்முழித்துப் பார்க்கையில் கோவில் வீட்டில் சுவற்றில் சாய்ந்தவாறு ஒரு கால் மடக்கி,

ஒரு கால் நீட்டி அமர்ந்திருந்தான்.

தலை, கழுத்து, கை, கால் என பயங்கர வலியில் தலையை மெதுவாக நிமிர்த்தினான். அருகே கிட்டத்தட்ட அதே நிலையில் இருந்த பெரியப்பா அவனைக் கை தாங்களாக தூக்கினார். நின்ற குமார் உடலை நெட்டி முறித்து கை கால்களை உதறினான். வலது கால் பாதம் நன்றாகச் சிரைத்திருந்தது எரிந்தது. பெட்டியை எடுத்து ஆடியப் அண்ணன் அந்தப் பாதத்தில் திருநீரை எடுத்துப் பூசிவிட்டு, "போய் படுய்யா" என்றார். அப்டியே முன் அறையில் வந்து அமர்ந்து பெரியப்பா வேல்முருகனிடம் "என்ன ஆச்சு பெரியப்பா? மயக்கம் போட்டு விழுந்துட்டனா? யாரு இங்க தூக்கிட்டு வந்தது?" என்றான்.

லேசாகச் சிரித்துவிட்டு "அதெல்லாம் காலைலப் பேசிக்கலாம். நீ படு. நான் சாப்பாடு வாங்கிட்டு வரேன்" என்று எழுந்தார். "இல்ல பெரியப்பா. பசி இல்ல." "சரி. அப்போ தூங்கு. பள்ளையும் போட்டதும் வந்து கூட்டிட்டுப் போறேன். கொஞ்ச நேரம் படு." என்று சொல்லிவிட்டு கோவில் அறைக்குச் சென்றார். குமார் நெற்றிக்கு மேலே கை வைத்தவாறு கண்களை மூடி தூங்க முயற்சித்தான்.

அறைக்கு வெளியே பெண்கள் பேசுவது காதில் விழுந்தது "மதுரைவீரன் ஆடுனத பாத்திங்களா? அந்தக் கோடாங்கி திட்டிக் கூப்பிட்டதும் ஒரு கால்ல முட்டிபோட்டு ஒரு கால்ல தூக்கித் தூக்கி ஆட்டிக்கிட்டே ஒரு கையப் பின்னாடி மடக்கி ஒரு கைல அருவாளைத் தூக்கி சுத்துனதப் பாக்கும்போது அவங்க அப்பாவையேப் பாத்த மாதிரி இருந்துச்சு." என்று ஒரு பெண் சொல்ல, "ஆமக்கா. ஆனா அவருக்கே ஆத்துமேட்டுல ஆடுனதுக்கு அப்புறம் மலையேறிருமே, யானைக்கோவில் வந்துதான் திரும்பியும் வரும். ஆனா இந்தப் பய வீடு வந்து சேர்ற வரைக்கும் தூக்குன அருவாளை கீழ இறக்கலையே. ஆறுபேறு சேர்ந்து புடிச்சும் புடிக்க முடியலையே. ஒத்த கால இழுத்துகிட்டேவும்ல சன்னதிக்கு வந்து சேர்ந்துச்சு" "ஏண்டி, உள்ளுக்குளேயே இத்தனை வருசம் இருந்து வெளில வந்துருக்கான். அவ்ளோ சாமானியமா போவானா?" "என்னமோக்கா, ஆத்துமேட்டுல துள்ளி எழுந்து உக்காந்துச்சு பாரு, அப்பிடியே கண்ணுக்குள்ளையே இருக்கு" என்று பேசிக்கொண்டதை கேட்டுக்கொண்டிருந்த குமாரின் கண்கள் அதிர்ச்சியோடு கண் அயர்ந்தது.

இரவு பள்ளையம் போட்டுக் கும்பிட்டுவிட்டு அடுத்தநாள் காலை மறுபூஜை செய்துவிட்டு பெட்டி இருந்த பக்கம் திரையிட்டுவிட்டனர். திரைக்குநேர் எதிரே சற்று தள்ளி ஒரு திட்டில் கருப்பண்ண சாமியின் அருவாளும், மதுரைவீரனின் அருவாளும் வைத்து கிடாவெட்டிற்கு ஆயத்தமாயினர். இரண்டு கருப்புநிறக் கிடாவைக் கொண்டுவந்து நிறுத்தினர். ஒன்று கருப்பண்ண சாமிக்கும், மற்றொன்று மதுரைவீர சாமிக்கும் என்று அருவாளின் முன் மஞ்சள் நீரில் குளிப்பாட்டி மாலையிட்டு போட்டுவைத்து நிறுத்தப்பட்டது.

ஒவ்வொரு வருசமும் கருப்பண்ண சாமியின் கிடாவிடம் உத்தரவு கிடைத்துவிடும். ஆனால் மதுரைவீரனின் கிடா சாமானியமாக உத்தரவு தராது. உத்தரவு தருவது என்பது தலையை குலுக்க வேண்டும். சாதாரணமாக ஆடுகள் தலையிலோ, உடலிலோ நீர் பட்டாலே குலுக்குவது இயல்பு. ஆனால் கிடாவெட்டிற்கு வரும் ஆடுகள் எத்தனை முறை நீர் தெளித்தாலும் உத்தரவு கேக்காமல் தராது. மதுரைவீரனின் கிடாவிடம் மண்டியிட்டு அழுது புரண்டாலும் சிலைபோல நின்று மதுரைவீரனின் ஆயுதத்தை மேலும் கீழும் பார்த்தவாறு நிக்குமே தவிர குலுக்காது. ஆனா இந்த தடவ சீக்கிரம் உத்தரவு கிடைத்துவிடும் என்ற நம்பிகையில் அனைவரும் திரண்டிருந்த கூட்டத்தில் இந்தக் கதையெல்லாம் குமாரும் கிடாவை பிடித்துக்கொண்டு நின்றிருந்தான்.

இந்தமுறை எல்லோரும் ஆவலோடு எட்டி எட்டி பார்த்தவாறு குழுமியிருந்தனர். கருப்பண்ணசாமியின் கிடா வேல்முருகன் பொட்டிட்டு "உத்தரவு கொடுப்பா" என்று சொல்லி முடிக்கும் முன்பே முதலில் உடல் அதிர குலுக்கிவிட்டு ஆட்டின் காதுகள் முகத்தில் அடிக்க குலுக்கியது. அனைவரும் குலவையிட்டனர். பக்கத்தில் கிடாவும் குமாரும் என்ன நடக்கிறது என்று தெரியாமல் ஒரே மனநிலையின் நின்றிருந்தனர். வேல்முருகன் விபூதி தட்டை எடுத்து குமாரிடம் நீட்டி "பொட்டு வச்சு உத்தரவு கேளுப்பா" என்றார். அவனும் கிடாவின் நெற்றியில் பொட்டு வைத்து "உத்தரவு குடுங்க" என்று கூச்சத்தோடு சொன்னான்.

அவன் போட்டு வைத்ததும் கிடா குலுக்கிய வேகத்தில் குமார் கயிற்றை விட்டுவிட்டான். குலுக்கியதைப் பார்த்ததும் அனைவரும் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்து குலவையிட்டனர். கயிற்றை விட்டும் கிடா நகராமல் இரண்டு முன்னங் கால்களை தூக்கி திட்டில் வைத்து மதுரை வீரனின் அருவாளிடம் "வெட்டு... வெட்டு.... வெட்டு...." என்பதுபோல தலையை மேலும் கீழும் ஆட்ட சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் கண்ணீர் மல்க ஆர்ப்பரித்து கையை தலைக்கு மேலே தூக்கி கும்பிட்டனர். குமார் புல்லரித்துப் போய் நின்றிருந்தான்.

எல்லாம் முடித்துவிட்டு மாலை குமாரை திருப்பூருக்குப் பஸ் ஏற்றி அமர வைத்துவிட்டு "தெய்வம் உன்கிட்ட இருக்குதா, கூட இருகுதாங்குற கேள்விக்கு, உனக்குள்ள இருக்குங்குற பதில் கிடைச்சுருக்கும்னு நம்புறேன். உங்கப்பன் கிட்ட சொல்லு எல்லாம் நல்லபடியா நடக்கும்ன்னு." என்று சொல்லிவிட்டு கிளம்பினார். பஸ்ஸில் ஜன்னலோரம் அமர்ந்தும் கண் சொக்கியது. உடல் வலி போகவில்லை. ஆனால் மனம் லேசாக.

மொழிபெயர்ப்பு

தமிழில்: க. மோகனரங்கன்

# வாழ்க்கை விந்தையானது, கதையைக் காட்டிலும்



நெடுவழிப் பயணமதில்
ஏதோவொரு நிறுத்தத்தில்
இடைவழியில்
இருவரில் ஒருவர்
இறங்கிப்போய்விடுவோம்
எனத் தெரிந்தேதான்
அறிமுகமாகிக்கொண்டோம்.
இப்போதுதான் அத்தருணம்
இதுதான் அந்நிறுத்தம்
என்பதறியாது,
இன்னும் தொலைவில்
எதிர் வரும் காலத்தில்
எங்கோ இருப்பதான
பாவனையோடு பழகினோம்.
இவ்வளவு தூரம்
சேர்ந்து பயணித்த பாவத்திற்காவது
இறங்கிப் போகுமுன்
இங்கிதம் கருதி
வருகிறேன் என்றொரு
வார்த்தையைச் சொல்லிப்
பிரிந்திருக்கலாம்!
நடைமேடைக் கடைகளை
வேடிக்கை பார்க்கவென
திரும்பிய சிறு பொழுதில்
அரவமின்றி மறைந்துவிட்டாய்.
எந்தக் கதையானாலும்
மூடி வைக்கும் முன்
முடித்தும் வைக்கவேண்டும்.
வாசிப்பவர்களின்
எதிர்பார்ப்புக்கு மாறாக,
எழுதியவரின் விருப்பமாக
எதிர்பாராத ஒரு தருணத்தில்
எதேச்சையாகவும் அது நேரலாம்.
எதிர்கொள்வதற்கு முதலில்
ஏமாற்றமாக இருந்தாலும்
ஏற்றுக்கொண்ட பிறகு
மெல்ல மனம் தெளியும்.
ஆனால் நீயெனக்கு
அளித்துச் சென்றதோ
அவ்வாறான ஒன்றல்ல
ஆயுளுக்கும் அலைகழிப்பது;
கவனக் குறைவாக
கடைசிப் பக்கமில்லாத
கதைப் புத்தகமொன்றை
படிக்க நேர்ந்ததைப் பொலொரு தீராத திகைப்பு.

# LIFE IS STRANGER THAN STORY

*Fully knowing that*
*in this long journey*
*In some stop*
*Midway*
*One of the two*
*would alight and leave*
*we have got familiar with each other*
*not knowing that this is the moment*
*and this is that halt*
*we interacted with each other*
*pretending all along*
*that they are somewhere far away*
*in the future*
*At least for the sin of having travelled together*
*all this long*
*before alighting*
*you could have uttered 'Fare thee well'*
*and moved on!*
*In the short while when I turned away*
*To see the roadside shops*
*You disappeared all too quietly*
*Whatever the story be*
*Before closing if*
*Should complete it too.*
*Against the expectation of the readers*
*As the wish of the writer*
*It could happen at an unexpected moment*
*Though initially it would be disappointing to face it*
*Once we accept it*
*The heart would slowly clear,*
*But that which you have given me and left*
*is not one of that.*
*It is an enduring angst*
*of reading by mistake*
*a story book sans the last page*
*- A feeling of all-time wreckage.*



**ஆங்கிலத்தில்: அநாமிகா ரிஷி**


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023